உ
சிவமயம்

# ஸ்ரீ ஐயனார் சுவாமி கோவில்

# கும்பாபிஷேக சிறப்பு மலர்



## ஆலய பரிபாலன சபை
## நாயக்கர்சேனை, மாம்புரி
## புத்தளம்

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

230.6
ஐயனா
SL/PR

18 - 06 - 1995

நாயக்கர்சேனை ஐயனார் ஆலய
கும்பாபிஷேகம் இனிது நிறைவு பெற
அப்பன் ஐயனை வேண்டுகின்றோம்

புத்தளம் நகரில் நவ நாகரீக தங்க வைர
நகைகளுக்கு நம்பிக்கையும்
நாணயமும் மிக்க தங்க நகை மாளிகை

**ஸ்ரீ முருகன் ஜூவலர்ஸ்**

ශ්‍රී මුරුගන් ජුවල්ලර්ස්

**SRI MURUGAN JEWELLERS**

**08, FIRST CROSS STREET,**
**PUTTALAM**

உ

சிவமயம்

"மேன்மை கொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்"

# நாயக்கர்சேனை
# ஸ்ரீ ஐயனார் சுவாமி கோவில்
# கும்பாபிஷேக சிறப்பு மலர்

**16 - 06 - 1995**

காப்பு



**திருவாக்கும் செய்கருமம் கைகூடும் செஞ்சொல்**

**பெருவாக்கும் பீடும் பெருக்கும் உருவாக்கும்**

**ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்**

**காதலால் கூப்புவர் தம் கை**

# சமர்ப்பணம்

மதுரமர நிழலினிலே மையல்கொண்ட ஐயனயே
மனமுருகி கரம்கூப்பி வணங்குகிறோம் கையனயே
தேறா வினையகல அவன்வீதி வலம்தனிலே
பேறாம் கருணைபெற புகழ்பாடிப் புணைந்தேனே.

வாழும் உயிர்க்கெலாம் வினைதீர்க்கும் பெருமானை
நானும் பணிவேனே நலஞ்சேர்க்க ஜெகமெங்கும்
காவல் தெய்வமென புவிகாக்கும் நம்மவனை
ஆவல் மீதூர அவன்புகழைப் பாடுகிறேன்.

ஆடும் அடியவர்க்கு அவன்அருளே பெருகட்டும்
பாடிப் பணிவோர்க்கு அவன்கருணை காக்கட்டும்
நாடும் அடியவர்க்கு அவன் நாமம் துணைநிற்கும்
தேடும் அடியவர்க்கு அவன்தாள்கள் பிணையாகும்.

பூரணை புட்கலையாம் துணைத்தேவியர் இருவருமே
வாரணம் மீதினிலே வலம்வந்திடும் திருநாளில்
ஊரெல்லாம் திருநாளே உவகையிலே கடலாடும்
பாரேந்தும் சேனைபுகழ் ஐயனவன் திருவருளே.

வாரணம் மீதினிலே வீற்றிருக்கும் கோலம்காண
வந்திடும் அடியார்கள் வாழ்த்திடும் காட்சிபாரு
தோரணம் அசைந்தாடும் தோகையுடன் மயிலாடும்
தோற்றத்தில் நின்றாடும் மனமுருகி இசைபாடும்.

நீரோடு நிலம்வாழும் நீள்புவியில் சேனைபுகழ்
நித்திலமாய் திகழ்ந்திடவே நின்னருளை வேண்டிநின்றே
ஊரோடு உறவோடு உன்னடியை நாடிவந்தே
உன்புகழைப் பாடுதலில் உள்ளம் நிறைந்துவிடும்.

ஆறுதல் தேடிவந்தோம் அடியவர்கள் கூடுகின்றோம்
அன்பரவர் குறைதீர்க்கும் ஐயனென்றே நாமறிவோம்
பாராளும் பெருமானே பக்தர்நிறை கோயிலிலே
பரவசக் கூத்தாடி நிதம் உருகிப் பணிகின்றோம்.

நின்கருணைக் கடற்பெருக்கில் நிம்மதியைக் காணுகின்றோம்
பொன்னோடு பொருள்சூட்டிப் பெருமிதமாய் பாடுகின்றோம்
பூரணை புட்கலையின் மணவாளப் பெருமானின்
பூரணை விழாநாளில் கொண்டாடிக் கூடுகின்றோம்.

அலங்காரத் தேரினிலே ஐயனவன் அழகினிலே
ஆடிவரும் பக்தர்களே அவன்புகழைப் பாடுங்களே
நிம்மதியைத் தந்திடுவான் நிலவுலகே ஆட்சியாம்
நம்குறையைத் தீர்க்கவென்றே இப்புவியில் கோயில் கொண்டாய்

நாயக்கர் குளப்பதியே நம்மவருக்கு அருளுந்தலம்
நாளும் மரநிழலினிலே கூடுவோர்க்கு வாழ்வுமிகும்
ஐயனென்றே பாடிநின்றால் அனைத்தையுமே அடைந்திடலாம்
மெய்யிதனை உணர்ந்தவர்க்கே மேன்மைமிகு வாழ்வுமிகும்.

# மலர்க்குழுத் தலைவர் மகிழ்வோடு......

நாயக்கர்சேனை ஸ்ரீ ஐயனார் கோவில் குடமுழுக்கு வைபவத்தையொட்டி இச்சிறப்பு மலரை வெளியிடுகின்றோம்.

இம்மலரின் நோக்கம் குடமுழுக்கு நாயகனுக்கு புகழ் சேர்ப்பதே. மக்களிடையே புரிந்துணர்வை யேற்படுத்துதல், செய்ந்நன்றியறிதல், பாரம்பரியங்களைப் பேணுதல், வரலாற்றை அறிதல், சமய நெறிக்குட்பட்டொழுகுதல் ஆகியவை அடக்கம். நிச்சயம் இந்து சமயத்தை பரப்புவதற்கல்ல.

வட மேல்மாண சைவ சமயத்தின் தொன்மை, பாரம்பரியங்கள், கல்வி, பங்களிப்புகள் ஆகிய அம்சங்களை எமது சக்திக்கு எட்டியமட்டும் சேகரித்து இம்மலரில் தந்துள்ளோம். இம்மலர் ஒரு சொற்பகால தயாரிப்பு. இளம் எழுத்தாளர்களும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளனர். பல சிரமங்களுக்கு மத்தியில் கூடுதலான முயற்சியுடன் வெளிவருவதால், சில ஆக்கங்களில் முழுநிறைவை எதிர்பார்க்க முடியாது இருக்கும். அடுத்த வெளியீடுகளைத் தருபவர்கள் இப்பணியை முழுமையாக்குவர்.

இம்மலரை தங்கள் கரங்களில் சேர்ப்பதற்கு கருக்கட்டிய எனது மலர்க் குழுவுக்கும் ஆலோசனைகள் வழங்கி வடிவம் கொடுத்த பேராதனை பல்கலைக்கழக முதுநிலைவிரிவுரையாளர் திரு. இரா. வை. கனகரத்தினம் அவர்கட்கும் போசாக் கூட்டிவளர்த்த பெரியவர்களுக்கும். நண்பர்களுக்கும், தகவல்கள் தந்துதவியோர்களுக்கும், நன்கொடையாளர்களுக்கும், சிறப்பு கட்டுரை தந்துதவிய பேராதனை பல்கலைக்கழக தமிழ்த்துறைத்தலைவர் பேராசிரியர் திரு. சி. தில்லைநாதன் அவர்கட்கும். ஆசிச் செய்திகளை பெருமனதோடு தந்துதவிய பெரியோர்களுக்கும், எமது மாகாண இளம் எழுத்தாளர்களுக்கும் நன்றியுடையவனாவேன்.

இம்மலர் மலர்ச்சியின் மகிழ்வும், பெருமையும் எனது மலர்க் குழுவோடு மாத்திரம் நின்று விடாமல், இந்துமக்கள் அனைவரையும் சென்றடைய எம்பெருமானை வணங்கி அவர் திருப்பாதங்களுக்கு காணிக்கையாக இம்மலரை சமர்ப்பிக்கின்றேன்.

**வணக்கம்**

**கே. பசுபதிப்பிள்ளை**

## வருக வருக ஐயனே வருக்

மருத மர நிழலிலே குடி கொள்ள வருக
மாயவன் சிவன் மகன் ஐயனே வருக.
நேயமாய் பூரனை நினை வோனே வருக
தூய்மையாய் மனத்துயர் தீர்த்திட வருக
பூரணைக் கிறைவா வருக வருக
புட்கலைக் கணவா வருக வருக
புத்தளம் பதியில் உளர்ந்திட வருகவே வருக.

அரகர குமரா அடியேனழைக்க வருக
முக்கண்ணா தந்த மூர்த்தியே வருக
செக்கர் வாணிறைச் சடைச் செம்மலே வருக
செண்டாயுதனே சீக்கிரம் வருக
திரிபுரம் எரித்த எங்கள் புதல்வா வருக
உரிமையாய் நாயக்கர் சேனைதனில் உளந்திட வருக வருக

அண்டர்கள் போற்றும் ஐயா வருக
ஐங்கரன் துணைவா வருக வருக
வண்டர் துளமணி மகனே வருக
வினையெலாம் களையவே வருக வருக
கருணையைப் பொழிய வருக
கண் கண்ட தெய்வமே வருக
நாயக்கர் சேனைதனில் அமர்ந்திடவே வருக.

திருமதி. T.இராஜேஸ்வரி
நாயக்கர் சேனை

## நல்விளக்குகள்

அன்பு விளக்கு அன்னை.
அறிவு விளக்கு தந்தை.
ஒளி விளக்கு ஆசான்.
பகல் விளக்கு சூரியன்.
இரவு விளக்கு சந்திரன்
குல விளக்கு இல்லாள்
குத்து விளக்கு மணப்பெண்.
ஞான விளக்கு முனிவன்.
கை விளக்கு நண்பன்.
அணையா விளக்கு இறைவன்

ப. ஹேமநிலா.

இந்து சமய கலாச்சார முத்தமிழ்ச்சங்கம்
சபரிமலை ஸ்ரீ சாஸ்தாபீடம்
கொழும்பு

## பிரதம சிவாச்சாரியார் அவர்களின் ஆசிச்செய்தி

லோக வீரம் மஹா பூஜ்யம்
சர்வ ரக்ஷ கரம் -விபும்!
பார்வதி க்ருதயா நந்தம்
சாஸ்தாரம் ப்ரணமாம்மியகம் !!

கலியுக வரதனுகிய (ஹரி ஹர சுதன்) ஸ்ரீஐயனுர் ஆலய மஹா கும்பாபிஷேகத்தை நடாத்தி வைக்கின்ற பெரும் பாக்யம் எமக்கு கிடைத்துள்ளது.

ஹரி என்முல் விஷ்ணு ஹரன் என்முல் சிவன் சுதன் என்முல் மகன். எனவே ஸ்ரீ ஐயனுரை வணங்குபவர்களுக்கு சிவன் - விஷ்ணுவின் பரி பூரணமான அருளும் கிடைக்கும் என்பது திண்ணம்.

அதர்மங்களைஅழித்து தர்மத்தை நிலைநாட்டவே ஸ்ரீஹரிஹரசுதன் அவதாரம் எடுத்தார்.

பூரணை புஷ்கலை அம்பிகை சமேதராக கோவில் கொண்டுள்ள (ஸ்ரீ ஹரிஹரசுதன்) ஸ்ரீ ஐயனுர் சுவாமியின் திருவருள் அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என்றும்.

நாட்டில்,அமைதி, சமாதானம் நிலவ ஹரிஹரசுதன் ஐயன் ஐயப்பனின் திருவடிகளை பிரார்த்தித்து சகல அடியார்களுக்கும் நல்லாசிகள் கூறுகிறேன்.

"சாமியே சரணம் ஐயப்பா"

ஸ்ரீ பூதநாத சதானந்த
சர்வபூத தயாபர
ரக்ஷ ரக்ஷ மஹா பாபோ
சாஸ்த்ரே துப்யம் நமோ நம:
'சாமியே சரணம் ஐயப்பா'

**"ஸ்ரீ ஐயப்பதாஸன்"**
**சாம்பசிவ சரவணபவக் குருக்கள்**
**(சபரிமலை ஸ்ரீ சாஸ்தா பீடாதிபதி)**

# சரஸ்வதிக்கோர் கும்மி

**தந்தன நாதினம் தன்னானே தன**
**தந்தன நாதினம் தன்னானே !!**

வாருங்கடியம்மா வாருங்கடி
வாணியம்மா புகழ் பாடுங்கடி
கொட்டுங்கடி கை கொட்டுங்கடி
குனிந்து கும்மி கொட்டுங்கடி

**தந்தன நாதினம் தன்னானே தன**
**தந்தன நாதினம் தன்னானே !!**

ஆதிபரா சக்தி தானடியவள்
அம்பிகை பிரமாணி யானவள்
பாதி சொரூபினி யானவள் - அவள்
பாட்டுக்கு நாயகியானவள்

**தந்தன நாதினம் தன்னானே தன**
**தந்தன நாதினம் தன்னானே !!**

கல்விக்கு தெய்வமானவள் அவள்
கள்ளம் கபடமற்றவள்
வெள்ளை யுள்ளம் கொண்டவள் - அவள்
வேதம் நன்கு கற்றவள்

**தந்தன நாதினம் தன்னானே தன**
**தந்தன நாதினம் தன்னானே !!**

வெண்டாமரையில் வீற்றிருப்பாள்
வீணை கையில் ஏந்திருப்பாள்
வேதங்கள் நன்கு ஓதிடுவாள்
பாவங்கள் எல்லாம் தீர்த்திடுவாள்.

**தந்தன நாதினம் தன்னானே தன**
**தந்தன நாதினம் தன்னானே !!**

நாவில் நன்கு உறைந்திடுவாள்
நல்வாக்கு செலுத்திடுவாள்
பாவில் நன்கு உறைந்திடுவாள்
பண்டிதனாய் செய்திடுவாள்.

**தந்தன நாதினம் தன்னானே தன**
**தந்தன நாதினம் தன்னானே !!**

தீபங்கள் ஏற்றிடுவோம்
ஆரத்தி செய்திடுவோம்
பாவங்கள் தீர்த்திடவே
பாதமலர் பணிந்திடுவோம்.

**தந்தன நாதினம் தன்னானே தன**
**தந்தன நாதினம் தன்னானே !!**

பசுபதிப்பிள்ளை

RAMAKRISHNA MISSION
(Ceylon Branch)
40, RAMAKRISHNA ROAD
COLOMBO - 6.
Phone: 588253
12.4.95

'இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க'

# வாழ்த்துச் செய்தி

'பாமரனைப் பண்புள்ளவனாக்கி தெய்வீக நிலைக்கு உயர்த்தும் சக்தியை உள்ளடக்கியதே சமயம்' என்று சமயத்தின் உயர்நோக்கத்தை வெளிப்படுத்துகிறார் சுவாமி விவேகானந்தர். தன்னலமற்ற இறைத் தொண்டின் மூலம் மனதில் பக்தியும், தூய்மையும், அகங்காரமின்மையும் வளரும்; சமுதாயத்தில் ஒற்றுமை வளரும்; அமைதி நிலவும். நமது கோயில்கள் அப்படிப்பட்ட உயர்பண்புகளை வளர்க்க உதவும் தெய்வீக அமைப்புகளாம். கோயில் திருவிழாக்களும், தினசரி விசேட பூசைகளும் அத்தகைய உயர்நோக்கத்தைக் கொண்டவை. கோயிலுக்குச் செல்பவர்கள் சிரத்தையுடனும், தூயமனதுடனும், இறைசிந்தனையுடனும் அங்கு நடைபெறும் பூசைகளில் பங்கேற்க வேண்டும். அப்பொழுதுதான் கோயிலின் தெய்வீக சூழல் பாதுகாக்கப்படும். கோயில் சுற்றுப்புறங்களையும் அசுத்தம் செய்யாது தூய்மையாக வைத்திருத்தல் வேண்டும். இறைவனது சேவையில் மிகுந்த கவனம் தேவை. லௌகிக சிந்தனைகளுக்கு அங்கு இடம் தரலாகாது.

நாயக்கர்சேனை ஊர் மக்கள் தங்கள் இறைபக்தியின் சின்னமாக ஒரு புதிய ஐயனார் கோயிலை அங்கு அமைத்துள்ளார்கள். அக்கோயிலின் கும்பாபிஷேகம் 16.06.95 அன்று சிறப்பாக நடைபெற உள்ளது என்பதை அறிந்து மகிழ்ச்சியடைகிறோம். ஆண்டவனது திருப்பணியில் ஈடுபட்டுள்ள அவர்களது மத்தியில் ஒற்றுமையும், சாந்தியும், எல்லா நலன்களும் வளர்வதாக என இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

ஆலய பரிபாலன சபையினருக்கு எனது பாராட்டுதல்கள்

அன்புடன்
சுவாமி ஆத்மகனாநந்தா

## நாயக்கர் பதிநாயகர்க்கு

| | |
|---|---|
| 1. நாயக்கர் பதி நாயகர்க்கு | லாலி சுப லாலி |
| நலமருளும் ஐயனார்க்கு | லாலி சுப லாலி |
| கயமேறும் காவலர்க்கு | லாலி சுப லாலி |
| கடல் சேனைத் தேவர்க்கு | லாலி சுப லாலி |
| 2. பூரணையின் நாயகர்க்கு | லாலி சுப லாலி |
| புட்கலையின் பூரணார்க்கு | லாலி சுப லாலி |
| வாரணம் ஊர்பவர்க்கு | லாலி சுப லாலி |
| வானவரும் வணங்குவர்க்கு | லாலி சுப லாலி |
| 3. மதுர நிழலைக் கொண்டவர்க்கு | லாலி சுப லாலி |
| மாங்கல்யத்தை காப்பவர்க்கு | லாலி சுப லாலி |
| வாழும் எம் ஐயனுக்கு | லாலி சுப லாலி |
| வரமருளும் ஐயனார்க்கு | லாலி சுப லாலி |
| 4. தேவாதி தேவனார்க்கு | லாலி சுப லாலி |
| திருப்பதியில் உறைபவர்க்கு | லாலி சுப லாலி |
| பூவாதி புவனியர்க்கு | லாலி சுப லாலி |
| பொன்முடி மேனியர்க்கு | லாலி சுப லாலி |
| 5. தேர் ஏறி வருகின்றார் | லாலி சுப லாலி |
| தேவியர்கள் துணையுடனே | லாலி சுப லாலி |
| ஊர் ஒத்து வடம்பிடிப்போம் | லாலி சுப லாலி |
| உளமுருகி பாடிடுவோம் | லாலி சுப லாலி |
| 6. ஐயனின் புகழ்பாடி | லாலி சுப லாலி |
| ஆதரவைத் தேடிடுவோம் | லாலி சுப லாலி |
| வாரிரோ வாரிரோ | லாலி சுப லாலி |
| வளர்பூமி வாழ்பவரே | லாலி சுப லாலி |
| 7. திரைசூழும் சேனையிலே | லாலி சுப லாலி |
| திகழ் ஐயன் கோயிலிலே | லாலி சுப லாலி |
| திக்கெட்டும் புகழ்மேவும் | லாலி சுப லாலி |
| தேவனவன் ஐயப்பன் | லாலி சுப லாலி |
| 8. ஆராதனை புரிவோம் | லாலி சுப லாலி |
| அகங்காரம் நீக்கிடுவோம் | லாலி சுப லாலி |
| பேறான பெருவாழ்வை | லாலி சுப லாலி |
| பெற்றிடவே கூடிடுவோம் | லாலி சுப லாலி |
| 9. அலங்காரத் தேரினிலே | லாலி சுப லாலி |
| ஐயனவன் பவனியிலே | லாலி சுப லாலி |
| இலங்கிடும் அழகினிலே | லாலி சுப லாலி |
| எல்லோர்க்கும் அருள்தரவே | லாலி சுப லாலி |
| 10. ஹரி ஹர சுத ஐயனார்க்கு | லாலி சுப லாலி |
| அருகமர் பூரணை புட்கலைக்கு | லாலி சுப லாலி |
| விரும்பும் சேனை அடியார்க்கு | லாலி சுப லாலி |
| மங்களம் சுப மங்களம் | லாலி சுப லாலி |

இயற்றியவர் - யாழ் அனலையூர் க.சௌந்தரராஜ சர்மா பாடியோர் - S. கமலாம்பிகை S. சௌந்தரராணி

## පාර්ලිමේන්තුව
## பாராளுமன்றம்
## PARLIAMENT

**1995-06-04**

කල්පිටිය ප්‍රාදේශීය ලේකම් කොට්ඨාශයට අයත්, නායක්කර්චේන ග්‍රාමයේ පිහිටි අයියනායක දේවස්ථානයේ ප්‍රථම කුම්භාභිෂේක උත්සවය නිමිත්තෙන්, ශුභ පැතුම් පණිවුඩයක් නිකුත් කිරීමට ලැබීම ගැන මම සතුටු වෙමි.

ප්‍රදේශය භාර පාර්ලිමේන්තු මන්ත්‍රීවරයා වශයෙන් ජාති - ආගම - කුල භේදයෙන් තොරව ඕනෑම උපකාරයක් කිරීමට සූදානම් බව විශේෂයෙන් සඳහන් කරමි.

තවද ඔබ සැමට සාමය සහ සමෘද්ධිය වෙනුවෙන් දෙවි පිහිට ලැබේවායි මම අවංකවම ප්‍රාර්ථනා කරමි.

**යූසස් පීරිස්**
**පුත්තලම් දිස්ත්‍රික් පාර්ලිමේන්තු මන්ත්‍රී.**

கொழும்பு தமிழ்ச் சங்கம்

கும்பாபிஷேகம் சிறப்புற்று அமையட்டும்

அழகுக்கு அழகு சேர்க்கும் தங்க நகைகளை
தரமான தங்கத்தில் செய்து தருபவர்கள்



**AMBAL'S JEWEL HOUSE**
***156, SEA STREET,***
***COLOMBO -11***

*குடமுழுக்கு வைபவம் சிறப்பாய் அமையட்டும்!*
*நாடும் வீடும் செழிக்கட்டும்!*

Makers of Genuine Gold Jewellery
**VICSHIAS JEWELLERY**
***183/2 Sea Street,***
***Colombo -11***

# ග්‍රාමීය ජනතාවගේ අයියනායක දෙවියන් සඳහා වැඳුම් පිදුම්

ආදි කාලයේ අපේ මුතුන් මිත්තන් අද මෙන් නොව කැලෑවලින් ගහන වූ ප්‍රදේශවල වාසය කල අතර මොවුන් නිතරම වනයේ විශාල ගස් විශේෂයෙන් නා, ඇසටු, බෝ, නුග, වැනි ගස් කිසියම් අද්භූත ලෙස දේවත්වයෙන් සැලකූහ. සමහරු කොහොඹ වැනි අතු සමහර කොලවර්ග එල්ලා තමන් යන කාර්යය ඉටු කර දෙන ලෙස පිහිට ඉල්ලා සිටියහ.

පසු කාලීනව ක්‍රම ක්‍රමයෙන් දියුණු වී මෙම විශාල ගස් අතර විශේෂ ස්ථානයක ගලක් වැනි දෙයක් තබා එයට අයියනායක දෙවියන් ලෙස නමකින් වැඳුම් පිදුම් කිරීමට පටන් ගත්හ. කාලීනව මෙම කුඩා දේවොල් ජනගහනය වැඩිවීමත් සමගම තරමක් විශාල දේවාල බවට පත්වී එම දෙවොලට කපුරාල යන නමකින් පුද පූජා වලට හා කන්තලව් යාතිකා කියවීමට පුද්ගලයෙකු පත් කරන ලදී.

මෙවැනි පරිවර්තනයකින් ආරම්භවූ අයියනායක දේවාලය ද්‍රවිඩ භාෂාවෙන් අයියනාර් කෝවිල් ලෙස ද තවත් සරලව සිංහල භාෂාවෙන් බණ්ඩාර දේවල ලෙසද ප්‍රදේශයෙන් ප්‍රදේශයට වන්නි බණ්ඩාර, හැඩබණ්ඩාර, කලු බණ්ඩාර වැනි නම් වලින්ද ඒ ඒ දෙවියන්ට ආවේනික වූ කථා පුවතකින්ද පසුකාලීනව එම දෙවියන්ට ප්‍රතිමාවක් නෙලීමෙන්ද ඒවා එම දේවාල තුල තැන්පත් කර පුද පූජා පැවැත්වූහ.

විශේෂයෙන් මෙම දේවාල ලංකාව පුරාම ඝන කැලෑ ආශ්‍රිතව දක්නට ලැබේ. එයිනුදු විශේෂයෙන් මෙම දෙවොල් උතුරු මැද, වයඹ, නැගෙනහිර, ගිනිකොන, කතරගම, මොනරාගල වැනි ප්‍රදේශවලද උතුරේද දක්නට ලැබේ. තවද වන්නි දිස්ත්‍රික්කයේද මෙම දෙවොල් විශේෂයෙන් දක්නට ලැබේ.

මෙම දේවොල් විශේෂයෙන් ග්‍රාමීය ජනතාව ඉතා දැඩි භක්තියෙන් පුද පූජා පවත්වති. මොවුන් අදටත් මෙම දෙවියන්ගෙන් ඉල්ලා සිටින පිහිට අතර වසංගත රෝග, නියංකාලවලදී වර්ෂාව කෘෂිකාර්මි ටකියාවන් නියුතුවූවන් රෝග වලින් තම කෘෂිභෝග ආරක්ෂා කර දෙන ලෙසත් තමන්ගේ ගව එළු බැටලුවන් රෝග වලින් ආරක්ෂා කර දෙන ලෙසත් තම තමන්ට පැමිනෙන සියලුම අතුරු උපද්‍රවයන් පැමිණි කල එයින් ආරක්ෂා කර දෙන ලෙසත් ඉන්පසු එයට තමන් භාර හාර වූ දේවල් ඔප්පු කර කන්තලව් කරති ඔවුන් ඒ සඳහා ඔප්පු කරනුයේ ඉතාමත් භක්තියකිනි. එනම් කෙම්මුර දින ලෙස හැඳින්වෙන බදාදා සෙනසුරාදා දිනයන්හි පිරිසිදුවට හා පිරිසිදු ඇඳුම් හැඳ දෙවොලට

ගොස් කිරි, කිරිබත්, රස කැවිලි, කෙසෙල් යනාදි දේවල් පිළියෙල කොට පහන් දල්වා කපුරු සුවඳ දුම් පේ කොට දෙවොලේ කපුරාල ලවා යතිකා කොට තමන්ට දෙවියන්ගේ පිහිට ලැබුණු බවත් එයට පින් දීමක් ලෙස මෙම භාර හාර බාරගන්නා ලෙසත් කන්නලව් කර කියා සිටිති.

තවද ප්‍රානයට ප්‍රානයක් ලෙස පොල් පැලයක්ද ශරීරයේ රෝග වලදී ලත් පිහිටට (ශරීරයේ කොටස් ලෙස තඹ හෝ පිත්තලවලින් සෑදූ අවයව පූජා කරති. මේ හැර අස්වැන්න කපා පාගා ගැනීමෙන් පසුව දිනයක් නියම කර සියලුම ගොවීන්ගෙන් සහල් ලබා ගෙන දෙවොලේ වාර්ෂික මංගල්‍යය නිමිත්තෙන් කිරිබත්, කැවුම්, කෙසෙල් සහ එලවළු වලින් සමන්විත විශේෂ පූජාවක් පවත්වන බවට අවට ගම්සියල්ලටම අනබෙර ගසා දන්වා ප්‍රදේශියව සියලුම ජාතීන් එකමුතුව විශේෂ දානමය පූජාව මෙම අයියනායක දෙවියන්ට පුදා ඉන්පසු කපුරාල විසින් විශේෂ යාතිකාවකින් පසු පැමිණි සියලු දෙනාටම මෙම එලවළු සහිත දානය බෙදා මෙම මංගල්‍යය නිම කිරීමෙන් බලාපොරොත්තුවන්නේ මෙම අයියනායක දෙනියන්ගේ අඩවිය නැත්තම් තවත් ලෙසකින් හඳුන්වන්නේ ගම්භාර දෙවියන්ගේ අඩවියේ සියලු ගම් වලට අයියනායක දෙවියන්ගේ පිහිටින් සියලුම අතුරු උපද්‍රවයන්ගෙන් ආරක්ෂා කර දෙන ලෙස පිහිට ඉල්ලා සිටීමෙන් මෙම මංගල්‍යය අහවර කරනු ලැබේ.

මෙම විස්තරයේ සඳහන් ලංකාවේ පිහිටි සයලුම අයියනායක දෙවොල් අතර එකක් වන නායකකර්වේනයි අයියනායක දේවොලට ආවේනික ඓතිහාසික සිද්ධිය ලෙස 16 ශත වර්ෂයේදි ලංකාව පාලනය කල මහනුවර රජ දරුවන් වන නායකර්වංශිකයන්ගේ නෑ පිරිසක් වන නායක්කර් වර්ගය මෙහි විසූ බවට සාධක තිබී ඇත. තවද මෙහි වාර්ෂික මංගල්‍ය දින ලෙස ජනවාරි 14 දින (තෛයිපොන්ගල්) දිනයද දෙසැම්බර් මස (තිරුකාර්තිකෛයි) උත්සවයද දැනට සමරමින් පවති.

දැනට මෙම දෙවොලේ සියලුම කටයුතු නායත්තර්සේනේ පදිංචි සදාසිවම් සෙට්ටියාර් මැතිතුමා විසින් සියලුම කටයුතු භාරව නිසියාකාරව කරගෙන යන අතර මෙම දේවාලයෙහි සියලුම අළුත්වැඩියාවන් කර (කුම්භාබිශේකම්) උත්සවය පැවැත්වීමට කටයුතු යොදා ඇත්තේ 1995 - 05 - 29 දිනය මෙදින පුරා පැවැත්වෙන සියලුම පුද පූජා නායකකර්වේන අයියනාර් දෙවිඳුන්ට සහ පරිවාර සියලුම දෙවිවරුන්ටත් පුද පූජා කොට එමගින් ලබා ගන්නා දේවාශිර්වාදයෙන් අවට ගම් වලටත් ප්‍රදේශයට පමනක් නොව මුළු මහත් ශ්‍රී ලංකාවටම සෞභාගයෙන් සාමයෙන් පිරේවායි පතමු.

ඇම්. ආරියනාදන්.

# Message From

## Al-haj M.H. Mohamed Navavi

Member of Provincial Council (N.W.P)
And S.L.F.P. Organizer.

The Hony . President,
Sri Iyanar Kovil,
Nayakkar Chenai,
Mampuri.

It gives me great pleasure in extending my best wishes on the occasion of 'Kumbabisheham' ceremony to be held on 16. 06. 1995 at the Sri Iyanar Kovil, Nayakkar Chenai, Mampuri.

I sincerely pray for peace, prosperity and amity to prevail in Sri Lanka.

# எங்கள் தேடலில் இப்படி ஓர் அதிசயம்

கற்பிட்டி பகுதியிலுள்ள நாச்சிக்களி என்ற இடத்தில் வெல்லம் கரைக்கிராமம் உண்டு. இக்கிராமத்தில் நாச்சியம்மன் கோவில் கொண்டு இருந்ததாக கூறப்படுகின்றது. இன்று தரைமட்டமாகி காட்சி தருகின்றது. அன்னியர் ஆட்சிக்காலத்தில் நிலைகுலைந்ததாக இப்பகுதி மக்கள் காரணம் கூறுகின்றார்கள்.

இக்கோவில் மூர்த்தி, தலம் தீர்த்தம் முறையாக அமைந்திருந்ததாகவும், அம்மனின் சக்தியினால் உற்சவகாலங்களில் இத்தீர்த்த கங்கை நீர் இனிப்பு சுவை தருவதாகவும், உற்சவகால முடிவில் நீர் வெல்லமாக விளைந்ததாகவும், இதன் காரணமாக இக்கிராமத்துக்கு "வெல்லம் கரை" என்ற பெயர் ஏற்பட்டதாகவும் காலப்போக்கில் இப்பகுதியில் துர்நடத்தைகள் இடம் பெற்றதாகவும் இதன் நிமித்தம் அம்மனின் அருட்சக்தியினால் நன்னீர் கங்கை உவர் நீராகியதாகவும் இப்பகுதி எங்கும் கதை உலாவுகிறது.

நாச்சியம்மன் கங்கைப் பகுதியைச் சுற்றி பல மண்மேடுகளுண்டு. பண்டைக் காலத்தில் இப்பகுதியில் அரண்மனையும் குடியிருப்புகளும் இருந்ததாக நம்ப இடமுண்டு. மக்கள் கூற்றும் இதுவே. இக்கங்கையில் விசேட தினங்களில் நீர்மட்டத்துக்கு மேல் பொற்கலசங்கள் தோன்றுவதாகவும், வெள்ளி செவ்வாய்கிழமைகளில் கங்கைப்பகுதியில் வெளிச்சம் தெரிவதாகவும் இப்பகுதியில் புதையல்கள் இருப்பதால் இவற்றை தேவதைகள் காவல் புரிவதாகவும் தெரிவிக்கின்றார்கள்.

இக்கங்கையில் பயங்கர நீர்ச்சுழிகள் உருவாவதாகவும், இந்நீர்ச்சுழிகளுடன் சம்பந்தமுடைய சுருங்கை வழிகள் இருக்க வேண்டும் எனவும் நம்பப்படுகின்றது. இக்கங்கையில் இறங்கிய சிலபேர் காணாமல் போயிருப்பதாகவும், இக்கங்கையை இன்று எவரும் பயன்படுத்துவதில்லை எனவும் கூறப்படுகின்றது. இலங்கை அரசு இன்று இப்பகுதியை சுற்றி வேலி போட்டு புராதன சின்னமாக பாதுகாத்து வருகின்றது.

தகவல்: கோவிந்தசாமி
தேடல்: S. நாகராஜன்

# இந்துசமய கலாசார திணைக்களப் பணிப்பாளர்

## திரு. க. சண்முகலிங்கம் அவர்களின்

## ஆசிச்செய்தி

இறைவனுடைய தெய்வீக சக்தி எங்கும் நிலைத்திருக்கிறது. பூரணப் பொருளாய் அச்சக்தி நிறைந்திருப்பினும் இலகுவில் அதை எல்லோராலும் பெற்றுக் கொள்ள முடிவதில்லை. எங்கும் வியாபித்துள்ள கடவுளின் அருட் சக்தியைப் பெற ஆலயங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. தெய்வீக சக்தி ஆலயங்களில் சேகரிக்கப்பட்டு பக்தர்களுக்கு பயன்படுகின்றது.

இந்த வகையில் புத்தளம் நாயக்கர்சேனை மாம்புரி மக்கள், தமக்கென ஒரு ஐயனார் கோயிலை ஸ்தாபித்து இன்று நல்ல சுபவேளையில் புனரா வர்த்தன அஷ்டபந்தன பிரதிஸ்டா மகா கும்பாபிஷேகம் செய்வது கண்டு மிகவும் மகிழ்ச்சி கொள்கின்றேன்.

ஆலயம் சிற்பாசாரியரின் திட்டப்படி அமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் செய்யப்படுகின்றது. இக்கும்பாபிஷேகத்தின் போது யாகசாலையில் செய்யும் வேத மந்திரங்களின் மூலம் ஆலயத்திற்குரிய சக்தியைப் பெறுகின்றோம். யாகங்கள், கும்பாபிஷேகங்கள் மூலம் மூர்த்தியில் தெய்வீக சக்தி நிரப்பி வைக்கப்டுகின்றது.

இன்று நடைபெறும் இம்மகா கும்பாபிஷேகமும் இத்தன்மையதே. ஐயனார் சக்தி அகிலமெல்லாம் கிடைக்க வேண்டும் எனும் அவாவுடன் ஆலயம் அமைத்து, அழகான கும்பாபிஷேகத்தை நடத்திய இவ்வூர் மக்களை நான் மனதாரப் பாராட்டுகின்றேன்.

மகா கும்பாபிஷேகத்தை நடத்திய சிவாச்சாரியர்களையும், இப்பணி சிறக்க அயராது பாடுபட்ட அறங்காவலர்களையும் இச்சந்தர்ப்பத்தில் பாராட்டுகின்றேன்.

ஐயனார் திருவருள் சகலருக்கும் கிடைக்கவும் நாட்டில் சாந்தியும் சமாதானமும் நிலைத்திடவும் இறையருளை வேண்டுகின்றேன்.

க. சண்முகலிங்கம்

**பணிப்பாளர்.**

கும்பாபிஷேகம்
சீரும் சிறப்பும் பெற்று
இனிது நிறைவுற ஐயனை
வேண்டுகின்றோம்

***
**
*

சிலாப நகரில்
சிறந்த கலையம்சங்களோடு கூடிய
நகைகளுக்கு மக்கள் நாடி வரும்
நகை மாளிகை

▼▼
▼
▼
▼▼
▼
▼
▼

**பத்மா நகை மாளிகை**

පත්මා ආභරණ මාළිගාව

# PATHMA JEWEL HOUSE

**(MRS. J.KRISHNAN)**

NO 72, BAZAAR STREET,
CHILAW

# புத்தளம் இந்து மகாசபைத்தலைவரின் வாழ்த்து

"அறத்தான் வருவதே இன்பம்மற் றெல்லாம்
புறத்த புகழு மில"

என்ற செந்நாப் போதன் தன் பொய்யா மொழிக் கொப்ப, நல்லறஞ் செய்வ தினால் ஏற்படும் பேருவகை, மற்றெல்லா இன்பங்களையும் மிகைத்து நிற்பதாம்.

பெற்ற தாய்க்கும், பிறந்த பொன் நாட்டிற்கும் ஆற்ற வேண்டிய கடமையைக் காட்டிலும் விஞ்சி நிற்பது தாம் சார்ந்த நன்மார்க்கத்துக்காய் ஆற்றும் நல்லறப் பணியாகும்.

அப்பணி ஓர்ந்து, நாயக்கர்சேனை என்னும் நல்லூர்ப் பெருமக்கள் ஐயனார் கோயிலை அழகுற நிர்மாணித்து கும்பாபிஷேகம் செய்கின்ற இப் புண்ணிய வேளையிலே, இப்பெருங் காரியத்திற் பங்கெடுத்த நன் மக்களுக்கெல்லாம் துங்கக் கரிமுகத்துத் தூமணியின் துணைவேண்டித் தொழுது நிற்கிறேன்.

தா. முருகேசம் பிள்ளை
(தலைவர்)
புத்தளம் இந்து மகாசபை

கும்பாபிஷேகம் சிறப்புடன் நிகழ வேண்டுகின்றோம்

**தரமான தங்க நகைகளுக்கு சிறந்த ஸ்தாபனம்**

අරුණා ජුවලරි හවුස්

**
*

அருணா ஜுவலரி ஹவுஸ்

# ARUNA JEWELLERY HOUSE

**NO 66, BAZAAR STREET,**

**CHILAW.**

TELEPHONE : 032 - 2457

---

ஐயனைத்தொழுவோம் அருள் பெறுவோம்!
நீருயர நெல்லுயரும்...

விவசாய இரசாயனப் பொருட்கள், உர வகைகள்
மற்றும் விதை வகைகட்கு

**MR. K.SELVARATNASAMY,**

SUDHA STORES

ETALAI

“தாக சாந்தி தீர்த்திடும் சுதா கூல்”

# ஐயனார் ஆலய தர்மகர்த்தா அவர்களின் உரை.



ஐயனாருக்கு ஆகம விதிப்படி கோபுரத் தோடு கூடிய கோவிலை நிர்மாணித்து இன்று 16-6-95 வெள்ளிக்கிழமை கும்பாபிஷேகம் செய்கின்றோம்.

கட்டடப் பணிகளை நிறைமனதுடன் ஆசாரியர்கள் நிறைவேற்றித் தந்துள்ளனர். குடமுழுக்கு வைபவத்தை "சபரிமலை ஸ்ரீ சாஸ்தாபீடாதிபதி" "கிரியா கலாநிதி" ஐயப்பதாஸன் சாம்பசிவ சரவணபவக்குருக்கள் தலைமையேற்று கிரியைகளை நடாத்தி வைக்கின்றனர்.

திருப்பணி நிறைவுக்கு நல்மனதோடு பலபேர் ஒத்துழைப்பு நல்கினர். இவ்வூரின் பெரும் குறை இன்றுடன் நிறைவெய்துகிறது.

ஊருக்கும் உலகத்தாருக்கும் சாந்தியும் சமாதானமும் சுபீட்சமும் நிலவ வேண்டுமென்று பிரார்த்தித்து குடமுழுக்கு செய்கின்றோம்.

இதன் பொருட்டு எம் பெருமானுக்கு சிறப்பு கும்பாபிஷேக மலரையும் உருவாக்கி மலர் மாலையாக சூட்டுகின்றோம்.

V.K. சதாசிவம் செட்டியார்

**ஐயனார் ஆலய தர்மகர்த்தா**

# நாயக்கர்சேனை
# ஐயனார் ஆலய பரிபாலன சபை

**தலைவர் -** திரு வீ . கே. சதாசிவம் செட்டியார்.

**உப தலைவர் -** திரு. எஸ். காசிநாதன்

**செயலாளர் -** திரு. கே. பசுபதிப்பிள்ளை

**உப செயலாளர் -** திரு. வீ. தயாளன்.

**பொருளாளர் -** திரு. எஸ் . கோபாலநாதன்.

**உறுப்பினர்கள் -**

திரு. கந்தசாமி சிவசுப்பிரமணியம்.
திரு. கே. வடிவேல்
திரு. எம். கந்தசாமி
திரு .கே. சிவராசா.

## மலர் வெளியீட்டுக் குழு:

**காப்பாளர் :** திரு. வீ . கே. சதாசிவம் செட்டியார்
(முன்னாள் V.C. தலைவர் அக்கரைப்பற்று கிராம சபை)

**தலைவர் :** திரு . கே. பசுபதிப்பிள்ளை
(அதிபர் – நாயக்கர்சேனை அரசினர் இந்து தமிழ் வித்தியாலம்)

திரு.எஸ். நாகராஜன் – சமாதான நீதவான்
(தலைவர் – கிராமோதய சபை ,– கரம்பை)

திரு. வீ. தயாளன்
(உப –அதிபர், அரசினர் தமிழ் வித்தியாலயம் , மாம்புரி)

**மலராசிரியர்:** திரு ஏ.கே. திருச்செல்வம்

# மலராசிரியரின்
# இதயத்திலிருந்து.......!

நலன் பல சேர்க்கும் நாயக்கர்சேனை ஐயனார் திருவருளால் இம்மலர் கும்பாபிஷேகச் சிறப்பு மலராக வெளிவருகிறது. இம்மலர் வடமேல் மாகாண எழுத்தாளர்களினதும், பேராதனைப்பல்கலைக்கழக பேராசிரியர்களதும் கருத்தாழமிக்க ஆக்கங்களையும் சுமந்து வெளிவருகிறது.

இம்மலரானது இளம் ஆய்வாளர்களையும் ஈர்த்துக் கொண்டுளது. இளம் ஆய்வாளர்கள் காட்டிய முயற்சி மனம் கவர்ந்ததே. இவர்கள் களைப்பின்றி, சளைப்பின்றி உழைத்து தமதெண்ணத்தில் வெற்றி கண்டுள்ளனர்.

தகவல் சேர்ப்பிற்காக நாம் நாடியோரோ எமது முயற்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்து ஒரு முழு அளவிலான உதவியினை வழங்கியுள்ளனர். இவர்கட்கு எப்படி நன்றி சொல்வதென்று அறிந்திலேன்.

இந் நாட்களில் இது விடயமாய் நூற்றுக்கு மேற்பட்டோரை சந்திக்கும் வாய்ப்புக் கிட்டிற்று. புதிய நிலங்கள், புதிய தகவல்கள், இதற்கு முன் பார்த்திராத கோவில்கள் இப்படி அநேகமானவை புதியதாகவே எமது தேடலில் அமைந்தன. இவை ஒரு சுக அனுபவமே.

இவ்விதழ் தயாரிப்பிற்காக பேராதனைப் பல்கலைக்கழக இந்துப்பண்பாட்டு முதுநிலை விரிவுரையாளர் திரு. இரா. வை. கனகரத்தினம் அவர்களை அணுகியதில் அவரிடம் இருந்து கிடைக்கப்பெற்ற அறிவுரைகளும், அத்துடன் பேராசிரியர் சி. தில்லைநாதன் அவர்களிடம் இவ்விதழுக்கு கட்டுரை வேண்டி அணுகிய போது, பேராசிரியரவர்கள் எமக்குணர்த்திய கட்டுரை அமைப்பதற்கான அணுகு முறைகளும் எம்மை பிரமிப்பில் ஆழ்த்தி விட்டிருந்தன.

இம் மலரைத் தயாரிப்பதற்கான அனைத்து வேலைகளும் பூர்த்தியுற்று அச்சுக்குக் கொண்டு வர வேண்டிய நிலையில் ஆக்கபூர்வமான ஆலோசனைகள் வழங்கி நவீன முறையில் அழகுற அச்சிட்டிட வழிகோலிய நீர்கொழும்பு சாந்தி அச்சகத்தினரின் அச்சுப்பதிப்பு இம்மலர் வாசகர் முகங்களை மலரவைக்கும் என்பதில் ஐயமில்லை.

இவ்வாறாய் இம்மலரைப் படைப்பத்தில் கிடைத்துள்ள வெற்றிப் பெருமிதமானது, பக்திப் பிரவாகமாய் ஐயனின் தாழ் பணிந்து வணங்கச் செய்கிறது. இவ்விதழ் படைப்பதில் உதவிய அனைவருக்கும் எனது உளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு குடமுழுக்கு வைபவத்தில் இணைந்து சிறப்பிக்கவும் அழைக்கின்றேன்.

நன்றி.

A.K. திருச்செல்வம்

# கோயிலும் குடமுழுக்கும்

*கலாநிதி பேராசிரியர் சி. தில்லைநாதன்*
**தலைவர் - தமிழ்த்துறை பேராதனைப் பல்கலைக்கழகம்**

'ஐயனாரே' என்று விழித்துக் கொண்டு யாழ்ப்பாணத்திலுள்ள எனது கிராமமான சுன்னாகத்து மக்கள் பலர் துயில் நீங்கி எழுவார்கள். அக்கிராமத்திலே சிவனுக்கும் அம்மனுக்கும் பிள்ளையாருக்கும் ஐயனாருக்கும் வைரவருக்கும் கோயில்கள் உள்ளன. பல கோயில்களிலும் சென்று வழிபட்டவிடத்தும், ஒவ் வொரு தெய்வத்தைத் தம் வாழ்வோடு சிறப்பாகப் பிணித்துக் கொள்வது பல மக்களுடைய வழக்கமாகும். ஒரு விடயத்தை உறுதிப்படுத்த வேண்டியவிடத்து 'ஐயனாரறிய உண்மை' என்பார்கள். ஐயமோ வாதமோ எழுந்தவிடத்து 'ஐயனாரைக் கொண்டு சத்தியம் பண்ணு' என்பார்கள். சுன்னாகச்சந்தையில் வியாபார கருமங்கள் நிகழும் போது ஐயனார் நாமத்தை அடிக்கடி கேட்கக் கூடியதாக இருக்கும்.

அங்கு கோயில் கொண்ட ஐயனாரின் விக்கிரகம் தாழைமரப் பற்றைக்குட் கண்டெடுக்கப்பட்டதாகக் கருதப்பட்டதாலும் கோயிலின் பின்னால் தாழை மரங்கள் நிறைந்திருந்தாலும் 'தாழைக்குள் அப்பனே' என்று அத்தெய்வத்தை விழிப்பதும் பெரு வழக்கமாயிற்று. ஐயனார் பெயரில் தோத்திரப் பாடல்களையும் ஊஞ்சற் பிரபந்தமொன்றினையும் மயிலணியில் வாழ்ந்த வரகவி முத்துக்குமார கவிராசர் இயற்றியுள்ளார். ஆதரவற்றவர்களுககு உதவிய அத்தெய்வ த்தின் மகிமைகள் பலவாறாகப் பேசப்பட்டன. இரு விவசாயிகளுக் கிடையில் இடம் பெற்ற சண்டையில் ஒருவன் மற்றவனைக் கொன்று ஒருவரும் காணாத வகையில் வயல் வரம்புக்குட் புதைத்து விட்டானாம். ஐயனார் வயோதிபக் கோலத்தில் நீதிமன்றம் புகுந்து சாட்சி சொல்லிக் குற்றவாளிக்குத் தண்டனை பெற்றுக் கொடுத்தாராம். இப்படியான வரலாறு களும், கோயில் கொண்டுள்ள தெய்வ த்தின் வல்லமைகளையும் அருட் சிறப்புக்களையும் உறுதிப்படுத்தும் கதைகளும் அனேக ஆலயங்கள் சம்பந்தமாகவும் வழக்கிலிருப்பதை அவதானிக்கலாம். அவை சாதாரண மக்கள் மனதில் இறைபயத்தை உண்டு பண்ணவும், தகாதவற்றை அஞ்சித் தக்கவற்றை உவக்கும் மனப்பாங்கினை வளர்க்கவும் உதவியமை மனங் கொள்ளத்தக்கது.

கிராமங்கள் நகரங்கள் எங்கணும் மலிந்துள்ள கோயில்கள் எமது மக்களின் வாழ்வில் முக்கியமானதோர் இடத்தினை வகிக்கின்றன. கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் என்ற முதுமொழியும் வெகு பிரசித்தமானது. கடவுள் குடிகொண்ட இடம் கோயில் என்றும் மக்கள் வழிபடும் பொருட்டு அமைக்கப் படுவது அதுவென்றும் கொள்வர். என்றும் எங்கும் நீக்கமற நிறைந்துள்ளவன் எனக்கருதப்படும் இறைவனுக்குப் பல்வேறு தோற்றங்களும் கோயில்களும் எதற்கு என்ற கேள்வி எழுவதுண்டு.

"உள்ளது ஒன்று அதனை ஞானிகள் பல்வேறு பெயர்களால் அழைப்பர்" என்று இருக்குவேதம் கூறிற்று."ஒரு நாமம் ஒருவரும் ஒன்று மிலான்"என்றார் மாணிக்கவாசகர். "கோயிலும் மனத்துளே குளங்களும் மனத்துளே" என்றும் "நட்ட கல்லும் பேசுமோ நாதன் உள்ளிருக்கையில்" என்றும் சிவ வாக்கியர் பாடினார். உருவச் சிலை எதற்கு, கோயில் எதற்கு, குடமுழுக்கு எதற்கு என்ற கேள்விகள் இன்று நேற்று எழுந்தவை அல்ல. உருவ வழிபாட்டின் வரலாற்றைக் காடடிலும் உருவ வழிபாட்டு மறுப்பின் வரலாறு நீண்டது. ஆயினும், உருவ வழிபாடும் கோயில் வழிபாடும் நிலைத்துப் பெருகியுள்ளன. மனதை ஓரிடத்தில் நிறுத்தி ஒரு முகப்படுத்தப் பெருவாரி மக்களுக்கு உதவுவன என்ற முறையில் கோயில்கள் வேண்டப்படுகின்றனவென்பர். அத்தகையதொரு தேவையினை அவை நிறைவேற்றுகின்ற காரணத்தினால் ஏராளமான மக்கள் கோயில்களை நாடுகின்றனர்.

உள்ளத்தால் உணர்வதென்பதும் உயர் ஞானம் ஈட்டுவதென்பதும் ஒரு சிலருக்குச் சாத்தியமாகலாம். ஆனால் பெரும்பாலான மக்களுக்குத் தேவைப் படுவது உலகியல் வாழ்விலே பிடிப்பு, நம்பிக்கை, ஆறுதல், கலகலப்புப் போன்றவை என்றே தோன்றுகின்றது. சொல்லப்படுவனவாயினும் சரிசெய்யப் படுவனவாயினும் சரி, யாருக்காக என்பதைப் பொறுத்து அவற்றின் தன்மை அமையும். விக்கிரகங்களிலும் கோயில்களிலும் இறைவன் இருக்கிறான் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் அமைதி கண்ட மக்கள் தம் வாழ்விடங்கள் தோறும் கோயில்கள் அமைத்தனர். இயற்கைச் சக்திகளை ஒரு காலத்தில் வழி பட்டவர்கள் இயற்கை அழகு பொருந்திய ஆற்றங்கரைகளிலும் குளக்கரைகளிலும் குன்றுகளிலும் கோயில்களைக் கட்டலாயினர். காலகதியிலே தூர இடங்களினின்றும் கண்டு தரிசிக்கக்கூடிய உயர்ந்த கோபுரங்களையும் அமைத்துக் கொண்டனர்.

ஆகமவிதிகளுக்கமைய விக்கிரகங்களையும் கோயில்களையும் அமைத்துக் கிரியைகளையும் வழிபாடுகளையும் நடாத்த வசதியற்றவர்கள் சிறுகுடில்களிலும் மரநிழல்களிலும் தங்கள் இஷ்ட தெய்வங்களை நாட்டி வழிபட்டனர். மன்னர்களாற் கட்டப் பட்டனவும் வேதாகம முறைப்படி பூசைகள் நடைபெறுவனவுமான கோயில்களிற் கூடுபவர்கள் மிகச் சிலராயும் சிறு தெய்வங்கள் எனப்படும் ஐயனார், வைரவர், காளி, முத்துமாரி முதலான தெய்வங்களின் கோயில்களில் கூடுபவர்கள் மிகப்பலராயும் இருப்பதைப் பலவிடங்களிற் பார்க்கலாம். கால மாற்றங்களைப் பொறுத்து, சிறு தெய்வங்கள் என ஒரு காலத்தில் ஒதுக்கப்பட்டவை கூடிய அங்கீகாரத்தைப் பெறுவதையும், வைதீக புரோகிதர்கள் அவற்றுக்குப் பூசைகளை நிகழ்த்த உடன்பட்டு முன்வருவதையும் அவதானிக்க லாம்.

எவ்வாறாயினும், இந்தியாவில் மிகப் பழங்காலந்தொட்டே கோயில் அமைத்து வழிபடும் வழக்கம் இருந்தமை தெளிவாகும். தமிழ் மக்களைப் பொறுத்தவரை அவர்கள் சங்க காலத்திலேயே கோயில்களில் வழிபாடு நிகழ்த்தினர். மண், மரம் போன்றவற்றால் உருவாக்கப்பட்ட கோயில்கள் நிலை பெற முடியாது போனதால், பல்லவர் காலத்திற் அமைக்கப்பட்டனவே இன்று இருப்பவற்றுட் காலத்தால் முந்தியவையாக உள்ளன.

சமண பௌத்த மதங்களுக்கெதிரான பக்தி இயக்கம் இந்து மதத்தின் பால் மக்களைக் கவரப் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்ட பல்லவர் காலத்திலே ஏராளமான சைவ, வைணவக் கோயில்கள் எழுந்தன. பல்லவ அரசர்கள் மலைகளைக் குடைவித்துக் குடைவரைக் கோயில்களையும், குன்றுகளைச் செதுக்குவித்து ஒற்றைக்கற் கோயில்களையும், வேறு பல கட்டடக் கோயில்களையும் உருவாக்கினர். நாயன்மார்களும் ஆழ்வார்களும் பாடியுள்ள தலங்களை நோக்குமிடத்து நூற்றுக் கணக்கில் அவை இருந்திருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. திருநாவுக்கரசர், பெருங்கோயில், திருக்கோயில், மணிக்கோயில், இளங்கோயில், ஆலக் கோயில், ஞாழற்கோயில் முதலான பல்வகைக் கோயில் களைப் பாடியுள்ளார். அக்காலப்பக்தி இலக்கிய வளர்ச்சிக்குக் கோயில்கள் தூண்டுகோலாக அமைந்தமையும் கோயில்களின் பெருமை பரவி நிலைபெறத் திருமுறைகளும் திவ்யப் பிரபந்தங்களும் உதவியமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழகத்தின் தென்பகுதியை ஆட்சி புரிந்த பாண்டியர் மண்டபக் கோயில் களையும் குடைவரைக் கோயில்களையும் அமைத்துள்ளனர். பெருஞ் சாதனைகளில் முனைந்து நின்ற சோழப் பேரரசர்காலம் கோயில் வரலாற்றிலும் பொற்காலமாகும். சிறந்த சிற்பங்களுக்கான புகழ் பல்லவரைச் சேரும் என்றால் சிறந்த கட்டடக்கலைக்கான புகழ் சோழரைச் சேரும். சோழப் பேரரசருக்குப் பின் தமிழகத்தை ஆண்ட விஜயநகர அரசர்கள் சமயப் பணிகள் மூலமாகவே மக்கள் ஆதரவைப்பெற விழைந்து வானளாவிய கோபுரங்களையும் பெருமண்டபங்களையும் அமைத்தனர். அத்தகைய பணிகளைப் பின்வந்த நாயக்கர்களும் தொடர்ந்தனர்.

புதிய கோயில்களைக் கட்டுவதற்கும் பழைய கோயில்களைப் புனருத்தாரணம் செய்வதற்கும் விக்கிரகங்களை அமைப்பதற்கும் பூசைகள், விழாக்களை நடாத்துவதற்குமான விதிமுறைகளை ஆகமங்கள் விரிவாகக் கூறுமாற்றை நோக்குமிடத்தும் கோயில் வழிபாடு சமுதாயத்திற் பெற்றுள்ள முக்கியத்துவம் விளங்கும். வட இந்தியக் கோயில்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது தென்னிந்திய கோயிற் கிரியைகள் விரிவாக்கம் மிகுந்தவையாகவும் சமூக நடவடிக்கைகளோடும் வாழ்க்கை நிகழ்வுகளோடும் கூடிய சம்பந்தமுடையன வாகவும் மிளிர்வதை அவதானிக்கலாம்.

சிவாகமங்கள் கூறும் கிரியைகளுள் மிக முக்கியமான தென்றும் அருளுக்கு அடிப்படையானதென்றும் கருதப்படுவது கும்பாபிஷேகம் ஆகும். கும்பாபிஷேகம் என்றால் குடத்து நீரை ஆட்டுதல் என்ற பொருள்படும். அதனைக் குடமுழுக்கு என்றும் பிரதிஷ்டை என்றும் குட நன்னீராட்டு விழா என்றும் குறிப்பிடுவர். திருவுருவத்திலும் திருக்கோயிலிலும் வெளிப்பட நின்று அருள் புரியுமாறு மூர்த்தியை நிலை நிறுத்தலையே பிரதிஷ்டை என்பது குறிக்கும். பிர என்றால் நன்கு புலனாகும் படி என்றும் திஷ்ட என்றால் நிற்றல் என்றும் பொருள்படும். எங்குமுள்ள இறைவனை ஓரிடத்திற் சிறப்பாக எழுந்தருளச் செய்யும் இக்கிரியை தரிசனத்துக்கு அடிப்படையானதென்று கருதப்படுவது. புதிதாக விக்கிரமோ கோயிலோ அமைக்கப்படுமிடத்து அல்லது பழைய இடத்தில் புனர் நிர்மாணம் நிகழுமிடத்து அல்லது கால

கதியில் விக்கிரகங்கள், வர்ணங்கள் போன்றவற்றிற் பழுது நேருமிடத்து அல்லது நித்திய கருமங்களுக்குத் தடையான அசுத்தமேற்படுமிடத்துக் குட முழுக்கு விழாக்களை நடாத்துவர். ஒருவன் தன் நலன்கருதி வாழ்நாளில் செய்துகொள்ளும் சாந்திக் கிரிகைளைப் போலன்றி, எல்லா உயிர்களும் குறைவிலாது வாழ்தற் பொருட்டு நிகழ்த்துப்படுவதாற் குடமுழுக்கானது பெரு ஞ்சாந்தி என்று போற்றப்படுகிறது.

நம்பிக்கை என்பது வாழ்க்கைக்கு இன்றியமையாததாகவும் முயற்சிகளுக்கு அடிப்படையாகவும் உள்ளது. இறை நம்பிக்கையையும் குறிப்பிட்ட இடத்தில் அவன் எழுந்தருளியுள்ளான் என்ற திருப்தியையும் ஊட்டுவதாகக் குடமுழுக்கு விழா அமைவது குறிப்பிடத்தக்கது. சமுதாயம் ஒன்று தன்னிடத்துப் பற்றினையும் பணிவினையும் வலிமையினையும் ஒற்றுமையினையும் பேணி வளர்க்க வேண்டுமாயின் அடிக்கடி திரும்பத் திரும்ப அதன் ஒருமைப்பாட்டுணர்வு தூண்டப்பட வேண்டும் என்றும், கிரியைகளும் விழாக்களும் அக்கைங்கரியத்தைச் சிறப்பாக நிறைவேற்றவல்லன என்றும் சமூகவியலாளர் கூறுவர். அந்த வகையில், ஒரு குடமுழுக்கு விழா நம்பிக்கையினையும் ஒற்றுமையினையும் புதுப்பித்து உறுதிப்படுத்த எவ்வகையில் உதவும் என்பதை எண்ணிப் பார்த்தல் பயனுடைத்தாகும்.

ஒரு சமூகத்தைச் சேர்ந்தவர்கள் வேறுபாடுகளை மறந்து ஒன்று கூடி அடங்கிப்பணியவும் வாழ்வில் நம்பிக்கையினையும் குதூகலத்தையும் வளர்க்கவும் உதவுகின்ற வகையிற் கோயில்களும் விழாக்களும் சமுதாய வாழ்வுக்கு வளமூட்டுவனவாம். கோயில்களில் இடம்பெறும் நித்திய பூசை நிகழ்ச்சிகளும் விழாக்களும் சமய உணர்வையும் பக்தியையும் வளர்ப்பனவாக மட்டுமன்றிச் சமூகமயப்பாட்டுக்கும் ஒற்றுமைக்கும் பங்களிப்பு நல்குவனவாகவும் அமைவதை அவதானிக்கவியலும். என்னைப் பொறுத்தவரையில் கதிர்காமம், திருக்கோணேஸ்வரம், திருக்கேதீச்சரம் போன்ற தலங்களைத் தரிசிப்பதற்கு விரும்புவேனாயினும், சுன்னாகம் ஐயனார் கோயில் தேர்த்திருவிழாவுக்குச் செல்வதே எனக்கு மிகுந்த மகிழ்ச்சியினைத் தருவதாக இருக்கும். ஏனெனில், என் ஊரவர்களோடும் உற்றார் உறவினர்களோடும் சிறுவயது முதற் பழகிய வர்களோடும் அளவளாவும் வாய்ப்பினை அது வழங்குவதாகும்.

தமிழர் நாகரிகத்தைக் கோயில் நாகரிகம் என்று குறிப்பிடுமளவுக்கு எனது சமூக பொருளாதார வாழ்விற் கோயில்கள் பிரதானம் பெற்றன. கிராமத்து மக்கள் தமது பாவனைக்குத் தேவையான பொருள்களை வாங்குவதற்குக்கூடத் திருவிழாக்களை எதிர் பார்த்திருந்ததுண்டு. கோயிற் கொண்டாட்டங்கள் சிறுவர்களுக்குக் குதூகலத்தைக் கொண்டு வந்தன. பதினைந்து நூற்றாண்டுகளுக்கு மேலாகச் சமுதாய வாழ்வில் கோயில்கள் ஆற்றிய பங்களிப்புக்கள் பலவாகும்.

கல்வி அறிவு வளர்ச்சிக்குக் கோயில்கள் உதவின. கல்வி நிலையங்களை நடாத்தியதோடு அமையாது பிரசங்களையும் உபநியாசங்களையும் பட்டி மன்றங்களையும் அவை ஏற்பாடு செய்தன. அங்கீகாரமும் மதிப்பும் வேண்டிய கல்விமான்களும் புலவர்களும் கோயில் அவைகளில் தம் ஆக்கங்களை அரங்கேற்றினர். வேத

ங்களும் திருமுறைகளும் திவியப் பிரபந்தங்களும் அங்கு கற்றுத் தரப்பட்டன. கோயில்களை மையமாகக் கொண்ட இலக்கிய வளர்ச்சி விரிவாக நோக்கத் தக்கது. இசை,நடன, சிற்ப, சித்திர ஓவியக் கலைகளின் வளர்ச்சிக்கு அவை ஆற்றிய பங்களிப்பும் அத்த கையதே. தமிழ் நாட்டிலும் இலங் கையிலும் இன்னும் பல இடங்களிலும் எழுந்துள்ள கோயில்கள் அவற்றை உருவாக்கியவர்களின் சமயப் பற்றுக்கு மட்டுமன்றி அழகியல் உணர்வுக்கும் சான்றாக மிளிர்கின்றன.

நிலைபேற்றுணர்விற்கும் நம் பிக்கைக்கும் அடையாளமாக எழுந்து நிற்கும் கோயில்கள் 'மண்ணில் நல்லவண்ணம் வாழ'வேண்டிய சமூக ஒழுக்க விழுமியங்களைப் பேணவும் ஆதாரமாயுள்ளன. வறிவர்களுக்கும் ஆதரவற்ற வர்களுக்கும் உணவளிக்கும் தர்மகாரியங்களும் கோயில்களில் இடம் பெறு வதுண்டு. நோயாளர்களுக்கும் வலது குறைந்தவர்களுக்கும் சிகிச்சையும் ஆதரவும் வழங்கும் பணிகளும் கோயில்களில் நடைபெற்றன. யாத் திரிகர்களுக்கும் பக்தர்களுக்கும் தங்குமிட வசதிகளையும் கோயில்கள் அளித்தன. குழப்பங்களும் போர்களும் இடம்பெற்றவிடத்து ஊர்மக்களுக்குப் புகலிடமளிப்பவை கோயில்களே. நெரு க்கடி நேரங்களில் கடன் வசதிகளையும் கோயில்கள் செய்து கொடுத்ததுண்டு. பலருக்குத் தொழில் வாய்ப்புக்களையும் அவை வழங்குகின்றன.

இவ்வாறு பல சமுதாய நட வடிக்கைகளுக்கும் பணிகளுக்கும் மையங்களான கோயில்கள் விழா க்காலங்களில் மட்டுமன்றி ஏனைய காலங்களிலும் புளகாங்கிதத்தையும் நம்பிக்கையையும் பலருக்கு ஊட்டு வனவாக விளங்குகின்றன. ஒரு கோயி லின் தோற்றம் சுற்றாடலுக்கு இங் கிதமான வனப்பையும் பரவசத்தையும் தருவதாகும். எல்லாவற்றுக்கும் மேலா கக் குறிப்பிடப்படவேண்டியது, ஏராள மான பேர்களுக்கு நெருக்கடி வேளை களில் தேறுதலும் ஆறுதலும் அளிக்கும் தன்மையாகும். கடவுளை நம்பினோர் கைவிடப்படார், திக்கற்றவர்களுக்கத் தெய்வமே துணை என்பன போன்ற பழமொழிகள் பெருவழக்கில் உள்ளன. பாரபட்சமின்றி அருள் பாலிப்பது தெய்வமே என்று பெரும்பாலான மக்கள் தம் உலகியல் வாழ்க்கை அனுபவங்களின் அடிப்படையில் நம்பு கிறார்கள். அதனிடம் தம் குறைகளை முறையிடவும் அருள்பெறவும் வேண் டிக் கோயிலை நாடுகிறார்கள். எல்லோரும் நலம்பெற வழி பிறக்கும் என்ற நம்பிக்கையில் குடமுழுக்கு விழா எடுக்கிறார்கள். எளிய மக்கள் இன்று எதிர்பார்க்கும் அமைதி அவர்களுக்கு வாய்க்குமாயின் எல்லோரும் இன்புற்றிருக்கும் நிலை உருவாகலாம். கோயிலை நாடுவதும் குடமுழுக்கு விழா எடுப்பதும் நம்பிக்கையை இன்னும் நாம் இழந்து விடவில்லை என்பதையே காட்டுவதாகும்.

"நம்பினோர் கெடுவதில்லை;
நான்கு மறைத் தீர்ப்பு"

*மகாகவி பாரதியார்*

# நாயக்கர் சேனை
# ஸ்ரீ ஐயனார் கோவில்

**கே. பசுபதிப்பிள்ளை (அதிபர்)**
(நாயக்கர்சேனை இந்து தமிழ் வித்தியாலயம்)

*தென்னங் கூடல் தன்னில்*
*தேவியர் துணையிருக்க*
*பென்னம் பெரிய மனமேற்று*
*பேருவகை பூண்டு*
*கன்னங் கரி மீதேரி*
*கடிதென வந்தமர்ந்து*
*பன்மை யாண்டு காதற்*
*பதியெனக் கொண்டு*
*மண்ணைக்காக்கும் ஐயன்*
*மலர் பாதம் சரணம்.*

இலங்கையின் புத்தளம் மாவட்டத்தில் கற்பிட்டிக் குடாநாடு அமைந்துள்ளது. கற்பிட்டிக் குடாநாட்டின் ஆரம்ப ஸ்தானம் பாலாவியாகும். பாலாவி கொழும்பு புத்தளப் பிரதான வீதியில் புத்தளம் நகருக்குத் தெற்கே 6km தொலைவில் உள்ளது. பாலாவியில் இருந்து சுமார் 40 km இக்குடாநாடு ஆகும். கற்பிட்டி பட்டணம் பாலாவியில் இருந்து சரியாக 32 km ஆகும்.

இக்குடா நாட்டில் பாலாவி கற்பிட்டி பிரதான வீதியில் 3 km தொலைவில் கரம்பை எனும் இடம் அமைந்துள்ளது. கரம்பை சந்தியில் இருந்து தெற்கே 1km தொலைவில் உள்ளே, நாயக்கர் சேனை எனும் தமிழ் மணம் கமழும் கிராமம் நிலைகொண்டுள்ளது. இக்கிராமம் ஒரு குக்கிராமமாகும். இந்து தமிழ் குடிகள் இங்கு கிட்டத்தட்ட 50 தும் சுற்றுவட்ட கிராமங்களில் 50 க்கு மேல் இந்து தமிழ் குடிகளும் உண்டு. நாயக்கர் சேனைக்கிராமத்துக்கு கிழக்கிலும், தெற்கிலும், முஸ்லீம்கள் வாழும் புழுதிவயல் கிராமமும், மேற்கில் தமிழ் பேசும் கிறிஸ்தவர்கள் வாழும் தேத்தாப்பளைக் கிராமமும் வடக்கில் தமிழ்,சிங்கள மக்கள் வாழும் கரம்பைக் கிராமமும் காணப்படுகின்றன.

நாயக்கர்சேனை தென்னஞ் சோலைக் கிராமம் என்றால் மிகையாகாது. இங்கு தென்னை பிரதான பயிர்.கடலையண்டிய வெண்மணல் பாங்கான நிலமாதலால் தென்னைகள் செழித்து வளருகின்றன. சிறுபயிர்ச் செய்கையாக மிளகாய், புகையிலை, வெங்காயம், வாழை, காய்கறிகள் செய்கை பண்ணப்படுகின்றன. இயற்கைத் தாவரமாக பிரம்பு நன்னீர்த்தாழைகள் ஆங்காங்கு காணப்படுகின்றன.

ஊரின் மத்தியில் சிறுகேணி அதை தருமக்கேணி என்று அழைக்கிறார்கள். கேணியின் வடக்கே ஐயனார் கோவிலும், கேணியின் தெற்கே மாடசுவாமி

கோவிலும், கேணிக்கு முன்புறமாக இந்து பாடசாலையும் அமைந்து நல்லதோர் இந்துச்சூழலை உருவாக்கியுள்ளது. மேலே கூறப்பட்ட ஐயனார் ஆலயம் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற தன்னை தயார் படுத்திக் கொண்டு இருக்கின்றது. கேணியின் கரையோரங்களில் காணப்படும் மதுரமரங்கள் இப்பகுதிக்கு குளிர்ச்சியைக் கொடுத்த வண்ணம் இருக்கின்றன. சுற்றாடலில் காணப்படும் தென்னைகள் தென்றலால் தாலாட்டப்படுகின்றன.

16ம் நூற்றாண்டளவில் கண்டியில் நாயக்கர் வம்சத்தினர் ஆட்சி புரிந்து வந்தனர்,இவர்கள் தமிழ் நாட்டில் இருந்து வந்தனர் என்று வரலாறு கூறுகின்றது. நாயக்கர்களுடைய இனபந்துக்கள் இப்பகுதியில் வசித்து வந்திருக்கலாம் என நம்பு வதற்கு சிலபல காரணங்கள் உண்டு. இங்கு நாயக்கர்கள் வாழ்ந்து வந்தபடியால் நாயக்கர்சேனை என பெயர் வந்திருக்கலாம்.இதையுறுதிப் படுத்துவதாக அருகாமையில் மாளிகைச் சேனை, முதலியார் சேனை, என்ற இடங்களின் பெயர்கள் வழக்கிலுண்டு. மாளிகைச்சேனை என்ற இடத்தில் சிறு அரண்மனை இருந்ததற்கு இடிபாடுகளுடன் தடயங்கள் உள. இங்கு வாழ்ந்து வரும் மக்கள் இவ்வரண்மனைப் பகுதியில் புதையல், பூதம் இருப்பதாக கருதி வருகின்றனர். சுவாரசியமான புதையல் கதை களும் வழக்கிலுண்டு. பெரும் தென்னம் தோப்புக்களுக்கு மத்தியில் இன்று இவ் விடங்கள் காணப்படுகின்றன. பொது மக்கள் தனிமையில் இப்பகுதிகளுக்கு சென்று வரஅஞ்சுகின்றனர்.

அடுத்த ஆதாரம் இப்பகுதி பழைய உயில்களில் நாயக்கர்களுடையபெயர்கள் காணப்படுகின்றனவாம். உதாரணம் கண்ணையா நாயக்கர், முத்து சுப்பையா நாயக்கர், ஐயனார் கோவில் பூசகர் ஒருவர் அழகிரி நாயக்கர் என்ற பெயரில் 60 ஆண்டுகளுக்குமுன் இதே ஊரில் வாழ்ந்து வந்ததாக தகவல்கள் உண்டு. இத் தகவல்கள் சிலவற்றை தந்துதவியவர் இங்கு வாழ்ந்து வரும் 80 வயதை யொட்டிய சோம சுந்தரம் செட்டியார் ஆவார். அப்பெரியாருக்கு நன்றி. ஆகவே இங்கு வாழ்ந்து வந்தவர்கள் பழங்குடியினராகும். இவர்களைத் தொடர்ந்து செட்டியார்கள் வாழ்ந்து வந்திருக்கின்றனர். உயில்களில் செட்டியார்களுடைய பெயர்கள் காணப் படுகின்றன. உதாரணம் வேலாயுதம் செட்டியார், வைரவநாதன் செட்டியார், இராமநாதன் செட்டியார், காளிமுத்துச்செட்டியார் ▪ தற்போதும் செட்டியார்கள் காணப்படுகின்றனர். பிறப்பத்தாட்சிப் பத்திரத்தில் சுப்பிரமணியம் செட்டியார், வடிவேல் செட்டியார் என எழுதப்பட்டிருப்பதைக் காணலாம்.

நாயக்கர் ஆட்சிக்காலத்தில் இவ் ஐயனார் ஆலயம் எழுந்திருக்கலாம். பழைய ஐயனார் ஆலயம் இருக்கும் இடத்தில் ஆங்காங்கே காணப்படும் மாக்கற்கள் இதனை வலியுறுத்துகின்றன. கோயில் வாசலிலுள்ள "முன்னடியான்" என்று வழங்கிவரும் சதுரக்கல் பழைமையை நினைவு கூறுகின்றது. முன்னடி யானுக்கு முன்னால் இடிபாடுகளுடன்"கொடிமரக்கல்" காணப்படுகின்றது. ஐயனார் கோவில் பூசையின் போது இவைகளுக்கும் பூசை நடைபெறும். கோயிலினுள் மரத்தால் செய்யப்பட்ட பழைய வைரவர் சிலை ஒன்றுண்டு.வேறு வேறு விக்கிரகங்களும் காணப்படுகின்றன. மார்கழிப்பூசை, தைப்பொங்கல் பூசை மிகச் சிறப்பாக நடைபெற்று வந்ததாகவும் மார்கழிப் பூசையின் போது வீடு தோறும் சென்று அக்கால மக்கள் "சங்கூதி" " சேகண்டி" அடித்து வந்ததாகவும் கூறு கின்றார்கள். தற்பொழுது இவை இல்லை. இன்று சிவராத்திரியும், திருக்கார்த்திகையும், கார்த்திகை விளக்கீடன்று சொக்கப்பானை கொழுத்தலும் இடம் பெறும்.

அருகில் காணப்படும் மாடசுவாமி கோவிலில் பூசை, ஐயனார் கோவில் பூசையின் பின் நடைபெறும். நேர்த்திக் கடன்களை மாடசுவாமிக்கு செலுத்துவதைக் காணலாம். விஷேடமாக செவ்வாய்க் கிழமைகளில் இங்கு அன்னதானம் வழங்கி நேர்த்தி நிறைவு செய்யப்படும். மாடசுவாமிக்கு நேர்த்தி வைத்தால் நினைத்த காரியம் கைகூடும், கேட்பதைக் கொடுப்பார் நினைத்ததை சாதிப்பார் என்று மக்கள் கூறுகின்றனர். அத்தெய்வத்திற்கு இங்குள்ளோர் பயபக்தியுடன் விசுவாசமாக நடந்து வருவதை நடைமுறையில் கண்டு கொள்ள முடியும்.

ஐயனார் கோவிலுக்கு பக்கத்தில் மணியகாரன் வீதி செல்கின்றது. இவ் வீதி கற்பிட்டி பாதையில் கரம்பை என்ற இடத்தில் தொடங்கி நாயக்கர்சேனை, புழுதிவயல், கடையாமோட்டை கனமூலை, பெருக்குவட்டான், கொத்தான் தீவு, கட்டைக்காடு, பூனைப்பிட்டி ஆகிய ஊர்களின் ஊடாக உடப்பு வரையும் நீண்டு செல்கின்றது. இப்பகுதியில் தமிழ் பேசம் மக்களே பெரும்பான்மையாக வாழ்ந்து வருகின்றார்கள்.மணியகாரன் என பெயர் இப்பாதைக்கு ஏற்பட்டமைக்கு காரணம் போக்குவரத்துக்கள் குறுகியதாக காணப்பட்ட காலத்தில் தபாற்காரன் மணியடித்து தன் வரவைத் தெரியப்படுத்தி இவ்வழியாகச் செல்வானாம். நாளடைவில் இக்காரணப்பெயர் ஏற்பட்டுள்ளது.

1960ம் ஆண்டு தொடக்கம் இவ்வூரில் ஒரு இந்துப்பாடசாலை இயங்கி வரு கின்றது. இப்பாடசாலையை நிறுவியவர் பேராசிரியர் டாக்டர் அ.சின்னத்தம்பி அவர்கள். காணி வழங்கியவர் வீ. கே.சதாசிவம் செட்டியார் அவர்கள். ஆரம்பத்தில் இப்பாடசாலை யாழ் சைவ அபிவிருத்திச் சங்கத்தின் மேற்பார்வை யின் கீழ் இயங்கி வந்தது. இதன் செயலாளர் திரு. இராசரத்தினம் அவர்கள். இவர் பல வழிகளில் இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு உதவியுள்ளார்.அரசு பொறுப்பேற்றதின் பின் அரசாங்க பாடசாலையாக இயங்கி வருகின்றது.

புதிதாக அமைக்கப்பட்டுள்ள ஆலயம் சிறிதாக இருப்பினும் ஆகம முறைப்படி அமைக்கப்பட்டுள்ளது. மூல விக்கிரகம் இருக்கும் கருவறை, தூபி (மேற்கூரை) கருவறையின் முன் அர்த்த மண்டபம், மகாமண்டபம், நிருத்த மண்டபம் ஆகிய மண்டபங்களைக் கொண்டுள்ளது. முன் முகப்பு கோபுரத்தில் மூல விக்கிரக மூர்த்தி ஹரிஹர புத்திரர் ஐயனார் பூரணி, பொற்கலை சமேதரராய் காட்சி கொடுக்கின்றார். தூபியிலும் அற்புதக் காட்சிகள் இடம் பெற்றுள்ளன.யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திரு. மகேஸ்வரன் ஆசாரியார் கட்டட வேலைகளைப் பொறுப்பேற்று முடித்து வைத்தமை பாராட்டத்தக்கது. அவரை இப்பணிக்கு அமர்த்திக்கொடுத்த பெருமைக் குரியவர் உடப்பூர் பெரி.சோமஸ்கந்தன் ஆசிரியர். அவருக்கும் எமது நன்றி.

ஐயனார் கோவில் பரிபாலன கர்த்தா திரு. சதாசிவம் செட்டியார். அவருடைய குடும்பத்தினர் தலைமுறை தலைமுறையாக ஆலயத்தை பேணி வந்திருக்கின்றனர். புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள ஆலயத்துக்கு கூடுதலான நிதியை வழங்கி திருப்பணியை நிறைவேற்றி வருபவர்கள் திரு. சதாசிவம் செட்டியாரும் அவருடைய மகன் செல்வன் கோபாலநாதனும் ஆகும். அவருடைய மூத்த மகன் திரு. காசிநாதன் பூசகர் தங்கி இருப்பதற்கு காணியும் வீடும் வழங்கியுள்ளார். பொதுமக்களும் நிதியுதவி வழங்கியுள்ளார்கள். கோயிற் திருப்பணி வேலைகள் தொடங்கும் வேளை ஆலய பரிபாலன சபையொன்று நிறுவப்பட்டது. அதன் தலைவர் திரு. V. K சதாசிவம் செட்டியார், செயலாளர் திரு.K. பசுபதிப்பிள்ளை, பொருளாளர் செல்வன் S. கோபாலநாதன். இன்றும் அச்சபையே செயலில் ஈடுபட்டு பணியாற்றி வருகின்றது.

கும்பாபிஷேகம் இனிது நிறைவுற
ஐயனை வேண்டுகின்றோம்

மங்கள நாளில் நங்கையர் விரும்பும்
மனம் கவர் நகைகட்கு மங்கையர்
மனதில் இடம் பிடித்திட்டோர்

නිව් නදියා
ජුවලරි මාර්ට්
103 A බසාර් වීදිය
හලාවත

நிவ் நதியா
ஜுவலரி மார்ட்,.
103 A, பஜார் வீதி,
சிலாபம்

# NEW NADIYAA JEWELLERY MART

***103A, BAZAAR STREET,***
***CHILAW.***

PHONE : *032 - 2475*
*032 - 2733*

## அமரர் பேராசிரியர்

## டாக்டர் அ. சின்னத்தம்பி

### *அவர்களுக்கு வந்தனை*

மானிப்பாய் ஈன்ற மாணிக்கமே மரகதமே
காணிக்கை உனக்கு கவிதை அனைத்துமே
பேணி வளர்த்தாய் தமிழை சைவத்தை
ஏணி வைத்தாய் சமூகம் ஏறிடவே.

இளமையிற் கொண்ட எண்ணம் நிறைவேற
பலமாய் உழைத்தாய் பண்நெடு நாளாய்
உலக உயிர்கள் உய்யக் கற்றாய்
வளமாய் சிறப்பு வைத்தியத் துறையை.

உள்வெளி நாட்டில் பட்டங்கள் பெற்றாய்
பல்கலைக்கழகம் தன்னில் பலமாய் உழைத்தாய்
நல் பல நூல்கள் நலமாய் படைத்தாய்
இல்லையினி என்றளவு மொழி பெயர்த்தாய்.

மருத்துவப் பேராசானாய் வலம் வந்தாய்
பெருமை சேர்க்கும் மாணாக்கரை தந்தாய்
நருத்தனம் புரியும் புகழ் கொண்டாய்
வருத்தம் தீர்க்கும் நல் மருந்தானாய்

சங்கங்கள் பலவற்றில் தலைமை ஏற்றாய்
அங்கங்கள் பலவாய்ந்து நோய் தீர்த்தாய்
ஆங்காங்கு பல சைவப் பள்ளிகள் தந்தாய்
நீங்காத புகழை சூடிக் கொண்டாய்

அவர் அவர்க்கு ஏற்றபடி பழகுவாய்
எவர் எதை பகரினிம் கேட்பாய்
இவர் குணம் படைக்கும் குணவான்
நிகர் ஈகையில் கர்ணன் இவர்க்கு

புத்தளம் மாவட்டம் கண்ணில் படவே
மத்தளம் கொட்டினாய் சிவநெறி போற்றி
மருதங்குளம் குசலை நாயக்கர்சேனை ஊர்களில்
சமயவளம் கொழிக்க பாடசாலைகள் சமைத்தாய்

சிறப்புத் தேர்ச்சி பெற்ற ஆசான்களை
திறப்பு கையில் உடன் கொடுத்தனுப்பி
மறுப்பு இன்றி உடன் பணியை
சிறப்பாய் செய்து முடிக்க வைத்தாய்

கல்வியும் சைவசமயமும் வளர இப்பகுதி
கல் மைல்கல் நீர்தான் ஐயா
நல்ல செழுமை இங்கு நாளுக்குநாள்
சொல்ல கற்கண்டாய் இனிக்குது வாய்

இந்தப் பாரினில் உயர்ந்த பண்பாளா
சுந்தரச் செம்மல் ஐயா சின்னத்தம்பி
உந்தன் இறையடி மலரணையாக அமையட்டும்
வந்தனை உமக்கு வந்தனை உமக்கு.

**புத்தள மாவட்டம் வாழ்**
**சைவமக்கள் சார்பில்**

*கே. பசுபதிப்பிள்ளை*

# சித்திரைச் செவ்வாய் விழா

– உடப்பு பிரதேசம்

## ஒரு நாட்டுப்புறவியல் நோக்கு

K. ஸ்ரீகந்தராசா. B.A.(CEY) Dip - in - Ed S.L.P.S.I.

உடப்பு கிராமம் தனித்துவமான வழிபாட்டமிசங்களைக் கொண்டுள்ளது.புராதன இனக்குழு சார்ந்த சமய நம்பிக்கை களையும் சடங்குகளையும் அங்கு காணலாம். அங்குள்ள பெரும்பாலான ஆலயங்கள் கிராமியப் பெண் கடவுளர்களை மூலமூர்த்திகளாகக் கொண்டு ள்ளன. நவீன சைவாகம மரபுகளை விட கிராமிய வழிபாட்டு முறைகளும் சடங்கு களுமே கோவில்களைப் பெருமளவு ஆக்கிரமித்துள்ளன எனக் கூறலாம். நாளாந்த வாழ்வியல் எதிர் பார்ப்புகள் என்பவற்றிலும் இந்தத் தெய்வங்களின் மீதே முழுவதும் சார்ந்துள்ள ஆழ்ந்த சமய நம்பிக்கைகள் நிலவி வருகின்றன. இந்த நம்பிக்கைகளின் வெளிப்பாடாக கோவில் சாராத விழாக் களையும் கூட அவர்கள் இயற்றுகின்றனர் ஆண்டு தோறும் சித்திரை மாதத்தில் இடம் பெறும் "சித்திரைச்செவ்வாய்" மிகவும் முக்கியமாக கூறக்கூடிய விழாவாக அமைந்துள்ளது.

சித்திரைச் செவ்வாய் விழா மாரியம்மன் வழிபாடாகவே அமைந் துள்ளது கிராமப்புறங்களில் மாரியம்மன் வைசூரி, சின்னம்மை பொக்கிளிப்பான் முதலான தொற்று நோய்களைத் தீர்த்து வைக்கின்ற காக்கின்ற ஒரு தெய்வமாகப் போற்றப்படுகின்றாள். முத்து மாரியம்மன் என்பதிலுள்ள "முத்து" என்ற அடை அம்மை நோயின் வெளிப்பாடான கொப் புளங்களை உருவகப்படுத்து கின்றது.

மாரியம்மனின் சினம் காரண மாகவே கிராமங்களில் வரட்சி ஏற்படுவ தாகவும் அதன் விளைவாகவே மேற்கண்ட தொற்றுநோய்கள் பரவுவதாகவும் கிராமத்து மக்கள் நம்பிக்கை கொள் கின்றனர்• பொதுவாகவே மாசி, பங்குனி, சித்திரை மாதங்களில் இப்பிரதேசப் புலங்களில் கொடும் அகோர வெய்யிலின் உக்கிரத்தைக் காணலாம். "அக்கினி நட்சத்திரம்" என மக்கள் குமுறும் காலம் இதுவே. வேனிலின் உக்கிரத்தால் இக்காலத்தில் கண்ணோய் உட்பட அம்மை நோயின் பற்பல நோய்ப்பிரிவுக் கூறுகள் தோன்றுகின்றன. தற்காலத்தில் பெருமளவு சுகாதார வசதிகளால் இந்நோய்கள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் ஏனைய பிரதேச மக்கள் இவற்றுக்கு சமயரீதியான முக்கியத்துவத்தை வழங்காவிடினும் அந்நோய்கள் முன்னொரு காலத்தில் பலரை உயிர்ப்பலி கொண்ட சம்பவங்கள் உடப்பில் நிகழ்ந்த மையால் மாரியம்மன் அருள் வேண்டி அத்தெய்வத்தைப்பற்றிப் பிடித்துள்ளனர். அந்த அம்மைக்காக நேர்த்திகள் கோரினர். விழாக்கள் இயற்றினர். பெரிய அம்மையினால் பீடிக்கப்பட்டோர் மாரியம்மன் ஆலயத்திற்குச் சென்று அவள் திருவருளை இரந்து வழிபாடியற்றி நோய் தீர்ந்து தம்மைப் புரந்த தெய்வத்திற்காக "குளிர்த்தியை" நிறைவேற்றுவது இன்றும் காணப்பட்டு வரும் மரபு.

ஒரு குறித்த காலத்தின் தேவை யையொட்டி இயற்றப்படுகின்ற சடங்குகள் அத்தேவை மறைந்த பின்னரும் இயற்றப்பட்டு வருவது நாட்டுப்புறப் பண்புகளில் நாம் காணும் முக்கிய அம்சமெனலாம். அம்மை நோயினால் பீடிப்பவர்கள் மிகஅருந்தலாகவே உள்ள இக்காலத்தில், அம்மை நோயின் கொடூர த்தை நீக்க வேண்டி இயற்றப்பட்ட அந்தச் சடங்கு, அந்த மரபின் எச்சமாக இன்றும் நிறைவேற்றப்பட்டு வருகின்றது.

## விழாவின் தொடக்கம்:

சித்திரைப்புத்தாண்டு பிறந்த முதலாவது செவ்வாய் தினத்தில் பருவமடையாத ஆனால் பருவத்தை ஓரளவு எட்டிப் பிடித்த கன்னியர் எழுவர் ஒன்பதின்மர், பதினொருவர் என்ற ஒற்றையெண் தொகையில் கூடி முளைப் பாத்திகளில் நவதானியங்களைப் பதிப்பர்.

நவ தானியங்களை வீடு தோறும் இருந்து பெறுவர். அவ்வாறு பெறச் செல்லும்போது வீடுகளின் வாசலருகே சென்று பின் வருமாறு பாடுவர்

*"கடல சிறு பயறு*
*காணம் மணிப் பயறு*
*தங்க முத்து நாச்சியர்க்கு*
*எங்கும் சிறு பயறு"*

இவ்வாறு பாடும்போது வீட்டிலுள்ளோர் பயபக்தியுடன் தானியங்களை வழங்குவர் அல்லது ஒரு தொகை நிதியை வழங்குவர். இவ்வாறு பெறப்பட்ட தானியங்களை விழா இடம் பெறவுள்ள ஒரு வளவில் அமைந்துள்ள ஒரு இல்லத்தில் ஒரு புனிதமான அறையில் பாத்திகளில் சாணத்தினால் நிரப்பி அதன் மேல் இட்டு நீரூற்றி வைப்பர். ஒவ்வொரு நாளும் காலை நேரம் குளிர்ந்த நீரை ஊற்றி வருவர். ஒவ்வொரு நாள் விட்டு மாலை நேரத்தில் அந்த முளைப்பாத்திகளை விழா இடம் பெறும் ஸ்தானத்தில் சுற்றிவர வைத்து "செவ்வாய்க் கொட்டு" எனப்படும் பாடலைப்பாடி சுற்றி வட்டமடித்துக் கொட்டி வருவர். இப்பாடல் நாட்டுப்புறப் பாடல் மரபைச் சார்ந்தது. சுவை நலம் பயப்பது.

*"ஓராம் நாள் முளை எழுந்து*
*ஓங்கி வளருமாம் மாரி முளை*
*ஈராம் நாள் முளை எழுந்து*
*இரட்டணம் கொட்டுமாம் மாரி முளை*
*மூணாம் நாள் முளை எழுந்து*
*முத்தம் கொடுக்குமாம் மாரி முளை*
*நாலாம் நாள் முளை எழுந்து*
*நையாண்டி கொட்டுமாம் மாரிமுளை*
*அஞ்சாம் நாள் முளை எழுந்து*
*கொஞ்சி விளையாடும் மாரி முளை*
*ஆறாம் நாள் முளை எழுந்து*
*அடுக்கி எழும்புமாம் மாரி முளை*
*ஏழாம் நாள் முளை எழுந்து*
*ஏளனம் செய்யுமாம் மாரி முளை*
*எட்டாம் நாள் முளை எழுந்து*
*எட்டிப் படருமாம் மாரி முளை*
*ஒன்பதாம் நாள் முளை எழுந்து*
*ஒய்யாரம் கொட்டுமாம் மாரி முளை*
*பத்தாம் நாள் முளை எழுந்து*
*பற்றிப்படருமாம் மாரி முளை"*

இவ்வாறு முளைப்பதியமிட்டு நீரூற்றி அதன் வளர்ச்சியை நோக்கியும் இளந்தளிர்கள் மெல்ல மெல்லத்தலை காட்டும் நிலை கண்டும் அவர்கள் களிகொண்டு பாடுவர். இந்த முளைப் பதித்தல் நிகழ்ச்சி ஒரு வளச்சடங்கின் அம்சமாகவும்

கொள்ளப்படலாம். புத்தாண்டு பிறந்ததும் அனைத்து வளங்களையும் தரவேண்டும் என்று வேண்டுதல் செய்வது ஒரு புறமிருக்க பயிர்களின் வளர்ச்சி பற்றிய கற்பனை உருவகமாக நினைப்பது புராதன தமிழ் மரபுகளை நினைவூட்டுகின்றது. மழையும், வளமும், மனித விருத்தியும் வேண்டிச் செய்யப்படும் சடங்காகவும் நாம் இதனைக் கொள்ளலாம். கன்னிப்பெண்கள் தூய்மை மிக்கவர்கள். அவர்கள் வளர்க்கும் பயிர்கள் தூய்மைமிகுந்து பொலிவு தருகின்ற வலுமிக்க மனித சக்தியை வழங்கும் சடங்காக கொள்ளத்தக்கது. அவர்கள் பின் வருமாறும் தொடர்ந்து பாடுவர்.

*"செவ்வாயில் எருவெடுத்து*
*சிவந்த சித்திரக் கோலமிட்டு*
*கோலமிட்டுக் குரவையிட்டு*
*குங்குமத்தால் நீராடி*
*நீராடித் துகிலுடுத்தி*
*நீல வர்ணப் பொட்டுமிட்டு*
*பொட்டுடனே பூமணங்கள்*
*பூமணங்கள் பளபளக்க*
*பாய்ந்து அடிங்கடி சித்திரப் பெண்காள்.*
*சித்திரை மாத்தையிலே*
*சிறந்த செவ்வாய்க்கிழமையிலே*
*பங்குனி மாத்தையிலே*
*பாரச்செவ்வாக்கிழமையிலே*
*வெள்ள விளாம்பழமாம்*
*காயோடயும் பூவோடயும்*
*முட்ட முருங்கக்காய்*
*முகிழ் அழியாக் கத்தரிக்காய்*
*கத்தரிக்கா ரெண்டு துண்டு*
*கருவாடு மூணு துண்டு*

முன்னைய காலங்களில் மூன்று "செவ்வாய்" கள் நடத்தப்பட்டதாகத் தெரிகிறது முளைப்பதித்த இரண்டாம் செவ்வாய் தினத்தன்று பின்னேரம் விழா நடைபெறும் இடத்தில் சிறிய மேடையொன்றில் கும்பம் ஏற்றி முளைப்பாத்திகளைச் சுற்றி வைத்து செவ்வாய்க் கொட்டுப் பாடிக் கொட்டி ஆடுவர். பின்னர் அவற்றை நள்ளிரவில் கடலில் கலந்து விடுவர்அதேவேளை அன்றைய தினம் புதிதாக மீண்டும் பாத்திகளில் முளைபதியம் செய்யப்படும் • அவ்வாறு பதிக்கப்படும் பாத்திகளில் வழமை போல நீருற்றி ஒன்று விட்டொரு நாள் அதே இடத்தில் வைத்து பாட்டுப்பாடிக் கொட்டியாடுவர். மறு செவ்வாய் தினத்தன்று பின்னேரம் முற்கூறியவாறே முற்றத்தில் வைத்துக் கும்பம் எற்றி முளைப்பாத்திகளைச் சுற்றி வைத்துப் பாடியாடிய பின் நள்ளிரவில் கடலில் கலப்பர். அன்றைய தினம் மீண்டும் தானியங்கள் பதிக்கப்பட்டு அடுத்து வரும் மூன்றாம் செவ்வாய் தினத்தன்றே கோலாகலமாக பெருவிழாவாகக் கொண்டாடப்படும் என்று கூறுவர். தற்போது இவ்வாறு மூன்று செவ்வாய்கள் நடத்தப்படுவது தவிர்க்கப்பட்டு இரண்டாம் செவ்வாய் தினத்தன்றே விழா கொண்டாடப்பட்டு வருகின்றது.

## விழாவன்று இடம் பெறும் நிகழ்ச்சிகள்:

உடப்பு கிராமத்தின் முன்னோர் இராமேஸ்வரப் பிரதேசத்தில் இருந்து

தோணிகளில் வந்து குடியேறியோர் என்று கூறப்படுகின்றது.இவர்கள் உடப்பின் பல்வேறு பகுதிகளில் வேறுவேறாகத் தமது உறவினர்களுடன் குடியேறியிருந்தனர் என்று தெரிகின்றது.இப்பகுதிகளை "வளவு" என்பர். "செவ்வாய் விழா" இந்தவளவுகளிலேயே இடம் பெற்றது.அது கிராமத்தின் சமூகக் கூட்டுறவு விழாவாக இருந்திருக்க முடியாது என்பதை நாம் அனுமானிக்கலாம். அம்மை நோயால் பாதிக்கப்பட்ட வளவைச் சேர்ந்தவர்கள் மாரியம்மனை வணங்கவும் வேண்டவும் தமது வளவுகளுக்குள் இந்த விழாவை நடத்தியிருக்கலாம்.

விசேட தினத்தன்று மாலையில் குறித்த வளவில் குறித்த இடத்தில் கவர்ச்சிகரமான ஏற்பாடுகளைச் செய்வர். அதற்கென தனித்த ஒரு அரங்கமமைத்து வாசற்புறத்தைத் தவிர்த்து ஏனைய மூன்று பக்கங்களைச் சுற்றி வண்ண வண்ண ஆடைகளால் அலங்கரிப்பர். நான்கு பக்கங்களும் வாழை மரங்கள் கட்டித்தோரணங்களைத் தொங்க விடுவர். இளநீர்க்குலைகள் வாழை மரங்களில் தூங்கி அழகுடன் பொலியும். எல்லாப்பக்கங்களிலும் வேப்பிலைக் கொத்துக்கள் தொங்கி விளங்கும். அந்த விழா அரங்கம் கிட்டத்தட்ட ஒரு ரதம் போலக்காட்சி தரும். நான்கு பக்க மூலைகளிலும் நான்கு உரல்கள் வைக்கப்பட்டு அதனுள்ளே தென்னம் பாளையின் பூக்களை விரித்து செருகியிருப்பர். அதனை மருவென்று அழைப்பர்.

உள்ளே மேசையில் வெள்ளைத்துணி விரிக்கப்பட்டு முளைப்பாத்திகள் வட்ட வடிவில் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும். குத்து விளக்குகள் கற்பூரம், சாம்பிராணி வாசனை பக்தி உணர்வைப் பிரதிபலிக்கும். அன்றைய விழாவின் தொடக்க நிகழ்ச்சியாக விநாயகரை முன்னிறுத்தி வழிபடுவர். அவரை சாணத்தினால் ஒரு உருவ வடிவிலே செய்திருப்பர். பக்கத்தில் செங்கற்பிட்டியார் என எழுதி வைத்திருப்பர்.சிலர் அதனைச் செங்கற் பிராட்டியார் எனவும் கூறுவர். விராட்டி என்பது சாணவிறகைக் குறிக்கும். செங்கல் விராட்டியார் என்பதன் வழுவிய வடிவமாக அதனைக் கொள்ளலாம்.

விநாயகர் வழி பாட்டில் திருமணம் முடித்த சுமங்கலிகளே கலந்து கொள்வர். அவர்கள் பின் வருமாறு பாடுவர்.

*யானை வரும் யானை*
*அசைந்து வரும் யானை*
*பள்ளத்தைக் கண்டால்*
*பதுங்கி வரும் யானை*
*கும்பத்தைக் கண்டால்*
*குலைந்து வரும் யானை*
*யானை வந்து இறங்கவே*
*அல்லி அக்கா நாட்டவே*
*நேரில் வந்து இறங்கவே*
*செல்வம் பொலியவே*
*மதுரை கொண்ட ஐயனார்*
*குதிரையிலே வாறார்*
*மணவாளப் பெண்கள் எல்லாம்*
*குறட்டையைத் துறந்து*
*குலவையை விடுங்கோ*

*அச்சங்கம்பு வெட்டி*
*அடியலிந்து*
*தஞ்சாவூரினிலே சாணி எடுக்கப்*
*போகையிலே*

*மதுரை கொண்ட ஐயனார்*
*குதிரையிலா வாறார்*
*மணவாளப் பெண்கள் எல்லாம்*
*குறட்டையைத் துறந்து*
*குலவையை விடுங்கோ...*

இவ்வாறு பாடிக் குரவை இடுவர். பின்னர் செங்கற் பிட்டியாருக்குச்சோறு ஊட்டுவர். சோறு ஊட்டும் போது பின்வருமாறு பாடிப்பாடி ஊட்டுவர்

*"செங்கற்பிட்டியாரே சோறு தின்னும்*
*ஆலையிலையிலே சோறு தின்னும்*
*அத்தியிலையிலே சோறு தின்னும்*
*புங்க இலையிலே சோறு தின்னும்*
*புளிய இலையிலே சோறு தின்னும்"*

இவ்வாறு பாடி முடித்த பின்னர் கும்பம் ஏற்றும் நிகழ்ச்சி இடம் பெறும். சமய தீட்சை பெற்றோர் அல்லது கோயிற் குருக்கள் அல்லது கோயிற் பூசகர் எவராவது கும்பம் ஏற்றுவர். வெள்ளிக் குடத்தில் நீர் நிறைத்து வேப்பிலைக் கற்றைகளைக் குவித்து வைப்பர். கும்பத்தில் திருநீறு, குங்குமம், சந்தனம் சார்த்தி மாலைகள் அணிவித்து அலங்கரிப்பர். மாரியம்மனே கும்ப வடிவில் அங்கே அமர்ந்துள்ளாள் என்பதே அதன் பொருள்.

அடுத்த நிகழ்ச்சியாக முளைப்பதித்த கன்னிப்பெண்களே முதலில் பாடிக் கொட்டும் மரபு உண்டு. மாரியம்மனை வாழ்த்திப்பாடுவர். அவளது வல்லமை அருட்சக்தி தனைப் புகழ்ந்து போற்றுவர். நோய்கள் துன்பங்களிலிருந்து பாதுகாக்குமாறு பாடுவர். மாரியம்மன் தாலாட்டு என்ற நூலிலிருந்து முக்கிய சில பகுதிகளைப் பாடியாடுவர். மாரியம்மன் தாலாட்டு அம்மை நோய் பீடித்த வீடுகளில் நோயாளர் வருந்தும்போது அவ்வருத்தத்தைத் தீர்த்து ஆறுதல் தரும் என்ற நம்பிக்கையில் கிராமப்புறங்களில் பக்தி சிரத்தையுடன் பாடப்பட்டு வருகின்றதுஸ்ரீ இங்கே அது அம்மை நோயின் அகோரத்தில் இருந்து பாதுகாக்கும் கவசமாகவும் பாதுகாத்தமைக்கு நன்றிக் கடனாகவும் பாடப்படுகின்றது எனக் கொள்ளலாம்.

*"மாயி மகமாயி மணி மந்திர சேகரியே*
*ஆதி உமையவளே ஆதி சிவன் தேவியரே*
*மாரித்தாய் வல்லவியே மகராசி காருமம்மா*
*மாயன் சகோதரியே மாரிமுத்தே வாருமம்மா"* என்றும்

*"நெருப்பம்மா உன் சொரூபம் நிஷ்டூரக் காரிகையே*
*அனலம்மா உன் சொரூபம் ஆஸ்தான மாரி முத்தே*
*தணலம்மா உன் சொரூபம் தரிக்க முடி போதாது*
*அண்டா நெருப்பேயம்மா ஆதி பரமேஸ்வரியே"* என்றும்
*"மங்கள விநோதி மாதாவே கண் பாரும்*
*ஏழைக் கிரங்காமல் இப்படியே நீ இருந்தால்*
*வாழ்வது தானெக்காலம் வார்ப்புச் சிலையாளே*
*ஆயி மகமாயி ஆரணம் சொல் காரணியே*

*மாயி மகமாயி மணிமந்திர சேகரியே*

*இரங்கிரங்கும் தாயாரே எங்களைக்காப்பாற்றுமம்மா"*

என்றெல்லாம் பாடுவர். துரோபதை குறம், வள்ளி குறம், எனும் நாட்டார் கதைப்

பாடல்களிலுள்ள நாட்டு வளங்களையும் நயமிக்க உரையாடற் பகுதிகளையும் இடையிடையே சேர்த்துப்பாடுவர். பாடுவதில் புலமையும் பயிற்சியுமுடைய ஒருவர் பாடப் பெண்கள் அதனைப் பாடிக் கொட்டி யாடுவர்.

பின்னர் பருவமெய்திய பெண்கள் சுமங்கலிகள் ஆடவர்கள் எவரும் செவ்வாய் கொட்டிப் பாடி ஆடுவர். செவ்வாய்க் கிழமை இரவு முழுதும் இவ்வாறே ஆண்களும் பெண்களும் மாறி மாறிக் கும்மி கொட்டிப் பாடுவர்.

மேசையிலே படையலாக ஒவ்வொருவரும் வெண்கலப் பாத்திரத்தில்அல்லது பனையோலைப் பெட்டியில் செவ்வாய் எனப்படும் பல காரங்களுடன் கடலை, பயறு, சோறு, கத்தரிக்காய், வாழைக்காய், பாகற்காய், பயற்றங்காய், கசுவிதை, பலாவிதை என்பவற்றின் பொரியல் முட்டைப் பொரியல் என்பவற்றை இட்டு வைத்திருப்பர்.

பச்சையரிசியை ஊறவைத்து மாவாக்கி வறுத்துச் சீனியைக் காய்ச்சிக் கருக வைத்துக் கலந்து பதமாக்கிச் செய்யப்படும் பலகாரமே செவ்வாய். அது சதுரவடிவமாக அல்லது வட்ட வடிவமாகவும் அமையலாம். ஐந்து பலகாரங்களை ஒன்றாக ஒட்டிச் செய்வர். ஏறத்தாழ ஐந்து அல்லது ஆறு அங்குலம் உயரமானதாக படிவரிசை முறையில் கீழ்ப்பகுதி அகன்று படிப்படியாக குறைந்து செல்லும் தன்மையில் அமையும். அதன் மேலே நான்கு. ஓரங்களிலும் ஏறத்தாழ மூன்று அல்லது நான்கு அங்குல உயரமான ஒவ்வொரு ஈர்க்கில்களை வைத்து அவை ஒவ்வொன்றிலும் மாவாலான குருவிகளை இணைத்திருப்பர். செவ்வாய்ப்பலகாரத்தில் நடுப்பகுதியில் நான்கு பக்க ஈர்க்கில்களுக்கு ஒரு அங்குலம் அளவு குறைந்தளவு கொண்ட ஈர்க்கிலை இணைத்து அதன்மேல் குடைபோன்ற வடிவத்தை மாவால் செய்து இணைத்திருப்பர்.

சிலர் செவ்வாய்ப் பலகாரத்தை அம்மனின் தேர் எனவும் நடுப்பகுதியைக் குடை எனவும் குருவிகளை காவலாளிகள் என்றும் கூறுவர். அப்பலகாரப் பெட்டியுள் ஒரு பந்தின் அரை வட்டத்தை ஒத்த ஒன்றை மாவினால் செய்து அதன் நிறைய சிறு சிறு மணிகளைப் போன்ற உருண்டைகளையும் இட்டு வைத்திருப்பர். இந்த உருண்டைகள் அம்மை நோயின் கொப்புளங்களை உருவகப்படுத்துகின்றன எனக் கூறுவர்.

செவ்வாய்ப் பலகாரத்தை நிலமாகவும் குடை வடிவத்தை நெற்கதிராகவும் கதிர்களைக் கொத்த வருகின்ற பறவைகள் எனக் குருவிகளையும் நாம் கொண்டால் நாட்டில் சுபீட்சம் வேண்டிய ஒரு வளச்சடங்காக இந்தப் படையற் சடங்கை நாம் கொள்ள இடமிருக்கின்றது.

புதன்கிழமை காலையின்போது பொங்கல் இடம்பெறும். அம்மை நோயால் அல்லது வேறு நோய்களால் வருந்தியோர் அல்லது துன்பங்களால் வருந்தியோர் செவ்வாய் விழாவில் ஒரு கடனைத் தீர்ப்பதாக நேர்த்தி கொள்வர். அவர்களுட்பட அம்மனின் அடியார்கள் அன்று பூசைப்பொருட்களை வழங்குவர். இன்னும் சிலர் பொங்குவர்.

காலையிலும் பக்தர்கள் அம்மன் பாடல்களைப் பாடிக் கொட்டியாடிக் கொண்டேயிருப்பர் இறுதியில் கும்பத்தைக் கலைத்து நிகழ்ச்சியை முடிப்பதற்கு முன் பின் வரும் பாடலைப்பாடுகின்றனர்.

“வேதாள வேதக்காரியோ தொண்டியம்மா
வேத முக்காடு போட்டு வருவாளோ மாரித்தாயி
அப்பி சடச்சி அல்லோடி தொண்டியம்மா
ஆண்டிச்சி வேதக்காளியே மாரித்தாயி
முக்காலின் மேலிருப்பாளோ தொண்டியம்மா
மூன்று பெயரில் முத்தளிப்பாளோ மாரித்தாயி

*நாற்காலின் மேலிருப்பாளோ தொண்டியம்மா*
*நாலு பொரியல் முத்தளிப்பாளோ மாரித்தாயி*
*சேராலே முத்தளப்பாளோ தொண்டியம்மா*
*தேசமெல்லாம் சுத்தி வருவாளே மாரித்தாயி*
*மரக்காலின் முத்தளப்பாளோ தொண்டியம்மா*
*மற்ற லோகம் பார்த்து வருவாளோ மாரித்தாயி*
*பட்டுக்குடைகள் பிடித்து வருவாளோ தொண்டியம்மா*
*பட்டினமெல்லாம் சுற்றி வருவாளோ மாரித்தாயி*
*முத்துக் குடைகள் பிடித்து வருவாளோ தொண்டியம்மா*
*மூன்று லோகம் பார்த்து வருவாளோ மாரித்தாயி*
*வெற்றிக் குடைகள் பிடித்து வருவாளோ தொண்டியம்மா*
*வீதி எல்லாம் சுற்றி வருவாளோ மாரித்தாயி*
*தங்கப் பல்லக்கு மேலிருப்பாளோ தொண்டியம்மா*
*தரணி முழுதும் சுற்றி வருவாளோ மாரித்தாயி"*

இதன் பின்னர் பூசகர் வந்து பூசை செய்து பிரசாதம் வழங்குவார். கும்பத்தைக் கலைப்பார். முளைப்பாத்தியிட்ட பெண்களுள் ஒருவர் கும்பத்தை தன் தலையில் பயபக்தியுடன் தூக்கி வைத்துக் கொள்ள ஏனைய பெண்கள் முளைப்பாத்திகளை தம் சிரசில் வைத்துக்கொண்டு காளியம்மன் கோயிலை நோக்கிச் செல்வர். வீதியில் மாரியம்மன் தாலாட்டைப் பாடியவாறும் அரோகா என்ற கோஷத்தை எழுப்பியவாறும் செல்வர். காளியம்மன் கோயில் முன் கும்பத்தையும் முளைப்பாத்திகளையும் வைத்துப் பெண்கள் கொட்டிப்பாடுவர்

நாலைந்து வளவுகளில் இருந்து இவ்வாறு கும்பங்களும் முளைப்பாத்திகளும் வருவது வழக்கம். முதன்முதல் வரும் கும்பமும் முளைப்பாத்திகளும் மற்றொரு வளவில் இருந்து கும்பமும் முளைப்பாத்திகளும் வந்த பின்னரே கடலில் கலப்பதற்கு கொண்டு செல்லப்படும்• இல்லையேல் மற்றொன்று வரும் வரை தொடர்ந்து கும்மி கொட்டிக் கொண்டே இருப்பர்.

பின் கடலோரத்திற்குச் சென்று கும்பத்தையும் முளைப்பாத்திகளையும் வைத்து செவ்வாய்க் கொட்டுப்பாடி இறுதியில் பின் வரும் பாடலைப் பாடுவர்.

*வாடாமல் வசங்காமல் வளத்தனம்மா முளையே*
*வையையாற்றின் கரையினிலே போறியம்மா முளையே*
*சிந்தாமல் சிதறாமல் வளத்தனம்மா முளையே*
*தீத்தயாத்திரைக் கரையினிலே போறியம்மா முளையே*

எனப்பாடி கடலில் சென்று மூழ்கி அவற்றை கடலில் கலக்கச் செய்வர். பின் இறுதியில் வீடுகளுக்குச் செல்வர்.கும்பம் மாரித்தெய்வத்தின் உருவகம். முளைப்பாத்திகளில் உள்ள பயிர்கள் மழை, செழிப்பு வளம் மனித விருத்தி என்பவற்றின் உருவகம்,கும்பமும் பயிர்களும்கடலுடன் கலக்கின்ற போது அது பரந்த ரீதியில் மக்கள் மன்னுயிர்க்கு நன்மை பயக்க வேண்டும் என்ற வேணவா அதில் பொதிந்துள்ளதை நோக்கலாம்.

தனித்தனி வளவுகள் இந்த விழாக்களை நடத்திய போதிலும் கிராமத்து மக்கள் அனைவரும் அம்மனின் அடியவராய் விழாக்களைத் தரிசித்து அருள் பெறுகின்றனர் அந்த வகையில் இது சமூகக் கூட்டொருமை மிக்கதுஎனலாம். பால் வேறுபாடின்றி அனைவரும் பங்கு பற்றி மன நிம்மதியும் திருப்தியும் அடைகின்றனர். தனித்து பெண்கள் மட்டும் கலந்து நிகழ்த்தும் ஆடிச் செவ்வாய் விழா என ஒன்றுண்டு அது ஆய்வுக்குரியது.

ஆலயம் தொழுவது சாலவும் நன்று

கும்பாபிஷேகம் சிறப்புடன் அமையட்டும்

மங்கையரின் அழகுக்கு அழகு சேர்க்கும்
தங்க ஆபரணங்களுக்கு

රාමධාස්
ආභරණ මාළිගාව

இராம்தாஸ்
நகை மாளிகை

# RAMDHASS JEWEL HOUSE

NO. 84, BAZAAR STREET, CHILAW

*TELEPHONE:* : 01 - 663422

'அகர முதல எழுத்தெல்லாம்
ஆதிபகவன் முதற்றே உலகு'

அறிவு வளர்ச்சிக்கும் புதினங்கள் அறியவும் தேவையான
பத்திரிகைகளுக்கும் உடல் நலத்தை பேணுவதற்கான
மருந்து வகைகட்கும்

***விநியோகஸ்தர்கள்:-***
*புதிய பூமி, தினமுரசு*
*தினத்தந்தி, ஜனனி,*
*பிஞ்சு, துளிர்*

PHARMACY, GROCERY,
VIDEO LENDING LIBRARY
& FANCY GOODS

**A.DINESH**

**FAIRLY PHARMACY & VIDEO HOME.**
**CHILAW ROAD, MUNDEL**

# வடமேல் மாகாணத்தில் சக்தி வழிபாடு

*எஸ் . நாகராஜன் (சமாதான நீதவான்)*

வடமேல் மாகாணத்தில் இந்துக் கடலோரம் புராதன காலம் தொட்டு, இன்று வரை தமிழ்ப்பண்பாட்டோடு சங்கமித்து சக்தி வழிபாடு நிலை கொண்டிருப்பதை இப்பகுதியில் எழுந்திருக்கும் அம்மன் கோவில்கள் சான்றுபகிர்கின்றன.

வரலாற்றுக்காலத்துக்கு முன் தோன்றிய கோவில்களில் ஒன்று இரண்டு இடிபாடுகளுடையதாகவும், மண் மூடிய நிலையிலும் காட்சி தருவதைக் காணலாம். (உ–ம்) (நாச்சியம்மன் கோவில்) இவை சரித்திர காலத்துக்கு முன் தோன்றி இருக்கலாம் என சரித்திர ஆய்வாளர் சைமன்காசிச் செட்டி தனது " வடமேல் மாகாண ஆலய வரலாறுகள்" என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது கவனிக்கத்தக்கது.

இப்பகுதியில் எழுந்து நிலை கொண்டுள்ள அம்மன் ஆலயங்களை நோக்குமிடத்து இவை இருவித காரண அடிப்படையில் எழுந்திருக்கலாம் (1) நோய் நிவர்த்தி கருதி (2) பாதுகாப்புக் கருதி, முதல் வகையான ஆலயங்கள் எழுவதற்கு பண்டைய காலங்களில் மக்களைப் பீடித்த கொடூரமான நோய்களே காரணமாக இருந்திருக்கலாம் அவற்றைக் கண்டு, அஞ்சி இது தெய்வ நிந்தனை என்று கூறி நோயை ஏற்படுத்துவதும், நீக்குவதும் தெய்வம் என்று, குறைகள் நீக்க வேண்டி அந்நோயை தெய்வப் பெயரிட்டு அழைத்தனர். அத் தெய்வங்களுக்கு ஆலயங்கள் எழுந்தன.

இரண்டாம் வகையான ஆலயங்கள் எழுவதற்கு, மக்கள் பாதுகாப்பற்ற தன்மையில் இருந்தனர், தம்மை, தம்முடைமைகளை பாதுகாத்துக் கொள்வதற்கு, நினைத்த காரியங்களை சாதிப்பதற்கு குறிப்பிட்ட தெய்வங்களை வேண்டி வழிபட்டிருக்கலாம். காலப் போக்கில் அத்தெய்வங்களுக்கு ஆலயங்கள் எழுந்திருக்க வேண்டும் என வரலாறுகள் கூறுகின்றன.

### *இப்பகுதி சக்தி ஆலயங்கள்*

முத்துமாரியம்மன் ஆலயங்கள்

நாச்சியம்மன் ஆலயங்கள்

பத்தினியம்மன் ஆலயங்கள்

திரௌபதையம்மன் ஆலயங்கள்

காளியம்மன் ஆலயங்கள்

கன்னியம்மன் ஆலயங்கள்

இராக்குரிசியம்மன் ஆலயங்கள்

துர்க்கையம்மன் ஆலயங்கள்

இப்படியான இத்தெய்வங்களை இஸ்டமாக வழிபடுமிடத்து குல தெய்வங்களாக இவை மாறியிருக்கலாம். இன்றும் இப்பகுதிகளில் குலதெய்வங்களுக்கு நேர்த்திக்கடன் தீர்த்தல், தம்பிள்ளைகளுக்கு குலதெய்வ பெயர்களை சூட்டி மகிழ்தல் இடம்பெற்று வருவது கண்கூடு.

இன்று இப்பெயர்கள் சூட்டுவது குறைந்து வருகின்றது. பலியிடற் றெய்வங்களுக்கு பலியிடுதல் நீக்கப்படு கின்றது. அரசுடைய பலியிடுதல் தடுப்புச் சட்டம், கல்வி அறிவு வளர்ச்சி இவற்றை கட்டுப்படுத்தி வருகின்றன. ஆலயங்களில் உயிர்ப்பலி இடும் முறை இப்பகுதியில் இருந்து வந்தது. இன்று இவை இல்லை. சில இடங்களிலே மறைமுகமாக ஒன்று, இரண்டு நடப்பதாகவும் தெரிய வருகிறது.

இக்கரையோரப்பகுதியில் கூடுதலான ஆலயங்கள் முத்துமாரியம்மன் ஆலயங்களே. அவற்றை இங்கு தருகின்றேன்.

1. இலவன்குளம் முத்துமாரியம்மன் ஆலயம்
2. கரடிப்பூவல் முத்துமாரியம்மன் ஆலயம்
3. புத்தளம் முத்துமாரியம்மன் ஆலயம்
4. கற்பிட்டி ஆனைவாசல் முத்துமாரியம்மன் ஆலயம்
5. புளிச்சாக்குளம் முத்துமாரியம்மன் ஆலயம்
6. குசலை முத்துமாரியம்மன் ஆலயம்
7. ஆண்டி முனை முத்துமாரியம்மன் ஆலயம்

இப்பகுதியில் முத்துமாரியம்மன் கோவில்கள் ஆங்காங்கு எழுவதற்கு காரணம் இப்பகுதியில் ஏற்பட்ட சின்ன முத்து, பெரியம்மை, பொக்களிப்பான் ஆகிய நோய்களே. தம்மை நோயில் இருந்து தப்பிவித்துக் கொள்வதற்கு சக்திபீடங்கள் அமைத்து வழிபட்டதாக கதைகள் இங்குண்டு.

எமது இந்துசமயம் ஆன்மீகவாழ்வு அரும்பி மலர்ந்து காய்த்து கனியாவதற்கு, உற்றதுணையாக சகலவித, கலை வளர்ச்சிக்கும் கூட்டுவாழ்வுக்கும் சமுதாய விருத்திக்கும் வித்து அவளே, யோக மோட்சம் கொடுப்பவளும் அவளே என்று கருதி இப்பகுதி மக்கள் காலம் காலமாக விழாவெடுத்து வருகின்றனர்.

முத்துமாரியம்மன் ஆலயங்களில் அம்மை நோயினால் பீடிக்கப்பட்டவர்கள் இவ்வாலயங்களுக்கு சென்று நேர்த்தி வைப்பதும், நோய் தீர்ந்த பின் நேர்த்திகள் கொடுப்பதும், நேர்த்திக்கடன்களை தீர்ப்பதற்கு அக்கினிச்சட்டி எடுத்தல் வேப்பிலை எடுத்தல், அங்கப்பிரதட்சனம் செய்தல், செடில் காவடி எடுத்தல், தூக்குக் காவடி எடுத்தல், மாவிளக்கிடுதல், பொங்கல், ஆடு, கோழி, தென்னம்பிள்ளை என்பவற்றை உயிருக்கு உயிராக கொடுத்தல் என்பன இடம் பெறும்.

கடுமையான நோய் கண்டவர்கள் ஆலயம் சேர்ந்த கோயில் காத்தல், வேப்பிலை தடவல், வேப்பிலைப்பட்டை கசாயம் அருந்தல், குளிர்த்திகள் போடல், வேப்பிலையுடன் மஞ்சள் வைத்தரைத்து உடல்பூராவும் பூசல், அம்மன் தாலாட்டு படித்தல் இவ்வாறாக நோய்க்கு பரிகாரம் காண்கின்றனர். ஆண்டி முனை முத்துமாரியம்மன் ஆலயத்தில் இதற்கென விஷேடமாக மண்டபங்கள், அறைகள் அமைக்கப்பட்டுள்ளன. நோய் தீர்ந்த பின் ஆலயக்கிணற்றில் நீராடி விட்டு வீடுபோய் சேருகின்றனர். இன்றும் இந்நிகழ்ச்சியை ஆண்டி முனை ஆலயத்தில் காணலாம்.

நோய்கண்டவர்கள் ஆலயம் செல்லாத இடங்களுமுண்டு. அதற்கு பதிலாக வீட்டையே ஆலயமாக பாவிப்பார்கள். நோய்கண்டவரை மிகபக்குவமாக தொடக்குகள் படாவண்ணம் வைத்திருப்பார்கள். அம்மா பத்திரி இலையாகிய வேப்பிலையை மற்றவர்கள் காணக் கூடியதாக வீட்டுக்கூரையில் தூக்குவர்மச்சம், மாமிசம், வீடுகளில் சமைப்பதை நிறுத்துவர். தெய்வத்துக்கு சடங்குகள் எவ்வாறு நடைபெறுகின்றதோ அவ்வாறு நோய்கண்டவரையும் அம்மா என்றழைத்து மிக புனிதமாக பேணுவர்.

குசலை, கொட்டகை கிராமங்களில் வருடா வருடம் இல்லங்கள் தோறும் குளிர்த்திகள் இடம் பெற்று வந்தன. இன்று ஓரளவு குறைந்து காணப்படுகிறது. ஆலயங்களில் குளிர்த்தி கொடுத்தல் நிகழ்கின்றன.

ஆலயங்களில் விழாக்காலம் தொடங்கி விட்டால் ஊர்முழுதும் புனிதமாகிவிடும். விழாக்காலம் முடியும் வரை மக்கள் விரதம் அனுஷ்டித்தல், சைவ உணவுகளை உட்கொள்ளுதல் வழக்கமாகும். பெரும்பாலான ஆலயங்களில் 10 நாட்கள் திருவிழா நடக்கின்றன. அம்மன் வழிபாடு சிறப்பாக நடைபெறுவது புரட்டாதி

மாதத்தில் வரும் விஜயதசமியோடு கூடிய 10 நாட்களுமாகும். விஜயதசமியை மானம்பூ திருவிழாவாக கொண்டாடுவர். புத்தளம் முத்துமாரியம்மன் கோவிலில் சிறப்பாக இத்திருவிழா வருடா வருடம் இடம்பெறுவது யாவரும் அறிந்ததே. இங்கு திருவிளக்குப் பூசை சிறப்பாக நடைபெற்று வருகின்றது. அத்துடன் கன்னிப் பெண்கள் துர்க்கையம்மனுக்கு எலுமிச்சம் பழத்தினை சிட்டியாக்கி பசுநெய் விட்டு விளக்கேற்றி பூசை செய்து வழிபடுவர். உடப்பில் சித்திரைச் செவ்வாய் அம்மன் வழிபாடு பிரசித்தி பெற்றது.

குசலை மாரியம்மன் ஆலயத்தில் கருக்குப்பனை ஐயனார் கோவிலுடன் கூடிய விசாகத் திருவிழாவை மிகச்சிறப்பாக கொண்டாடி வருகின்றனர்.

இங்கு திருவெம்பாவை, திருக் கார்த்திகை, சித்திரார் புத்திரர் கதை சிரத் தையுடன்கொண்டாடப்பட்டுவருகின்றன.

உடப்பு மகா காளியம்மன் ஆலயம் உடப்பு மக்களிடையே நீண்ட செல்வாக்கை பெற்று விளங்குகின்றது. கடல் நீரில் விளக்கெரித்து வழிபடுதலும் பொங்கல்களும் அடிக்கடி இங்கு நிகழும். பிணக்குகள் வழக்குகள் சூடத்தின் மேல் அடித்து சத்தியம் செய்தல் இவற்றுக்கு கைகண்ட மருந்து இத்தெய்வமாவாள். தீராத நோய் தீர்க்கும் அருட்கடாட்சம் நிறைந்தவளாக காணப்படுகின்றாள்.

முன்னீஸ்வரம் பத்திரகாளியம்மன் ஆலயம் இப்பிரதேசத்தின் தொன்மை வாய்ந்த ஆலயமாகும். சாதி மதபேதமின்றி நாளுக்கு நாள் மக்கள் வெள்ளம் அலை மோதுகின்றது நேர்த்திகள் வைப்பது, நேர்த்திகள் தீர்ப்பது, இவ்வாலயத்தின் முக்கியபங்காகும் சக்தியின் அருள் நாளுக்கு நாள் இங்கு தழைத்து வருவது காண்கின்றோம். ஆடி மாதத்தில் முன்னீஸ்வர சிவன் கோவில் கொடி யேற்றத்துடன் இவ்வாலயத்திலும் கொடியேறி திருவிழா நடைபெறும்.

நரக்களி மகா காளியம்மன் ஆல யமும் இப்பகுதியில் பிரசித்திபெற்று விளங்குவது கார்த்திகை மாதத்தில் 10நாட்கள் திருவிழா சிறப்பாக நடைபெற்று வருகின்றது. பக்தர்கள் அக்கினிச்சட்டி எடுத்தல், காவடி எடுத்தல், கரகம் எடுத்தல் நிகழ்ச்சிகள் இடம் பெறுகின்றன.

புத்தளம் சேனைக்குடியிருப்பு பத்தினியம்மன் ஆலயம் சிறப்புகள் பலவாய்ந்த தலமாகும் தீமிதித்தல், அக்கினிச்சட்டி எடுத்தல், கரகம் எடுத்தல் ஆகியன இவ்வாலயத்தின் சிறப்பு நிகழ்ச்சிகளாகும். நாளுக்கு நாள் நேர்த் திக்கடன்கள் தீர்ப்பதற்கு சனிபகவானுக்கு எள் எரிப்பதற்கு மக்கள் திரளுகின்றனர்.

முந்தல் திரௌபதையம்மன் ஆலயம் சிறப்புகள் பலவாய்ந்ததே. இங்கு வருட உற்சவமாக குருசேத்திர நிகழ்ச்சிகளோடு தீமிதிப்பு விழா இடம் பெறுகின்றது.

இப்படியாக பண்டைக்காலம் தொட்டு இன்றுவரையும் பல இடை யூறுகளுக்கு மத்தியில் தாக்குப்பிடித்து சக்தி வழிபாடு நிலைகொண்டிருப்பதற்கு காரணம் இந்து மதத்தினுடைய மகிமையாகும்.

*"எங்கெங்கு காணினும் சக்தியடா அவள் ஏழுகடல் வண்ணமடா"*

– பாரதி –

குடமுழுக்கு வைபவம் சிறப்புற அமையட்டும்!

மங்களகரமான நகைகளைப் பெற்றிட
நாணயமுள்ள ஸ்தாபனம்

MANGALIKA
JEWELLERS

**NO 16, BAZAAR STREET,**
**CHILAW**

**TELEPHONE**: 032 - 2210

மதுரமர நிழலினிலே மையல் கொண்ட ஐயனே
மனமுருகி கரம் கூப்பி வணங்குகின்றோம்!

அழகிய கண்கவர் தங்க நகைகளுக்கு

**AJANTHA**
**JEWEL HOUSE**

NO 86, BAZAAR STREET,
CHILAW

PHONE: 032 - 2367

# புத்தளம் மாவட்டத்தின் இந்துக் கோவில்களின் தோற்றமும் அதன் சுருக்கமான வரலாறுகளும்

தொகுப்பு P. தம்பித்துரை

## முன்னீஸ்வரம் சிவன் கோவில்

ஈழத்தில் மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய் அமைந்த புராதன சிவ ஆலயங்களில் இதுவும் ஒன்றாகும். இலங்கையின் வடமேற்கில் அமைந்துள்ள சிலாபத்தின் கிழக்குப்பகுதியில அமைந்துள்ளது இச் சிவன்ரோவில். இராமர், வியாசர் முதலானோரும் வேறு பலமுனிவர்களும் இதனை வழிபட்டதாக தட்சணகயிலாய புராணம் கூறுகின்றது. இலங்கை மன்னர்களான கசபாகு, ஆறாவது பராக்கிரமபாகு ஆகியோரும் இத்தலத்தை வழிபட்டுள்ளனர். திருக்கோணேசுவர ஆலயத்திற்குத் திருப்பணி செய்த குளக்கோட்டன் இவ்வாலயத்தையும் புனர்நிர்மாணஞ் செய்து இதற்கென 64 கிராமங்களையும் அளித்துள்ளான் என வரலாறு கூறு கின்றது. கோட்டை அரசனான ஆறாம் பராக்கிரமபாகு கி.பி. 1448 இல் இக் கோவிலுக்கு திருப்பணிகள் செய்து பல கிராமங்களையும் நன்கொடையாக அளித்துள்ளான் எனக் கோவிற் பட்டயங்கள் கூறுகின்றன.

போர்த்துக்கேயர் இலங்கையைக் கைப்பற்றிய போது இக்கோவிலை இடித்தழித்ததுடன் கோயிலுக்குரிய அணிகலன்களையும் மற்றும் விலை மதிப்பான பொருள்களையும் கவர்ந்து சென்றனர். இவர்களினால் அழிக்கப்பட்ட இக் கோவிலை கண்டி அரசனான கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கன் 1753ஆம் ஆண்டில் திருத்தியமைத்து குடமுழுக்குச் செய்வித்துக் கோயிலுக்குரிய சொத்துக்களை கோவிலுக்கே கொடுத்துள்ளான்.

உலகம் படைக்கப்பட்ட போது உலக நன்மைக்காக இவ்வாலயத்து சிவலிங்கம் தோன்றியதென்றும் இதனால் இச்சிவலிங்கத்துக்கு சுயம்புகேரர் எனப் பெயர் வந்ததென்றும் ஐதீகம். இன்று இவ்வாலய சூழலில் பெருமளவு சைவ சமயத்தவர்கள் வாழாதிருப்பினும் நித்திய நைமித்திய பூசைகள் குறைவின்றி நடைபெறுகின்றது. இங்கு நடைபெறும் வருடாந்த உற்சவத்தில் இனமத பேதமின்றி சகல மக்களும் கலந்து கொள்கின்றார்கள்.

ஈழத்தில் எந்த ஆலயத்திலும் காண முடியாத அளவு பிரமாண்டமான கற்பக் கிரகமும் ஸ்தூபியும் இவ்வாலயத்தில் காணப்படுகின்றது. இங்கு அறுபத்து மூன்று நாயன்மார்கட்கும் சிலைவைத்து சிவபூசை வழிபாடாற்றி வருகின்றனர் இது ஈழத்தில் வேறு எந்த ஒரு ஆலயத்திலும் காணமுடியாத ஒன்றாகும். இங்கு இருக்கும் இறைவன் முன்னைநாதர். இறைவி வடிவாம்பிகை. தீர்த்தம்மாயவனாறாகும் (தொகுரு ஓயா).

## முன்னீஸ்வரம் மஹா பத்திரகாளியம்மன் கோவில்

முன்னீஸ்வரம் முன்னைநாதர் ஆலயம் தோன்றிய காலத்தில் இவ்வாலயம் தோன்றியிருக்கலாம் என நம்பப்படுகின்றது. ஆரம்பத்தில் மண்ணாலும் காலப் போக்கில் கல்கட்டிடமாகவும்அமைந்த இக் கோவில் இன்று புதிதாக புனர் நிர்மாணம் செய்யப்படுகின்றது. இராவனேஸ் வரன் காலந்தொட்டு காணப்படும் இவ் வாலயம் ரட்சிங்ககிரி ஐயர், மாயாசிங்ககிரி ஐயர், அழகஅய்யர் இவர்களுக்குப்பின் நாராயணன் கப்பிரானை, சின்னத்தம்பி கப்புராளை, காளிமுத்து கப்புராளை, இலெச்சிராமன் கப்புராளை இப்படியாக கப்புராளைமார் இருந்து வந்துள்ளனர். இன்று ஆதீன பரிபாலன கர்த்தாவாக காளிமுத்து இலெச்சுராமன்செட்டியார் காணப்படுகின்றார்.

பாலஸ்தாபன விழா சிறப்பாக நடைபெற்ற கருவறை அப்படியே இருக்க (மூலமூர்த்தி) திருப்பணி வேலைகள் மிக சிறப்பாக நடைபெற்றுவருகின்றது. தரிசன மண்டபம், அர்த்த மண்டபம், மணி மண்டபம் யாவும் அமையப்பெற்றுள்ளன 45 அடி அகலமான சுமார் 50 அடி உயர மான கோபுரமும் கட்டப்பட்டுள்ளது. விமானம் மிக அழகாகவும் வடிவமைக்கப் பட்டுள்ளது. மூலஸ்தானத்தில் பத்திர காளியம்மனையும் பக்கவாட்டில் பேச்சி யம்மனையும் துர்க்கையம்மனையும் கொண்டுள்ளது.

புது ஆலயத்தின் கும்பாபிஷேக நிகழ்ச்சியை நவாலியூர் விஸ்வநாதக் குருக்கள் நடாத்தவுள்ளார். அம்பிகைக்கும் ஏனைய பரிபாலன மூர்த்திகளுக்கும் உச்சி கால, உதயக்கால, சாயரட்சி, அர்தஜாம, போன்ற நித்திய பூசைகளும் திங்கள், வியாழக்கிழமைகளில் விஷேட பூசைகளும் வியாழன், வெள்ளிக்கிழமைகளில் பாலா பிஷேகமும் நடைபெறும். சந்தன மாலை, எலுமிச்சம்மாலை சாத்தி இங்கு விஷேட பூசைகள் நடைபெறுவதுண்டு. உற்சவ காலங்களில் இந்தியாவில் இருந்து பூக்கள் கொண்டுவரப்பட்டு மாலை சாத்துவார்கள். ஆவணி மாதம் வருடாந்த உற்சவம் நடை பெறுகின்றது. இங்கு ஜாதி மத பேதமின்றி பல்லாயிரக்கணக்கான மக்கள் வழிபட்டு அம்பாளின் அருளைப் பெறுகின்றனர்.

## மருதங்குளம் சிவன் கோவில்

மருதங்குளத்தில் உள்ள இரண்டா வது பழைய ஆலயம் இதுவாகும். இவ் வாலயம் அழகான கோபுரத்துடன் ஆகம முறைப்படி அமைக்கப்பட்டதாகும். இவ் வாலயம் மருதங்குளத்தைச் சேர்ந்த R.S. கண்ணையா என்பவரால் கட்டப்பட்டு அவராலேயே நடத்தப்பட்டது. இன்று இந்த ஆலயத்தின் பரிபாலனப் பொறுப்பை அவரின் வழித் தோன்றல்களே செய்து வருகின்றனர்.

இங்கு கார்த்திகை மாதம் விஷேட பூசையும் அபிஷேகமும் சுவாமி ஊர் வலமும் நடைபெற்று வருகின்றது.

## மருதங்குளம் ஐயனார் கோவில்

சிலாபத்தில் இருந்து கொழும்பு வீதியில் 3 Km தூரத்தில் இடது புறத்து வடதிசையில் அமைந்துள்ளது தான் இம் மருதங்குளம் என்னும் தமிழ் கிராமமாகும். இக்கிராமத்தில் உள்ள மிகப்பழைய ஆலயம் இவ் ஐயனார் ஆலயமாகும்.குளக் குடியிருப்பாகிய இக்கிராமத்தின் காவல் தெய்வமாக இதனை வழிபட்டு ள்ளனர். இவ்வாலயம் எப்போது கட்டப்பட்டது என்பது தெரியாது. ஆனால் இது இக்குடி யிருப்பு தொடங்கிய காலத்தில் கட்டப் பட்டிருக்கலாம். ஆரம்பத்தில் சிறு ஆலய மாக இருந்த இது 1917ம் ஆண்டு திருத் தியமைக்கப்பட்டு இன்று பெரிய ஆலய மாகக் காணப்படுகின்றது.

இவ்வாலயம் ஊரவர்களின் பொது ஆலயமாகும். இவ்வாலயத்தில் ஐயப்பன் சுவாமியும் பிள்ளையார் முருகன் போ்ன்ற மூர்த்திகளும் காணப்படுகின்றன. இவ் வாலயத்தின் சிறப்பு என்னவெனில் குளத்தின் மத்தியில் அமைந்திருப்பதாகும். இவ்வாலயத்தின் தல விருட்சம் அரச மரமாகும்.

## மருதங்குளம் முருகன் கோவில்

இவ்வாலயம் 1964ம் ஆண்டு மருதங் குள இந்து இளைஞர் மன்றத்தினால் கட்டப்பட்டது. ஆரம்பத்தில் சிறு ஆலயமாக இருந்த இது தற்போது மிக வளர்ச்சி கண்டுள்ளது. வயலின் மத்தியில் அமைந் துள்ள இவ்வாலயம் இன்று மிக பிரபல்யம் வாய்ந்துள்ளது. இவ்வாலயம் அண்மையில் புதுப்பிக்கப்பட்டு கும்பாபிஷேகமும் நடாத் தப்பட்டது.

இவ்வாலயம் ஊர்மக்களின் பொது ஆலயமாகும். இவ்வாலயம் கட்டுவதற்கான காணியை வழங்கியவர் காலஞ்சென்ற திரு. காசி ஐயா அவர்களாவார். ஆலயம் கட்டுவதற்கு காரணமானவர்கள் மருதங் குள R.S. குணசேகரா, R.S ராஜகுரு, R.S.M இராமலிங்கம், போன்றோராவர். இவ்வாலயத்தின் வருடாந்த உற்சவம்

மே 1ம் திகதி நடைபெறுகிறது. சிறிய ஆலயமாக இருந்த இவ்வாலயத்தை மாதம்பை திரு. ராஜு முதலாளியவர்கள் திருத்தி பெரியதொரு ஆலயமாக கட்டி எழுப்பினார்.

## சித்தாமடம் ஐயனார் கோவில்

சிலாபம் புத்தளம் வீதியில் மாய வனாற்று வட கரையில் (தெதுறு ஓயா) இக்கோவில் அமைந்துள்ளது. ஒரு காலத்தில் சித்தர்கள் இங்கே தங்கியிருந் ததாகவும் அவர்களே இக்கோவிலின் ஆரம்பக்கர்தாக்கள் என்றும் கூறப்படு கின்றது. அதனால்தான் அவ்விடத்தை சித்தாமடம் என்று அழைக்கின்றனர்.

சித்தர்களின் பின் "திமிலர்" என்பவர்கள் இக்கோயிலை தமது நிர்வாகத்தின் கீழ் கொண்டு வந்ததாகவும் கூறப்படுகின்றது. திமிலர்கள் மாயவ னாற்றுக்கு தென்கரையில் வாழ்ந்து வந்து ள்ளார்கள் . எனவேதான் அந்த இடத்தை இன்றும் "திமிலை" என்றே அழைக் கின்றார்கள். இத்திமிலர் என்பார், பாலங்கள் அமைப்பதற்கு முன் மாயவ னாற்றினை கடப்பதற்கு ஓடம் தாங்கியு ள்ளார்கள். இவர்கள் இந்தியாவில் இருந்து வந்து குடியேறியவர்கள் என்று கூறு கின்றார்கள்.

இன்றுள்ள இவ்வாலயத்தின் கட்டி டங்கள் சுமார் 150 வருடங்கள் பழைமை வாய்ந்ததாக காணப்படுகின்றது. மக்கள் போக்குவரத்துக்காக இப்பாதையை எப்போது பயன்படுத்தினரோ அப்போதே இவ்வாலயம் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் என்று நம்பப்படுகின்றது பயணிகள் ஆற்றை கடப்பதற்கு முன்னும் ஆற்றை கடந்த பின்னும் ஐயனாரை தரிசித்திருக் கலாம். ஓடக்கரை தெய்வமாக இத்தெய்வம் விளங்கி வந்திருக்கின்றது.

இன்று இதன் பூசகராக திரு. சபாபதிப்பிள்ளை இருந்து வருகின்றார். இவர் தனது மூதாதையர் வடிவேல் வடு வாச்சி பரம்பரையில் தனக்கு வந்ததாக கூறுகின்றார். இவரே இன்று நிர்வாகத் தலைவராகவும் இருந்து வருகின்றார். முன்னீஸ்வர ஆலயத்தின் திருவிழாக் காலங்களில் இங்கு கூடுதலான பக்தர்கள் வருவதாகவும் அன்னதானங்கள் இடம் பெறுவதாகவும் நித்திய பூசைகள் நடந்து வருவதாகவும் பூசகர் கூறுகின்றார். இன்றும் இப்பாதையில் போக்குவரத்து செய்பவர்கள் தேங்காய் உடைத்து கற்பூரம் கொழுத்தி காணிக்கை போட்டு வணங்கிச் செல்வது வாடிக்கையாக உள்ளது.

## கொட்டகை ஐயனார் கோவில்

1940ம் ஆண்டளவில் குசலை வாழ்மக்களுக்கு இப்பகுதியில் காணிகள் கிடைக்க இப்பகுதியில் மக்கள் குடியே றினர். முதலில் திரு. பொன்னையா இராசையா அவர்கள் காடுகளை துப்பரவு செய்து ஐயனாரை நேர்ந்து கொப்பும் தேங்காயும் தூக்கிய இடத்தில் தான் இன்றைய கோவில் அமைந்துள்ளது.

இக்கோயிலானது நாளடைவில் வளர்ச்சியடைந்து வவுனியாவில் இருந்து சிலை கொண்டுவரப்பட்டு முதன் முதலில் கும்பாபிஷேகமும் நடைபெற்றது. திரு. பொன்னையா இராசையா அவர்கள் இதன் பூசகராகவும் இருந்து பணியாற்றி யுள்ளார்.

தற்போது இவ்வாலயம் முன்னீஸ் வரம் வை. சுப்பிரமணியக்குருக்கள், ஊரவர்களான இராசையா, முத்துராசா, சிதம்பரம் வேலுப்பிள்ளை, கணபதிப் பிள்ளை நாகரத்தினம் இவர்களது முயற்சியினாலும், ஊரவர்கள் ஏனைய வெளி சைவப் பெருமக்களின் உதவி யினாலும் அழகான கோபுரத்தோடு குளக்கரையில் கம்பீரமாக காட்சி தரு கின்றது. 1992.03.18ந் திகதி புதுக்கோவில் கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது. நித்திய பூசைகள் நடைபெறுகின்ற அதேவேளை விசேட பூசைகளாக பங்குனி உத்திரம், சிவராத்திரி சித்திரைக்கதை, திருவெம் பாவை என்பனவும் நடைபெறுகின்றது.

இன்று இவ்வாலய பரிபாலனச் சபைத்தலைவராக திரு. வேலுப்பிள்ளை,

செயலாளராக திரு .விஜயராசா , பொருளாளராக திரு பூபாலரத்தினம் ஆகியோர் காணப்படுகின்றனர்.

## குசலை மாரியம்மன் கோவில்

சிலாபத்தில் இருந்து சிலாபம் புத்தளம் வீதியில் 5 km தொலைவில் கோட்டைப்பிட்டிச் சந்தியில் இருந்து மேற்கே 1km தொலைவில் குசலை தமிழ் கிராமம் அமைந்துள்ளது.

குசலை மக்கள் ஆரம்பத்தில் கருக்குப்பனை என்ற கிராமத்தில் குடியிருந்ததாக நம்பப்படுகின்றது. இங்கு வாழ்பவர்கள் விவசாயிகளே. கருக்குப்பனை ஐயனார் கோவிலுக்கும் குசலைக்கும் மிக நெருக்கமான வரலாறு உண்டு. முன்னீஸ்வர வரலாற்றுடன் குசலை கருக்குப்பனை குடிகள் இப்பகுதியில் வாழ்ந்து வந்ததாக நம்பப்படுகின்றது.

அம்மை நோயை தடுத்திடவே இம்முத்துமாரியம்மன் ஆலயத்தை அமைத்ததாகவும் ஆரம்பத்தில் மண்குடிசையில் இருந்து இன்று கற்கோயிலாக காட்சி தருகின்றது. போர்த்துக்கீசர் வருகைக்கு முன் இக்கோயில் ஆரம்பிக்கப்பட்டதாக நம்பப்படுகின்றது. மூல விக்கிரகம் முத்து மாரி அம்மனாகும். ஊரவர்கள் சேர்ந்தே இக்கோயிலை கட்டியதாக கூறுகின்றார்கள். பக்கத்தில் வைரவர் கோவிலும் பக்க வாட்டில் பெரிய குளமும் ஆலயத்தின் எதிரில் களனிகளும் காணப்பகின்றன.

நாளாந்த பூசை வழமைகயாக நடைபெற்று வருகின்றது. கருக்குப்பனை ஐயனார் கோவிலுடன் கூடிய விசாகத் திருவிழா மிகச் சிறப்பாக நடைபெறும். மார்கழி திருவெம்பாவை, திருக்கார்த்திகை, சித்திரபுத்திரர் கதை மிக விமரிசையாக நடைபெறும்.

இவ்வூர் பாடசாலையின் அதிபராக இருந்த நெடுந்தீவைச் சேர்ந்த சு. பசுபதி அவர்கள் காலத்தில் சைவ சமய நிகழ்ச்சிகள் இவ்வாலயத்தை பொலிவூட்டியதாக கூறுகின்றார்கள். இன்று இவ்வாலயத்தை ஆலயபரிபாலன சபை பொறுப்பேற்று நடாத்தி வருகின்றது. சபை தலைவராக திரு கண்ணையா விஜயநாதனும் செயலாளராக திரு. இராசமுத்தையா இலட்சுமணஹம் இருந்து வருகின்றனர்.

## கருக்குப்பனை ஐயனார் கோவில

நாற்புரமும் நீரால் சூழப்பட்ட நிலப்பரப்பில் குசலைக் கிராமத்துக்கு மேற்குப்புரத்தில் இக்கிராமம் அமைந்துள்ளது. ஆரம்பத்தில் இக்கிராமத்தில் இந்துக்களே அதிகமாக வாழ்ந்ததாக நம்பப்படுகின்றது. இதற்கு சான்றாக இவ்ஜயனார் ஆலயம் அமைந்துள்ளது. இன்று இக்கிராமத்தில் கிறிஸ்தவர்களே அதிகமாக வாழ்கின்றார்கள். இப்பகுதியில் மிச்ச சொச்சமாக வாழ்ந்து வந்த இந்துக்களும் குசலைக்கிராமத்தை நாடியுள்ளனர். ஒரிரு சைவக்குடும்பத் துடன் காணப்படும் இவ்வாலயம் இன்றும் கம்பீரமாகவே நிற்கிறது. குசலை வாழ்மக்களே இன்று இதன் பரிபாலனப் பொறுப்பை ஏற்று நித்திய பூசைகளை கவனித்து வருகின்றனர். அன்றைய காலங்களைப் போல் பொலிவு இல்லாமல் இன்று இவ்வாலயம் திகழ்கின்றது.

நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்களைக் கொண்டதாக இருந்த இவ்வாலயம் தன் நிலங்களை இன்று இழுந்துள்ளது. ஒரு காலத்தில் அதன் சொத்துக்களினால் வரும் வருமானத்தைக் கொண்டே பூசைகாரியங்களை நிறைவேற்றி வந்துள்ளது. விசாகத்தை முன்னிட்டு 10 நாள் திருவிழா மிக விமரிசையாக நடைபெற்று வந்ததாக கூறப்படுகிறது.

மானிப்பாய் மருதடிப்பிள்ளையாருக்கு தொண்டாற்றி வந்த வைரவநாதன் என்பவரால் இவ்வாலயம் அமைக்கப்பட்டதாகவும் அவரின் வம்சாவழியினரே இவ்வாலயத்தை பாபாலித்து வந்ததாகவும் கூறப்படுகின்றது. விசாக திருவிழாவை முன்னிட்டு நடைபெறும் திருவிழா மிகவும் சிறப்பாக நடைபெறும். அன்று ஐயனார்

தேவியர் இருவருடன் குதிரை வாகனத்தில் குசலைக்கு எழுந்தருளி குசலை குளத்தில் தீர்த்தமாடி குசலை முத்துமாரியம்மன் ஆலயத்தில் பக்தர்கள் தரிசிப்பதற்காக வைக்கப்பட்டு அன்றிரவு மேளதாளங் களுடன் ஊர்வலமாக ஐயனார் கோயி லுக்கு எழுந்தருள்வார். ஈற்றில் ஐயனார் கோயில் அருகே காணப்படும். இந்து மா கடலில் கும்பம் சொரிவதுடன் உற்சவம் நிறைவு பெறும்.

## மானாவாரி சிவன் கோவில்

முன்னேஸ்வர காலத்தோடு ஒட்டிய மூர்த்தி தல விசேடம் பெற்ற அதிபுராதன இன்னுமோர் சிவாலயம் சிலாபப் பகுதியில் உண்டு. முன்னேஸ்வர ஆலயத்திற்கு வடக்கே உள்ள மாயவனாற் றிக்கு வட பாகத்தில் இத்தலம் இருக் கின்றது.

சிவபக்தனாகிய இராவணனைக் கொன்ற இராமனக்குத் தோஷம் பிடித்தது. இத்தோஷத்தை நீக்கி அருளும் படி முன்னேஸ்வரப் பெருமானை இராமன் வேண்ட, மானாவரி திருக்கேதீச்சரம், திருகோணேசுவரம், இராமேசுவரம் ஆகிய இடங்களில் சிவலிங்கப் பிரதிட்டை செய்து வழிபாட்டாற்றினால் தோஷம் நீங்கி அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கையும் முறையே பெற்று வாழ்வாய் எனப் பெருமான் திருவாய் மலர்ந்ததாக புராணங்கள் கூறுகின்றன.அதன்படி தனது தோஷம் நீங்க அறவடிவில் பிரதிஷ்டை செய்யப்பட்ட சிவலிங்கமே மானாவரிக் கோவில் சிவலிங்கமாகும். இங்குள்ள மூர்த்தியின் பெயர் இராமலிங்கம்.

இன்று இத்தலம் ஆதிகுடிகள் சிலரினால் பரிபாலிக்கப்பட்டு வருகின்றது. ஆலயத்தில் தீட்டப்பட்டிருக்கும் ஓவியங்களும் அங்கு காணப்படும் வாகனங்களும் மற்றும் பிற பொருட்களம் ஆலயத்தின் பழைமையை எடுத்துக் காட்டுவனவாக இருக்கின்றன. பொறுப்பு வாய்ந்த சைவ சமய தாபனங்கள் அல்லது சமயப் பற்றுடைய வள்ளன்மையானோர் இப்புராதன ஆலயத்திற் கண்ணோட்டஞ் செலுத்தினாலன்றி இன்று இருக்கும் நிலையில் இருந்து இவ்வாலயம் புனர்நிர்மாணம் பெறமாட்டாது என்று தோன்றுகின்றது. இத்தலத்தின் தீர்த்தம் மாயவனாறாகும்.

இவ்வாலயம் இன்று தனி ஒருவர் நிர்வாகத்தில் உள்ளது. திரு. லக்ஷ்மன் சேர்வை அவர்களே தர்மகர்தாவாவர். அவரின் நிர்வாகத்தின் கீழ் ஆலயக் கிரியைகள் முறையாக நடை பெற்று வருகின்றது.

## வம்மிவட்டுவான் ஐயப்பன்சாமி கோவில்

சுமார் 60 வருடங்களுக்கு முன் காடாக இருந்த இடத்தில் ஒரு புளிய மரத்தடியில் திரு. முத்தையா பூசாரி என்பவர் ஐயனாரை நினைத்து விளக்கு வைத்துள்ளார். அதன்பின் 1974ம் ஆண்டு திரு. சாமித்தம்பி என்பவரின் முயற்சி யினால் இந்த இடத்தில் சிறு ஓலையிலான ஒரு கோவிலை அமைத்து வழிபட்டு வந்தனர். அதன் பின் ஸ்ரீ ஐயப்பதாசக் குருக்கள் வழிகாட்டலின் பேரில் திரு. மகேஸ்வரன் ஆசாரி அவர்களால் கட்டப் பட்டதே இவ்வாலயமாகும். இவ்வாலயம் கட்டுவதற்கு உடப்பு இந்து பரிபாலன சபையும் அன்பளிப்பு செய்துள்ளது.

இவ்வாலயத்தில் 1992ம் ஆண்டு கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது. இக்கோவிலில், தைப்பொங்கலும் மகர சோதியும் சிறப்பாக கொண்டாடப்படு கின்றது. இக்கோவில் உடப்பில் இருந்து வடக்குப் பக்கமாக சுமார் 7km தொலை வில் வம்மிவட்டுவான் என்ற கிராமத்தில் அமைந்து காணப்படுகின்றது.

## திமிலை கன்னியம்மன் கோவில்

சிலாப புத்தளம் வீதியில் திமிலை என்ற இடத்தில் முன்னீஸ்வரக் குறத்தோடு சேர்ந்தால் போல் இவ்வாலயம் அமைந்து காணப்படுகின்றது. சிறு கோயிலாக இருந்தாலும் இதன் சக்தி அபூர்வமான தாகும். மாயவனாற்றில் ஓடம் தாங்கிய வர்களின் குல தெய்வமாக இக் கன்னி யம்மன் ஆலயம் விளங்கி வருகின்றது. இவர்களே இவ்வாலயத்தை அமைத்து வழிபாடு நடாத்தி வருகின்றார்கள்.

பரம்பரை பரம்பரையாக இன்று வரை இவர்களே பராமரித்து வருவதுடன் விளக்கேற்றி பூசைகளையும் செய்து வருகின்றனர். இவ்வாலயத்தில் நேர்த்திக் கடனும் கழிக்கப்படுகின்றது.

## உடப்பு காளியம்மன் கோவில்

இவ்வாலயம் உடப்பூரின் மத்தியில் அமைந்து காணப்படுகின்றது. கி.பி. 1850ம் ஆண்டு பேதி நோயும் கொள்ளை நோயும் இவ்வூர்மக்களை வாட்டியது. அதனால் மக்கள் ஊரை விட்டுச்செல்ல முடிவு செய்தனர். அச்சந்தர்ப்பத்தில் காளி பக்தரான் "கொத்தக் கிழவன்" என்பவரில் காளி உருக்கொண்டு "மக்களே இவ்வூரை விட்டு ஓடாமல் தனக்கு பச்சை ஓலையில் குடில் அமைத்து வேப்பிலை கும்பம் வைத்து கடல் நீரை எண்ணெய்யாக வார்த்து விளக்கெரிக்கும் படி கூறவே அம்மக்களும் அவ்வாறே செய்து காளி தேவியை வழிபட்டதால் நோய் நீங்கப் பெற்றனர் என்றும் கும்பத்தில் வைத்த வேப்பிலைக் கொத்து பூத்துக் காய்த்தத தாகவும் வழி வழியாக வந்த மக்கள் கூறுகின்றனர்.

1878ம் ஆண்டு இக்கோவில் கல்லால் கட்டப்பட்டது. இருபது ஆண்டுகளின் பின்னர் பழைய விக்கிரகங்களுக்கு பதிலாக புதிய விக்கிரகங்கள் இந்தியாவில் இருந்து கொண்டு வரப்பட்டு பிரதிஸ்டை செய்து ஸ்ரீ முன்னேஸ்வரம் குருக்கள் பிரம்ம ஸ்ரீ குமாரசாமி குருக்களால் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. இந்த அம்மனின் உருத்திராகாரத்தைக் கண்ட மக்கள் 1950ம் ஆண்டு பிள்ளையார், பேச்சியம்மன், வைரவர் ஆகிய மூர்த்திகளையும் பரி வார தெய்வங்களையும் அமைத்து அம்பாளை சாத்வீக அம்மனாக வழிபடுகின்றனர்.

இந்த அம்பாளுக்கு 1977ம் ஆண்டு பாலஸ்தாபனம் செய்து அர்த்த மண்டபம், மகா மண்டபம் அசிவளைவு ஆகியனவும் யாத்திரிகர்கள் தங்கும் விடுதி போன்றனவற்றை அமைத்து 1982ம் ஆண்டு குட முழுக்கு செய்யப்பட்டது.

வருடா வருடம் புரட்டாதி மாதம் மகாபரணி நட்சத்திரத்தில் கம்பம் வைத்து பத்து தினங்கள் வேள்வி விழா கொண்டாடப்பட்டு வந்துள்ளது. அம்மனின் அடிப் பாதத்தில் பத்து தினங்களும் கடல் நீரில் விளக்கேற்றி வருவதுடன் அம்மனின் கும்பத்திலே வைக்கப்படுகின்ற வேப்பிலை பூத்துக் காய்த்து பழுத்துக் காணப்படுவது இன்றும் காணக் கூடிய ஓர் அற்புத நிகழ்ச்சியாகும்.

## உடப்பு ஆண்டிமுனை மாரியம்மன் கோவில்

உடப்புக்கு வடக்கே ஆண்டி முனையில் அமைந்திருக்கும் இவ்வாலயமே உடப்பில் காணப்படும் மிக பூர்வீக தல மாகும். சேதுராமு அம்பலவாணருக்கு இவ்வாலயத்தின் முழு உரிமைகளும் உண்டென்று ஓலைச்சுவட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வூர் மக்களே அன்றிலிருந்து இன்று வரை இவ்வாலயத்தை பராமரித்து வருகின்றனர்.

ஆரம்ப காலத்தில் இவ்வாலயம் மண்ணால் அமைக்கப்பட்ட குடிலாகவே காணப்பட்டுள்ளது. பின்னர் இவ்வூர் மக்கள் 1880ம் ஆண்டு சுற்று மதில்களைக் கட்டி எழுப்பியுள்ளார்கள். இவ்வாலயத்தில் மூலஸ்தானம் அர்த்தமண்டபம், மகாமண்டபம், தரிசனமண்டபம் ஆகியவற்றுடன் உள்வீதியையும் கொண்டிருக்கின்றது.

1889ம் ஆண்டில் இவ்வூர் மக்கள் பெரியம்மை நோயினால் பீடிக்கப்பட்ட போது அம்பாளின் அருளினால் நோய் நீக்கப்பட்டது. அதனால் "திருக்குளிர்த்தி" என்ற நேர்த்தியையும் செய்து வருகின்றார்கள். தீராத அம்மை நோயினால் அவதிப்படுபவர்கள் அம்பாளின் ஆலயம் வந்து கோவிலில் இருந்து வேப்பிலை தடவி இந்நோயைக் குணப்படுத்திக் கொள்வர். 1969ம் ஆண்டு இவ்வாலயத்தை ஓர் பொலிவான ஆலயமாகக் கட்டி குடமுழுக்குச் செய்தார்கள். இன்று அழகான ஸ்தூபியுடன் மிக கம்பீரமாக

காட்சி அளிக்கும் இவ்வாலயத்தில் திரு. முத்தையா பரந்தாமர் பூசகராக இருந்து பணியாற்றி வருகின்றார். உடப்பு இந்து ஆலய பரிபாலன சபை நிர்வாகத்தை நடாத்தி வருகின்றது.

## உடப்பு திரௌபதி அம்மன் ஆலயம்

ஸ்ரீ ருக்மணி சத்தியபாமா சமேத ஸ்ரீ பார்த்தசாரதி சமேத ஸ்ரீ திரௌபதா தேவியின் ஆலயம் என மிக நீண்டப் பெயரைக் கொண்ட இவ்வாலயம் சிலாப நகரில் இருந்து வடமேற்கே 16 மைல்கள் தொலைவில் பத்துளு ஓயாவிலிருந்து மேற்கே நான்கு மைல் தூரத்தில் உடப்பு கிராமம் அமைந்துள்ளது. இக்கிராமத்தின் மத்தியில் நடுநாயகமாக இவ்வாலயம் திகழ்கின்றது.

இன்றைக்கு ஏறக்குறைய எழுநூற்றி ஐம்பது வருடகால வரலாற்றுச்சிறப்பு மிக்க இவ்வாலயத்தில் 1917ம் ஆண்டுக்கு முன் அம்மனை மடாலயத்தில் வைத்துத் தான் பூஜித்து வந்தார்கள் அதன் பின் 1917ம் ஆண்டு அம்மனை பிரதிஷ்டை செய்து மகாமண்டபத்துடன் பூரண மிக்க ஆலயமாகக் கட்டி முடித்துள்ளார்கள்.

ஆரம்பத்தில் இவ்வாலயம் களிமண் சுவர்களை கொண்டதாகவே அமைக்கப் பட்டுள்ளது. இவ்வாலயத்தின் முன்கோ புரம் 1929ம் ஆண்டளவில் இந்திய யதாபதிகளினால் நிர்மாணிக்கப்பட்டது. இக்கோபுரத்தின் அடித்தளத்தில் ஸ்ரீ கிருஷ்ணபகவான் தன் இரு சக்திகளாகிய ருக்மணி சத்திபாமா சமேதராக வீற்றிருக்க இரு புறங்களிலும் விஷ்ணுவின் தச அவதாரங்களைக் காட்டும் உருவச்சிலை கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆலய மண்ட பம் முற்றாக இடிக்கப்பட்டு கவர்ச்சி கரமான தூண்களுடன் மகா மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. 1973ம் கோபுரங் கள் யாவும் பழுதுபார்க்கப்பட்டு 1974ம் ஆண்டு மாசி மாதம் விஸ்வநாதக் குருக்கள் தலைமையில் கும்பாபிஷேகம் நடை பெற்றுள்ளது.

இங்கு வருடாந்த உற்சவம் 18 தினங்கள் நடைபெறும் 18ம் நாள் தீ மிதிப்பாகிய நட்சத்திரத்தன்றே இங்கு தீ மிதிப்பு வைபவம் இடம் பெறுகின்றது. உற்சவ ஆரம்ப தினத்தன்று உள்கொடி யேற்றப்பட்டு ஐந்தாவது நாள் வெளி கொடியேற்றப்படுகின்றது. இக்கோவிலில் வருடாந்த உற்சவத்தின் போது ஒவ்வொரு இரவும் பூசைகள் யாவும் முடிந்த பின் நாடகங்கள் மேடையேற்றப்படும். இங்கு நடைபெறும் பூசைகள் ஆகமவிதிப்படி அமையாது. மகாபாரதக் கதையை அடிப் படையாகக் கொண்டே நடைபெறுகின்றது. இங்கே மூலமூர்த்தியாக பார்த்தசாரதிப் பெருமான் இருக்க பக்க வாட்டிலேயே திரௌபதா தேவியின் உருவச்சிலை வைக்கப்பட்டுள்ளது.

## முந்தல் மருதடி விநாயகர் கோவில

முந்தல் நகரில் இருந்து மேற்கு பக்கமாக கீரிமட்டா என்ற கிராமத்துக்கு செல்லும் பாதையில் நகருக்கு அருகிலேயே இவ்வாலயம் அமைந்துள்ளது. சுமார் 200 ஆண்டுகள் பழைமை வாய்ந்த இவ்வாலயம் முந்தலில் முதல் ஆதிக் குடிகளினால் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. சுமார் 1795ம் ண்டுகளில் இவ்வாலயம் அமைக்கப்பட்டிருக்கலாம் என்று நம்பப் படுகின்றது.

இக்கோவிலில் பரம்பரை பரம் பரையாக பண்டாரம்மார்கள் பூசை செய்து வந்ததுடன் கோயில் தர்மகர்த்தாவாகவும் இருந்து வந்ததுள்ளனர். அதன்படி இன்று திரு. மருதமுத்து நாராயணசாமி பண்டாரம் காணப்படுகின்றார். ஆரம்ப காலங்களில் இவ்வாலயத்துக்கு இந்திய பூசகர்மார்களே பூசை செய்து வந்துள்ளனர்.

சிதம்பரம் பூசகர், முருகையா பூசகர் போன்றோர் பூசை செய்யும் காலங்களில் மிக விமரிசையாக இவ்வாலயத்தில் திருவிழாக்கள் இடம்பெறும். இந்திய பூசகர் மார்களிடம் இருந்து இவ்வாலயம் ஊரவராகிய முத்து நாகசாமி பண்டாரத் திடமே ஒப்படைக்கப் பட்டுள்ளது.

அவருடைய காலங்களிலும் பூசைகள், விழாக்கள் அபிஷேகங்கள், அன்ன தானங்கள் போன்றவை சிறப்பாக நடந்துள்ளது. இங்கு சித்திரை பூரணை விரதம் பங்குனி உத்திரம், விநாயகர் சதுர்த்தி விநாயகர் சஷ்டி போன்ற உற்சவங்கள் சிறப்பாக நடை பெறும் இவ்வாலயத்துக்கு நாகசாமி விதானை, ஓவசியர் குமாரசாமி போன்றோரும் பல தொண்டுகளை செய்துள்ளனர்.

## முந்தல் ஸ்ரீ திரௌபதி அம்மன் கோவில்

சுமார் 1660 - 1700 க்கு இடைப்பட்ட காலப்பகுதியில் இங்கு வாழ்ந்து வந்த மீனவர்களினால் இவ்வாலயம் உருவாக்கப் பட்டுள்ளது. ஆரம்பத்தில் இவ்வாலயம் ஓலைக் குடிசையாகவே அமைக்கப்பட் டுள்ளது. இவ்வாறு காணப்பட்ட ஆலயத்தில் பரம்பரை பரம்பரையான பூசகர்கள் பூசை செய்து வந்துள்ளனர். பின் 50 வருட காலத்திற்குள் விசேட பூசைகளில் இப் பரம்பரையான பூசகர் களுடன் குருக்கள் மார்களும் பங்கேற் கின்றனர்.

இக்கோயிலில் அன்று தொட்டு ஆடி அமாவாசையில் கொடியேறி 18ம் நாள் தீ மிதிப்புத் திருவிழாவுடன் வருடாந்த உற்சவம் முடிவுபெறுகின்றது. இங்கு நடைபெறும் 18 நாள் திருவிழாவும் மகாபாரதக்கதையை அடிப்படையாகக் கொண்டே நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு பரம்பரை பரம்பரையாக பராமரிக்கப்பட்டுவந்த இக்கோவிலில் ஏற்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு முதன் முதலாக 1950ம் ஆண்டு நிர்வாக சபை ஒன்று உருவாக்கப்பட்டது. இந் நிர்வாக சபையினரின் முயற்சியினால் 1952 - 1960 கால இடை வெளியில் இவ் வாலயம் கல்லால் கட்டப்பட்டுள்ளது. இதற்கு உடப்பு திரு. சி கதிர்காமப்பிள்ளை அவர்களும் ஊரவர்களும் நிதி உதவி செய்துள்ளனர் ஆலயம் கட்டி முடிவடை ந்ததும் இந்தியாவில் இருந்து மூலவிக்கி ரகமும், முருகன் சிலையொன்றும் திரு. சி. கதிர்காமப்பிள்ளையின் தனிச் செலவில் கொண்டுவரப்பட்டு கும்பாபிஷேகமும் நடைபெற்றுள்ளது.

இன்று இந்த ஆலயம் நிர்வாக சபையினரின் நிர்வாகத்தின் கீழ் இயங்கிவருகின்றது. 1987இல் ஆலய மூலஸ்தான திரௌபதா தேவியின் உருவச்சிலை திருடப்பட்டு மூன்று வருடங்களுக்குப் பின் அச்சிலை ஊரின் ஒதுக்குப்புறத்தில் ஒரு பற்றைக்காட்டில் இருந்து கண்டெடுக்கப்பட்டது. அம்மனின் அருளால் மீண்டும் மூலஸ்தானம் திருத்தி அமைக்கப்பட்டு 1993-01-23 இல் கும்பா பிஷேகமும் நடைபெற்றுள்ளது. தற்போது இவ்வாலயத்தில் நித்திய நைமித்திய பூசைகள்யாவும் நடைபெற்று வருகின்றன.

## கருத்தான் வில்லு பாலையடி பிள்ளை யார் கோவில்

இக்கோவில் முந்தல் நகரில் இருந்து தெற்கு நோக்கி சுமார் 1/2 மைல் செல்லும் போது கருத்தான்வில்லு என்ற இடத்தில் அமைந்துள்ளது. ஆரம்பத்தில் ஒரு பாலமரத்தடியிலேயே பிள்ளையாரை நினைத்து பூசைகளை ஊர் மக்கள் நடாத்தி வந்துள்ளனர் பின் 1966 இல் அத்திவார க்கல் நடப்பட்டு 16 வருடங்கள் அப்படியே விடப்பட்டுள்ளது பின் உடப்பு R. செல்லையா என்பவர் பெரும் நிதியை கொடுத்து ஊர்மக்களுடன் சேர்ந்து கோயிலை கட்டி முடித்து 1984ஆம் ஆண்டு கும்பாபிஷேகமும் நடாத்தியு ள்ளார்கள்.

கும்பாபிஷேகம் நடத்த பின் இராசையா செல்லத்துரை என்பவர் இதன் பூசகராக இருந்து பத்து ஆண்டுகள் பணிபுரிந்துள்ளார் இவர் இவ்வாலயம் கட்டப்படுவதற்கும் பெரும் பாடுபட்ட வர்களுள் ஒருவராவார். திரு. ஆறுமுகம் கனகரத்தினத்தின் தலைமையில் தற்போது இக்கோயில் விழாக்கள் நடைபெறுகின்றன. இங்கு விநாயகர் சதுர்த்தி சிறப்பாக கொண்டாடப்படுகின்றது.

## மருதங்குளம் பிள்ளையார் கோவில்.

சிலாபத்தில் இருந்து கொழும்பு வீதியில் 3 Km தூரம் சென்றால் இடதுபுற

வடக்குத்திசையில் அமைந்திருப்பது தான் மருதங்குளம் எனும் தமிழ் கிராமமாகும். இக்கிராமத்தின் நடுவில் தான் இப் பிள்ளையார் ஆலயம் அமைந்துள்ளது.

1976ம் ஆண்டு மருதங்குளத்தை சேர்ந்த காலஞ் சென்ற திரு சு. குணசேகரா அவர் களால் கட்டப்பட்டுள்ளது. இவ் வாலயத்தின் வருடாந்த உற்சவம் 5ம் மாதம் நடைபெறு கின்றது. இன்று இவ் வாலயம் திரு குணசேகரா அவர்களின் பரம்பரையினரால் பராமரிக்கப்பட்டு வருகின்றது.

## கருங்காலிச் சோலை

## ஸ்ரீ கல்யாண முருகன் ஆலயம்

இது புத்தளம் சிலாபம் ஆகிய இரு நகரங்களுக்கும் நடுவில் முந்தல் கிராமத்தில் இருந்து 2km சென்றால் கருங்காலிச்சோலை கிராமம் காணப் படுகின்றது. 1956ம் ஆண்டு அரசு குத்தகை அடிப்படையில் இந்தகாட்டுப்பிரதேசத்தை பகிர்ந்து அளித்தது முதலில் கொப்பு உடைத்துவைத்து ஐயனாரை வணங்கி காடுகளை வெட்டி களனிகளாக்கி மக்கள் வாழத்தொடங்கினர். கொப்பு உடைத்து வைக்கப்பட்ட இடத்தில் சிறிய ஓலைக் குடில் ஒன்றை அமைத்து ஐயனாரை வழிபடவும்தொடங்கினர். இவ்வாலயத் துக்கு அருகில் வாழ்ந்து வந்த பொன்னையா என்பவர் சிறு பிள்ளையார் சிலையொன்றை ஆலயத்தில் வைத்து ள்ளார் அதனால் அது அன்றில் இருந்து பிள்ளையார் ஆலயமாக மாறியது.

அதன்பின் இந்துமகாசபை என்ற ஓர் சபையை நிறுவி கோயிலை பரிபாலனம் செய்து வந்துள்ளனர் அதன்பின் 1070 ம் ஆண்டு முதன்முதல் இவ்வாலயத்தில் சிவராத்திரி விழா கொண்டாப்பட்டுள்ளது அச்சிவராத்திரி விழாவின் போது அங்கு வந்திருந்த பக்தர் ஒருவரில் உருவேறி இது முருகன் ஆலயமாகத்தான் அமைய வேண்டும் என்று கூற மக்கள் அதை ஏற்றுக்கொண்டு அன்றில் இருந்து முருகன் படத்தை வைத்து வழிபட தொடங்கியதோடு சிறு கல்லாலன கட்டிடம் ஒன்றையும் கட்டி வழிபட்டனர்.

இவ்வாறு வழிபாடு ஆற்றத் தொடங்கியதன் பின் 1976ம் ஆண்டு ஸ்ரீ முருகன் பரிபாலனசபை என்ற நிர்வாக சபையை அமைத்தனர் அதன் தலைவராக திரு இ. அழகிரிசாமி நியமிக்கப்பட்டார். இவரின் தலைமையில் 1978ம் ஆண்டு தற்போது காணப்டும் ஸ்துாபியுடனான ஆலயத்துக்கு அத்திவாரம் இடப்பட்டது. இதற்கான நிதியை ஊர்மக்களிடம் இருந்தும் கொழும்பு வியாபாரிகளிடம் இருந்தும் பெற்று ஆலயத்தை கட்டி முடித்து 1980-02-06 இல் கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது.

இங்கு வைகாசிமாதத்தில் வருடாந்த உற்சவம் பதினொரு நாட்கள் நடை பெறுகின்றது. அத்தோடு நித்தியபூசை களும் சிவராத்திரி, நவராத்திரி போன்ற விழாக்களும் கொண்டாடப் படுகின்றன கும்பாபிஷேகத்தின் பின் பிராணரே பூசை செய்து வருகின்றார். 199.03.17 அன்று வசந்த மண்டபத்துக்கான அடிக்கல்லும் நாட்டப் பட்டுள்ளது.

## மதுரங்குளி

## ஸ்ரீ சித்தி விநாயகர் கோவில்

1908ம் ஆண்டு இக்கோவில் ஆரம்பிக்கப்பட்டு, 1935ம் ஆண்டு கும்பா பிஷேகமும் நடைபெற்றுள்ளது. இவ் வாலயத்தை தமிழ் நாடு காரைக் குடியைச் சேர்ந்த இ.பா.நி.ப.ஞ. நைனியப்பச் செட்டியார் ஆகியோரு 27 ஏக்கர் காணியை வழங்கியுள்ளனர் (சீட்டிலக்கம் 6441)

அக்காலத்தில் இக்கோயிலில் பூசை கள் சிறப்பாக இடம்பெற்றுள்ளன.

இவர்கள் இந்தியா செல்லும்முன் இக் கோவிலை உடப்பு இலாடாப்பிள்ளை கேசவ மூர்த்தியிடம் கையளித்துள்ளனர்.

தற்போது டாக்டர் திரு பா. க. கிருஷ்ணபிள்ளை ஆலய பரிபாலனச்சபைத் தலைவராக உள்ளார். இவர் ஊர் மக்க ளுடன் சேர்ந்து கோவிலை புணருத் தாரனம் செய்ய நடவடிக்கை எடுத்து

வருகின்றார். இதேவேளை இறால் வளர்ப்புக்காக சிலர் கோயிலின் பின் புறக் காணியை பிடித்துள்ளனர். இதற்கு எதிராக புத்தளம் வழக்கு மன்றத்தில் வழக்கு நடைபெறுகின்றது.

சைவப்பெருமக்கள் குரல் எழுப்பா விட்டால் காலக்கிரமத்தில் இக்கோவில் அழிந்துவிடும் நிலை ஏற்படலாம்.

இக்கோயிலின் மூலஸ்த்தானத்தில் சித்தி விநாயகர் இருக்க நாகதம்பிரான் சிலையுமுண்டு.

## கரம்பை ஸ்ரீ விநாயகர் கோவில

கற்பிட்டி பிரதான வீதியில் பாலாவியில் இருந்து சுமார் 2km தொலை வில் கரம்பை என்ற இடத்தில் இவ்வாலயம் அமைந்துள்ளது. இப்பகுதியில் ஆரம்ப த்தில் அரசாங்கத்தினால் பகிர்ந்தளி க்கப்பட்ட காணியில் 1/2 ஏக்கர் காணியை ஆலயத்துக் கென்றே ஒதுக்கி விட்டார்கள்.

1966ம் ஆண்டு இக்கோயிலுக்கான அடிக்கல் நாட்டப்பட்டது. இதற்குமுன் இவ்வாலயம் அமைந்துள்ள இடத்தில் கடலுக்கு மீன்பிடிக்கச் செல்பவர்கள் கொப்பு உடைத்து வைத்துவிட்டு செல்வார்களாம் 1966ம் ஆண்டுக்குப்பின் திரு மா.சுப்பிரமணியம் தலைமையில் இவ்வாலயம் கட்டப்பட்டுள்ளது

இங்கு மூலஸ்தானத்தில் இருக்கும் பிள்ளையார் சிலை கரடிப்பூவல் கிராமத்தில் இருந்து கொண்டுவரப்பட்ட தாகும். அங்கு ஓர் ஆலமரத்தில் இச்சிலை வைக்கப்பட்டிருந்ததாக கூறுகின்றார்கள். இன்று இவ்வாலயத்தை திரு. மா. சுப்பிர மணியத்தின் குடும்பத்தினரே பராமரித்து வருகின்றார்கள் இங்கு வெள்ளிக்கிழமை களிலும் மற்றும் விஷேட தினங்களிலும் பொங்கல் பூசை இடம் பெறுகின்றது. சிவராத்திரி விழா இங்கு சிறப்பாக நடை பெறுகின்றது. இதனை கோயில் நிர்வாக மும் இந்து இளைஞர் மன்றத்தினரும் இணைந்து நடத்துவார்கள்.

## நரக்கள்ளி
## ஸ்ரீ பத்திர காளியம்மன் கோவில்

சுமார் 300 வருடங்களுக்கு முன் மீனவர் குழு ஒன்று இவ்விடத்தில் தங்கியிருந்து மீன்பிடி தொழில் செய்து வந்துள்ளனர். அவர்கள் அவ்விடத்தை தேர்ந்தெடுக்கக்காரணம் அவ்விடத்தில் நன்நீர் காணப்பட்டமையேயாகும். இவர்கள் இவ்விடத்தில் சிறு குடில் அமைத்து அம்மனை வழிபட தொடங்கியுள்ளனர் காலப்போக்கில் இவ்விடத்தில் தொழில் சரி வராமையினால் இங்கிருந்து இடம் பெயர்ந்தவர் என்று நம்பப்படுகின்றது

இவ்வாறு மீனவர்களினால் உரு வாக்கப்பட்ட இக்கோவில் அவர்கள் சென்றதன் பின் காடுபடர்ந்துஆலயத்தின் நடுவில் புற்று ஒன்று இவ்வாறு வளர்ந்து வருகிறது. ஓரிரு நூற்றாண்டகளுக்குப்பின் இங்கு மீன்பிடி தொழிலுக்காக வந்த உடப்பு செல்லையா முதலாளியவர்களின் கனவில் ஆலயம் அமைக்குமாறு கேட்டுக்கொண்டது. செல்லையா அவர்களும் தனது வேளையாட்களுடன் அவ்விடம் சென்று காட்டை துப்பரவு செய்து பார்த்தபொழுது பழைய அச்சிறிய ஆலயம் தென்பட்டுள்ளது. அத்தோடு அம்மனின் வெள்ளிச்சிலையும் பலியிடு தலுக்கான கத்தியும் கிடைக்கப் பெற்றுள்ளது.

அதன்பின் செல்லையா அவர்களின் முயற்சியில் ஊர்மக்களின் உதவியுடன் 1983ல் கல்லால் கட்டப்பட்டு கும்பாபிஷேகமும் நடைபெற்றுள்ளது. இன்று இக்கோயிலில் கார்திகை மாதத்தில் வருடாந்த உற்சவம் நடைபெறுகின்றது. காடுபடர்ந்திருந்த நேரம் ஆலயத்தில் காணப்பட்ட புற்றை ஆலயத்தை திருத்திக் கல்லால் கட்டும் பொழுது அகற்றாமல் ஆலயத்தின் நடுவிலேயே வைத்துக் கட்டப்பட்டுள்ளது. இப்புற்றில் நாகப்பாம்பு ஒன்றும் வாழ்ந்து வருகின்றது.

இக்கோயில் பாலாவியில் இருந்து கல்பிட்டி வீதியில் சுமார் 9மைல் தொலைவில் ஏரிக் கரையோரமாக

காட்சியளிக்கின்றது இக் கடல் நீர் ஏரியே இக்கோவிலின் தீர்த்தமாகவும் காணப் படுகின்றது.

## புத்தளம்

## தில்லையடி ஸ்ரீ முருகன் கோவில்.

1966ம் ஆண்டு புத்தளம் தில்லை யடியைச் சேர்ந்த சண்முகராஜா, நடராஜா, காளிமுத்து ஆகிய மூன்று ஆசாரிமார்களின் பெரும் முயற்சியினால் ஆரம்பிக்கப்பட்டதே இந்த முருகன் கோவிலாகும். இக் கோவிலுக்கான இடத்தை பிறமதத்தைச் சேர்ந்த ரூ.கு.து. அசன்குதுாஸ் என்பவர் வழங்கியுள்ளார்.

1970ம் ஆண்டு ஓலையினால் அமைக்கப்பட்டு வழிபாடுகள் நடைபெற்று வந்துள்ளது. 1983ம் ஆண்டு சில விசுமி களினால் ஓலையில் அமைக்கப்பட்ட அக்கோயிலுக்கு தீ மூட்டப்பட்டது. தீயிடப் பட்ட அக் கோயில் நான்கு வருடங்களாக கைவிடப்பட்ட நிலையில். காடுபடர்ந்து காணப்பட்டது. 1987ம் ஆண்டு மூலஸ் தானத்துடன் கூடிய நிரந்தர கட்டிடமாக அமைத்து சிறப்பாக வழிபாடியிற்றினர்.

இன்று இக்கோயிலின் நிர்வாக சபைத்தலைவராகவும் பூசகராகவும் திரு. கா.நாகரட்ணம் காணப்படுகின்றார். செய லாளராக திரு. இராமச்சந்திரன் இருந்து வருகின்றார். இக்கோயிலின் மகா மண்டபபணிகள் இன்னும் முடிவடையாத நிலையிலேயே காணப்படுகின்றது.

## புத்தளம்

## ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்.

சுமார் 300 வருடங்களுக்கு முன் உப்பளத்தில் தொழில் புரிந்து வந்தவர் களினால் உருவாக்கப்பட்டதே இவ் வாலயமாகும். இவ்வாலயம் புத்தளம் நகரில் இருந்து சுமார் 1Km வடக்கே மன்னார் வீதியில் அமைந்துள்ளது.

உப்புத்தொழிலாளர்களால் உரு வாக்கப்பட்ட இவ்வாலயம் பின் தென் இந்திய செட்டிமார்களின் ஆதரவோடு சிறப்புடன் காணப்பட்டுள்ளது. அவர்களே இதன்பரிபாலன பொறுப்பை ஏற்றுக் கொண்டு நடாத்திவந்துள்ளனர். அந்த வகையில் திரு C.N. சுப்பிரமணியம் செட்டியார் அவர்கள் நெடுங்காலமாக பராமரித்து வருகின்றார்.

இக்கோவிலுக்கான மூலச்சிலை உற்சவ சிலை என்பன தென் இந்தியாவில் இருந்தே தருவிக்கப்பட்டுள்ளன. மூர்த்தி தளம் தீர்த்தம் என்பன முறையே அமையப்பெற்ற இக்கோவிலுக்கு ஆலயத் துக்கு முன்பாக காணப்படுகின்ற நெடுங் குளமே தீர்த்தமாகும். இங்கு நடைபெறும் திருவிழாஅலங்காரத் திருவிழாவாகும். இது நவராத்திரியுடன் தொடங்கி தசமியன்று தேர்த்திருவிழாவுடன் முடிவடையும்.

பல வருடங்களுக்கு முன் நிரந்தரக் கட்டிடம் கட்டப்பட்டு, 1976-09-06 இல் கோவில் கோபுரமும் புதுப்பிக்கப்பட்டு கும்பாபிஷேகமும் நடைபெற்றுள்ளது இங்கே நித்திய நைமித்தய பூசைகள்யாவும் சிறப்பாக நடைபெற்றுவருகின்றது.

## புத்தளம் பிள்ளையார் கோவில்.

இவ்வாலயம் மன்னார் வீதியில் புத்தளம் நகரில் இருந்து சுமார் 1/2km தொலைவில் அமைந்துள்ளது இவ் வாலயத்துக்கு வடக்கு திசையில் புத்தளம் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் அமைந் துள்ளது.

இவ்வாலயம் சுமார் 100 வருடங் களுக்குமுன் ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் நிர்வாகத்தில் செட்டிமார் களுக்கிடையில் சிலப்பிரச்சனைகள் தோன்றிய தன் காரணமாக கட்டப்பட்டது என்று கூறப்படுகின்றது இன்று ஊர் மக்களின் பராமரிப்பில் இருக்கும் இவ்வாலயம் பாலஸ்தாபனம் பண்ணப் பட்ட நிலையில் காணப்படுகின்றது இவ் வாலயத்தில் கருங்கல்லினாலான பெரிய விளக்கொன்றும் காணப்படுகின்றது.

## பனையடி சித்தி விநாயகர் கோவில்

இந்த ஆலயம் கற்பிட்டி வீதியில் பாலாவியில் இருந்து சுமார் 9 1/2 மைல் தொலைவில் பனையடி என்ற விவசாய ஊரில் அமைந்துள்ளது. இவ்வாலயத்தை திரு. காத்தான் செட்டியார் என்ற கிராம விதானை ஊர் மக்களுடன் சேர்ந்து 1910ம் ஆண்டு கோயிலை சிறிதாக அமைத்து வழிபட தொடங்கியுள்ளனர். அதன்பின் கோயில் கட்டிடத்தை சற்று பெரிதாக அமைத்துள்ளனர்.

இவ்வாலயத்தின் தற்போதைய நிர்வாகச்சபைத் தலைவராக திரு A. கதிர்காமர் காணப்படுகின்றார். அத்தோடு இவ்வாலயத்தை நீண்டகாலமாக பராமரித்து பூசைப்பணிகளையும் திரு என்பவர் செய்து வருகின்றார்.

## சேனைக்குடியிருப்பு ஸ்ரீ பத்தினியம்மன் கோவில்

இவ்வாலயம் சேனைக்குடியிருப்பு முருகன் கோவிலுக்கு அருகிலேயே வடதிசையில் அமைந்து காணப்படுகின்றது 1950ம் ஆண்டளவில் இக்கோவிலை திரு வேலுப்பிள்ளை அவர்கள் கட்டியுள்ளார்கள் இவ்வாலயத்தில் ஆவணி மாதத்தில் திருவிழா நடைபெறுகின்றது

ஆவணிமாத திருவிழாவில் காவடி எடுத்தல் தீ மிதித்தல் என்பன இடம் பெறுகின்றது. இன்று இந்த ஆலயத்தின் நிர்வாகப்பொறுப்பை ஸ்ரீ பத்தினியம்மா கதிரேசன் நிர்வாக சபையினர் நிர்வகிக்கின்றனர். இவ்வாலயத்துக்கு அருகில் சிறிய காளி கோவிலும் உண்டு. இவ்வாலயத்துக்கு எதிரிலேயே பெரிய குளம் ஒன்றும் அமைந்துள்ளது. இக்குளத்தை வில்லு குளம் என்று சொல்வார்கள்.

## சேனைக்குடியிருப்பு முருகன் கோவில்

1950ம் ஆண்டளவில் திரு வேலுப்பிள்ளை அவர்களின் முயற்சியினால் கட்டப்பட்டதே இவ்வாலயமாகும். இக்கோவில் புத்தளத்தில் இருந்து சுமார் 1 3/4 மைல் தொலைவில் சேனைக் குடியிருப்பு என்னும் இடத்தில் வில்லுக் குளத்தருகில் காணப்படுகின்றது.

இங்கு ஆடி மாதத்தில் அலங்காரத் திருவிழா நடைபெறுகின்றது. தற்பொழுது இக்கோவில் ஸ்ரீ பத்தினியம்மன் கதிரேசன் நிர்வாகசபையின் நிர்வாகத்தினால் கோயிலின் சகல பணிகளும் நடைபெற்று வருகின்றன தற்போது புதிதாக நவக் கிரகங்களும் அமைக்கப்பட்டுள்ளது

## சேகுவன் தீவு ஸ்ரீ முருகன் ஆலயம்

இவ்வாலயம் புத்தளம் எழுவன் குளம் பிரதான வீதியில் புத்தளத்தில் இருந்து 4 Km இல் மணல் தீவு என்ற கிருஸ்தவ கிராமத்தில் இருந்து தெற்கு நோக்கி 2 Km சென்றால் சேவென்தீவு என்ற இந்து தமிழர் கிராமம் உண்டு. இக்கிராமத்தின் நுழை வாயிலிலேயே இவ்வாலயம் காட்சி அளிக்கின்றது.

சுமார் ஐந்து அல்லது ஆறு வருடங்களுக்கு முன் ஓலை குடிசையில் வைத்தே வழிபாடு நடைபெற்று வந்துள்ளது. இன்று இக்கோயிலின் நிர்வாகச் சபையாரும் ஊர்மக்களும் இணைந்து கல்லினால் கோயிலை கட்டி வருக்கின்றனர். இன்னும் கட்டிட வேலைகள் முடிவுராமல் இவ்வாலயம் காணப் படுகின்றது இங்கு வெள்ளிக் கிழமைகளில் பூசை நடைபெறுவதோடு சிவராத்திரி விழாவும் சிறப்பாக நடைபெறுகின்றது.

## கரடிப்பூ ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்

இவ்வாலயம் எழுவன் குளம் புத்தளம் பிரதான பாதையில் புத்தளத்தில் இருந்து 8 மைல் தொலைவில் கரடிப்பூ என்ற இடத்தில் அமைந்துள்ளது. இவ்வாலயம் அமைந்துள்ள பிரதேசம் தென்னந்தோம்புகள் நிறைந்த இடமாகும்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த செல்ல

முத்து ஓவசியரும் இந்தியாவில் இருந்து வந்திருந்த வீரபத்திர கணக்காயரும் 1940-42 இல் நீறு செங்கல் கலந்து அம்மன் ஆலயத்தை கட்டியுள்ளனர் இதற்கு முன் சிறு ஒலைக்குடிசையாகவே இவ்வாலயம் காட்சி அளித்திருக்கின்றது.

இவ்வாலயத்தில் ஆரம்பத்தில் மரத் தினாலான அம்மன் சிலையை வைத்தே வழிபாடு நடை பெற்றுள்ளது. தற்போது இம்மரச்சிலை எழுவன் குளம் மாரியம்மன் ஆலயத்தில் வைக்கப்பட்டுள்ளது.தற்போது இங்கு வைக்கப்பட்டுள்ள சிலை ஓவசியர் அவர்களால் யாழ்ப்பாணத்தில் இருந்து கொண்டு வரப்பட்டதாகும். இவர்களுக் குப்பின் ஊர் மக்களினாலேயே கோயில் பராமரிக்கப்பட்டு வந்துள்ளது

தற்போது பாலஸ்தானம் செய்யப் பட்ட நிலையில் கோயில் நிர்வாகமும் கரடிப்பூ சைவ முன்னேற்றச்சங்கமும் இணைந்து கோயில் திருப்பணிகளை நடாத்துகின்றன. இக்கோயிலில் நவராத்திரி விழாவோடு சக்திகரகமும் எடுத்து திருவிழா கொண்டாடப்படுகின்றது. இவ்வாலயத்துக்கு அருகில் ஐயனார் கோவில் ஒன்றும் காளிகோவில் ஒன்றும் காணப்படுகின்றன.

## நரக்களி ஐயனார் கோவில்.

இக் கோவில் கல்பிட்டிப்பாதையில் அமைந்துள்ள நரக்களி என்னும் இடத்தில் இருந்து மேற்குப்பக்கமாக 1/2 Km சென் றால் கொலனியில் அமைந்துள்ளது, ஆரம்பத்தில் மரத்தடியில் வைத்தே பூசை வழிபாடு நடைபெற்றுள்ளது. அதன்பின் ஊரவரான M. நவரட்ணம் தலைமை யிலான நிர்வாகக் குழுவினர் இம்மரத் தடியில் 1994ஆம் ஆண்டு நிரந்தரக் கட்டிடம் ஒன்றை கட்டி வழிபடுகின்றனர்.

இங்கு சித்திரா பௌர்ணமி விரதம் அனுஸ்டிக்கப்படுகின்றது.வெள்ளி,செவ்வாய் கிழமைகளில் பூசைகள் நடை பெறுகின்றன. இவ்வாலயம் ஒரு விவசாய சூழலுக்கு மத்தியில் அமைந்து காணப் படுகின்றது.

## ஆனை வாசல்
## ஸ்ரீ முத்து மாரியம்மன் கோவில்

சுமார் 400 வருடங்களுக்கு முற்பட்ட ஆலயமாக கருதப்படும் இக்கோவில் கல் பிட்டியில் இருந்து 1km மேற்கே ஆனை வாசல் என்ற இடத்தில் ஏரிக்கரை யோரமாக வடக்கே நோக்கிய வாறு அமைந்துள்ளது.

மீன்பிடித்தொழிலை தமது பரம் பரைத் தொழிலாக கொண்டவர் களினால் உருவாக்கப்பட்ட இவ்வாலயம் அன்று சிறப்புடன் காணப்பட்டுள்ளது. அதற்கு இவ்வாலயத்தில் காணப்படும் சிங்கவாகனம், நாய்வாகனம் என்பன சான்றுபகர்கின்றது. இதற்கு காரணம் இக்கோயிலை அமைத்து வழிபட்ட அந்த மீனவர்களும் அங்கு தொழில் சரிவர அமையாததால் இடம் பெயர்ந்தமை என்று கூறப்படுகின்றது.

அதன்பின் இங்கு எஞ்சியிருந்த ஓரிரு குடிகளாலும் வெளியிடங்களில் இருந்து வந்து குடியேறியவர்களினாலும் பரிபாலிக்கப்பட்டுவந்துள்ளது, இன்று பாலஸ்தாபனம் செய்யப்பட்ட நிலையில் காணப்படும் இவ்வாலயத்துக்கு அருகில் வைரவர் கோயிலொன்றும் பிள்ளையார் கோயிலொன்றும் காணப்படுகின்றது.

இவ்வாலயத்தின் தற்போதைய நிர்வாகச்சபை தலைவராக திரு.S. செல்வ ராசா நியமிக்கப்பட்டுள்ளார். நிர்வாக சபை ஊர்மக்களின் உதவியுடன் புனருத் தாபன வேளைகளை நடாத்துகின்றது, இங்கு நவராத்திரி விழா சிறப்பாக நடைபெற்று வந்துள்ளது,தற்போது நித்திய பூசைகள் மட்டுமே நடைபெறுகின்றது.

## கல்பிட்டி ஸ்ரீ முருகன் ஆலயம்

1980 ஆண்டு இக்கோயில் ஓய்வு பெற்ற கடற் படைத்தளபதி திரு இ. இரா சையா தலைமையில் ஊர் மக்களின் உதவிடன் கட்டப்பட்டு அவ்வாண்டிலேயே கும்பாபிஷேகமும் நடைபெற்றுள்ளது.

திரு.க. கனகசபை நிறைய பங்களிப்பு செய்துள்ளார். இங்கு தைத்திங்கள் 3ம் நாள் பிரதமை திதியும் பூரண நட்சத்திரமும் கூடிய தைப்பூச திரு நாளில் ஆரம்பித்து 10 நாள் திருவிழா நடைபெறும்

1994-01-27இல்மீண்டும் ஒரு முறை கும்பாபிஷேகம் நடாத்தப்பட் டுள்ளது. இவ்வாலயம் புத்தளத்தில் இருந்து சுமார் 40Km தூரத்தில் கல்பிட்டி பிரதான வீதியில் வடக்கே நோக்கியவாறு கல்பிட்டி யின் நுழை வாயிலிலேயே புதுப் பொலி வுடன் காட்சி அளிக்கின்றது.இதன் தற்போ தைய நிர்வாக சபைத்தலைவ ராக டாக்டர் S.சுப்பிரமணியம் காணப் படுகின்றார்.

## புளிச்சாக்குளம் அம்மன் கோவில்

புத்தளம் மாவட்டத்தில் காணப் படும். அம்மன் ஆலயங்களில் மிகப்பழை மை வாய்ந்த அம்மன் ஆலயமாக இவ் வாலயம் திகழ்கின்றது. இவ்வாலயம் புத்தளம் நகரில் இருந்து கொழும்பு வீதியில் சுமார் 21வது மைல்லில் அமைந் துள்ள புளிச்சாக்குளம் சந்தியில் இருந்து மேற்றுப்பக்கமாக 1Km சென்றால் வயல் கள் சூழ்ந்த ஒரு பிரதேசத்தில் இவ்வாலயம் அமைந்து காணப்படுகின்றது.

1815ம் ஆண்டு காலப்பகுதிகளில் கண்டியின் கடைசி அரசனாகிய ஸ்ரீ இராஜசிங்கனின் ஆட்சிக்காலத்தில் இவ்வா லயம் தோன்றி இருக்கலாம். என நம்பப் படுகின்றது. என்றாலும் 1906 - 1019க்கு இடைப்பட்ட காலப்பகுதியிலேயே இவ் வாலயத்துக்கு நிரந்தர கட்டிடம் கட்டப் பட்டுள்ளது. அதன்பின் ஊர் முக்கியஸ் தர்களின் நிர்வாகத்தின் கீழ் ஆலயம் இருந்து வந்துள்ளது. இன்று ஊர்மக்களின் நிர்வாகத்தில் காணப்படும் இவ்வாலயப் புனருத்தாபனம் செய்யப்பட்டு 5-2-1995ல் குடமுழுக்கும் நடைபெற்றுள்ளது.

இங்கு நவராத்திரி விழா சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. நவராத்திரி விழாவின் கடைசி நாளாகிய தசமியன்று சக்திக்குகரகம் எடுத்து உற்சவம் நடாத்து வார்கள். இங்கு தற்பொழுது நித்திய நைமித்திய பூசைகள்யாவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

## மதுரங்குளி ஸ்ரீ முருகன் கோவில்

ஸ்ரீ முருகன் கோவில் கட்டட நிர் மாண வேலைகள் 1963ல் ஆரம்பிக்கப்பட்டு 1966.2.11ல் திருப்பணி வேலைகள் பூர்த்தி யுற்று கும்பாபிஷேகம் நடைபெற்றது. ஓவசியர் திரு சின்னப்பு நடராசா அவர்களே இவ்வாலய தர்மகர்த்தா ஆவார். இவரது சொந்த நிதியிலும் அயராத உழைப்பிலும் இவ்வாலயம் உருவாகியது.

கொழும்பு புத்தளம் பிரதான வீதியில் மதுரங்குளி என்ற இடத்தில் ஆகாயத்தை தொடுமளவு உயர்ந்ததும், சிற்பசித்திர வேலைகள் நிறைந்ததுமாக வாயிற்கோபுரம் காட்சி தருகின்றது. வடமேல் மாகாணத்தில் முன்னீஸ்வர சிவாலயத்துக்கு அடுத்த படியாக பெரிய கோபுரம் இவ்வாலயத்தில் அமைந்தி ருப்பது இதன் சிறப்பம்சமாகும். 1979.5.3 ல் இராசகோபுர கும்பாபிஷேகம் நடைபெற்றது. நவாலியூர் பிரமஸ்ரீ பிரதிஷ்டா சிரோன்மணிசாமி விஸ்வநாதக் குருக்கள் தலைமையில் கும்பாபிஷேகம் இனிது நடந்தேறியது.

யாழ்ப்பாணத்தில் இருந்து தருவிக் கப்பட்ட முருகன் சமேதா தெய்வானை, வள்ளி அம்மன் சிலைகள் மூலஸ்தானத்தில் வைக்கப்பட்டு பிரதிட்டா மகா கும்பாபி ஷேகம் செய்யப்பட்டுள்ளது. இங்குள்ள பிள்ளையார் கோவில் சிலை முருகன் கோவிலுக்கு முன்னுள்ள தோட்டத்தில் கண்டெடுக்கப்பட்டு பிரதிட்டை செய்யப் பட்டதாகும்.

இவ்வாலயத்தில் மாசி மாதத்தில் திருவிழா நடைபெறும். தேர்த்திருவிழா, தீர்த்ததிருவிழா மிகவும் சிறப்பாக நடைபெறும். சித்திர வேலைப்பாடொடு கூடிய பெரிய தேரில் சுவாமி வீதி வலம் வரும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.

இன மத பேதமின்றி பக்த கோடிகள் அலை அலையாக திரள்பர். 10 நாட்கள் திருவிழா நடைபெற்று 11ம் நாள் முருகன் திருக்கல்யாணத்தோடு உற்சவம் முடிவடையும். ஊரவர்களும் உபயக் காரராக ஆளுக்கொரு உபயமேற்று மனமகிழ்வோடு மரசிமக உற்சவத்தை சிறப்பிப்பர். கந்தசட்டி, சூரன்போர் இவ்வாலயத்தின் விஷேட நிகழ்வாகும்.

மூன்று வேளை பூசை சிறப்பாக நடைபெறும். வெள்ளிக் கிழமைகளில் மாலை வேளை பூசை பக்திபரவசமூட்டும். மூர்த்தி,தலம், தீர்த்தம் முறையாக அமைந்து காணப்படுவது இவ்வாலயத்தின் மேலதிக சிறப்பு.

1992.6.11ம் நாள் ஆலயம் புனரமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. கலியாண மண்டபத்தையும் இவ்வாலயம் கொண்டுள்ளது: திரு மணங்கள் இவ்வாலயத்தில் நடந்து வருவது வழக்கம். முருகன் சந்நிதானத்தில் திருமணங்கள் நடைபெறுவதை இங்குள்ள மக்கள் நிறைவாக கருதுவர்.

இன்று இவ்வாலயத்தை திருமதி. நேசமணி நடராசா நிர்வகித்து வருகின்றார். தர்மகர்தாவாகிய அவர் இறைபக்தி மிக்கவர். தன் தள்ளாத வயதிலும் கணவன் விட்டுச் சென்ற பணியை தொடர்வதில் இறையின்பம் காணு கின்றார்.

## கோயில்வரலாற்றுக்களை தொகுப் பதற்கு தகவல் தந்துதவியோர்

(1) திரு.A. அழகேசன் – மருதங்குளம் ஆலயங்கள்
(2) திரு. இ. அழகிரிசாமி – கருங்காலிச்சோலை முருகன் கோவில்
(3) திரு.கதிர்காமர் – பனையடி பிள்ளையார் கோவில்
(4) திரு.காளிமுத்து லெச்சுராமர் செட்டியார் முன்னீஸ்வரக்காளி கோவில்
(5) திரு. கோவிந்தசாமி – ஆனைவாசல் அம்மன் கோவில்
(6) திரு.கிருஷ்ணப்பிள்ளை – மதுரங்குளி பிள்ளையார் கோவில்
(7) திரு. சபாபதிப்பிள்ளை – திமிலை கன்னியம்மன் ஆலயம்
(8) T. செல்வராஜா – சேகுவண்தீவு முருகன் கோவில்
(9) திரு. நவரட்ணம் – நரக்கள்ளி காளி கோவில்
(10) திரு. கா. நாகரட்ணம் – தில்லையடி முருகன் கோவில்
(11) திரு. சு. நாகராஜா – கரம்பை பிள்ளையார் கோவில்
(12) மருதமுத்து நாராயணசாமி முந்தல் மருதடி விநாயகர் கோவில்
(13) ஆ.தினேஷ்குமார் முந்தல் திரௌபதாதேவி ஆலயம்
(14) திரு. ரவி – கல்பிட்டி முருகன் கோவில்
(15) திரு. ராசையா – கரப்பூ அம்மன் கோவில்
(16) ஆசிரியை மல்லிக்கா ஸ்ரீகாந் – குசலை அம்மன் கோவில்
(17) விஜயநாதன் – சேனைக்குடியிருப்பு முருகன் கோவில்
(18) இராசையா செல்லத்துரை – முந்தல் பாலையடிப்பிள்ளையார் கோவில்
(19) திரு. விஜயராசா – கொட்டகை ஐயனார் கோவில்
(20) திரு. V. ஆறுமுகம் – கருக்குப்பனை ஐயனார் கோவில்
(21) திரு. உடையார் – புளிச்சாக்குளம் மாரியம்மன் கோவில்
(22) திரு. ந. விபுலானந்தன் – மதுரங்குளி முருகன் கோவில்

"அபிஷேகம் அபிஷேகம் கும்பாபிஷேகம்
நாளை மதுர மர நிழலாளனுக்கு கும்பாபிஷேகம்
சென்றிடுங்கள் கண்டிடுங்கள் கும்பாபிஷேகம்
இன்று சாத்திடுங்கள் மதுர மரலாளனுக்கு எண்ணெய்க் காப்பு"

*தானிய வர்க்கங்கள் சிறந்த விலைக்கு கொள்முதல் செய்வோர்*
*அரிசி, மளிகைப் பொருட்கள் சகாய விலைக்கு வழங்குவோர்*

# WIJAYARANI STORES

MAIN STREET,
MADURANKULIYA

දාන්‍ය වර්ග ඉහළ මිලට ගන්නෝ සහ
සිල්ලර බඩු පහසු මිලට සපයන්නෝ

විජයරාණී ස්ටෝර්ස්

ප්‍රධාන වීදිය
මදුරන්කුලිය

'திரை கடலோடியும் திரவியம் தேடு'

கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்தும்

பொன்னுத்துரை அவர்கள்

83, மன்னார் வீதி, புத்தளம்

*கடலோரம் வீசும் காற்று, மலை மீதும் வீசச் செய்த நாயகா*
*உன் அருள் நாடி நிற்கின்றோம்*

# DEEPA JEWELLERS

**NO 35A, YATINUWARA VEEDIYA**
**KANDY**

PHONE: 08 - 32532

# "வடமேல் மாகாணத்தின் இந்துசமய வளர்ச்சி"

திருமதி, வ. கணேசன் (ஆசிரியை)
"தேத்தாப்பளை" தமிழ் றோ. க. வித்தியாலயம்

அன்னைமா கடலுடன் அழகிய குடாக்கடல் தாலாட்டுப் பாடும். தென்னைமா கமுகொடு நெல்லுஞ் சேர்ந்திசைபாடும் வடமேல் மாகாணத்தின் இந்து கடற்பிரதேசம் இந்துமக்களின் முக்கியவதிவிடமாக அமைந்துள்ளது. நாயக்கர்சேனை, முந்தல், குசலை, உடப்பு, மருதங்குளம், முன்னீஸ்வரம் என்பன புத்தளம் பிரதேசத்தில் கூடுதலாக சைவசமயிகள் வாழும் கிராமங்களாகும்.

புத்தளப்பிரதேசத்தில் தொன்மை மிக்க ஆலயங்களாக முன்னேஸ்வர முன்னைநாதர் ஆலயம் மானாவாரி சிவாலயமும் சிறப்பு மிக்கவை முன்னை நாதர் ஆலயம் இராமபிரான் வழிபட்ட சிறப்புமிக்கதலமாகும், மானாவாரி சிவாலயம் இராமபிரானால் உருவாக்கப்பட்டது எனவும் கருதப் படு கின்றது. இலங்கை வரலாற்றில் போர்த்துகீசரால் இடித்தழிக்கப்பட்ட முன்னைநாதர் ஆலயத்தை கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் புரைமைத்தான். அதனைச்சுற்றி ஆலயப்பணிக்காக பற்பலகிராமங்கள் அமைக்கப்பட்டன.

இப்பிரதேசத்தின் சைவக்கிராமங்களில் கொப்பு, தேங்காய் மரங்களுக்குச் சமர்ப்பித்து இறைவனை வழிபடும் வழக்கமும் நிலவியவருகிறது. இக்கிரா மங்களின் ஆதிமுறையும் இதுவேயாம். இந்த மரநிழலில் வழிபடும் கடவுளர் வரிசையிலே வைரவர், வீரபத்திரர், ஐயனார், வழிபாடுகள் முக்கியம் வாய்ந்தவை மரநிழ்ல்களில் கற்களை நாட்டி வழிபடும் வழக்கம் பின் ஏற்படலாயிற்று. வழிபாட்டிற்குரிய கற்களில் வெய்யில், மழை படா வண்ணம் கொட்டகைகள் அமைக்கப்பட்டன. கொட்டகையின் உள்ளிடம் பலரும் கூடத்தக்க பரப்புடையதாய் இருந்தது. கொட்டகைகள் மாறி ஒவ்வொரு தெய்வத்திற்கும் கோயில்கள் எழுந்தன.

புத்தளப்பிரதேசத்தின் விடிவெள்ளியாக, சைவசமயத்தையும், தமிழையும் காக்க எழுந்த செம்மல் என்றும் சிறப்புப் பெறும் பெருமை, இப்பிரதேச சமயவரலாற்றில் பேராசிரியர் சின்னத்தம்பி அவர்களையே சாரும். இப்பெரியாரின் அன்பளிப்பால் குசலை இந்து தமிழ் வித்தியாலயமும். மருதங்குளம் இந்து தமிழ் வித்தியாலமும், நாயக்கர் சேனை இந்து தமிழ்வித்தியாலயமும் குறிப்பிடத்தக்கவை. சைவ அபிவிருத்திச் சங்கம் இப் பாடசாலைகளின் நிருவாகப் பொறுப்பை ஏற்றுக் கொண்டதோடு, இன்னும் இப் பகுதியிலுள்ள இந்துப் பாடசாலைகளின் நிருவாகப் பொறுப்பையும் ஏற்றது.

முந்தல் கமலாம்பிகை வித்தியாசாலையில் பண்டிதர் மாணிக்கம் அவர்களும், நாயக்கர்சேனை நாவுக்கரசர் வித்தயாசாலையில் அதிபர் நடராசா, வித்துவான்

விஸ்வலிங்கம் என்போரும் குசலை தமிழ் வித்தியாலயத்தில் பண்டிதர் பசுபதிப்பிள்ளை அவர்களும் மருதங்குளம் சைவப்பிரகாசர் வித்தியாசாலையில் ஆசிரியர் சுப்பிரமணியம் அவர்களும் தத்தம் தலைமையின் கீழ் இந்துபோட் இராசரத்தினம் அவர்கள் மேற் பார்வையிட இயக்கி சைவசமயத்தின் வளர்ச்சிக்கு பாரிய சேவையினை நல்கினர். பாடசாலை ரீதியாக பேச்சுப் போட்டிகள் மனனப் போட்டிகள், பன்னிசைப்போட்டிகள் கட்டுரைப்போட்டிகள், போன்ற வற்றை நடத்தி பாடசாலை மாணவர் மத்தியில் இறைபக்தியை, சமயப் பற்றுதலை ஏற்படுத்தினர். கல்வி பயில வேண்டுமென்ற ஓர் உத்வேக த்தையும் மாணவர் மத்தியில் உண் டாக்கினர். வாழைப்பழத்தில் இலகுவாக ஊசிஏறுதல் போல் சிறுவர் மனத்திலும், பற்றுதல்களும், நம்பிக்கை களும் நன்கு பதியும் என்ற கொள்கையை தோற்று வாயாகக் கொண்டு சேவைமனப் பான்மையுடன் கடமையாற்றிய, பண்டிதர் களும், வித்துவான்களும் சமயவளர்ச்சிக்கும் கல்விவளர்ச்சிக்கும் வித்திட்டனர். இச் சைவப் பாடசாலை களிலிருந்து கல்விச் சிறப்பினை க்கண்டு அருகாமையிலுள்ள பாட சாலைகளிலிருந்து மாணவர்கள் இப் பாசாலைகளிற் சேர்ந்து கல்வி பயின்றனர்.

இந்து ஆலயங்களில் திரு விழாக்கள் குருபூசைத்தினங்கள், போன்ற பற்பல சமய உற்சவங்களை பொதுமக்கள் முன்னின்று நடத்தி தத்தம் ஊரின் மேம் பாட்டிற்கு ஒத்துழைப்பு வழங்கிவருகின்றனர். கோயிற் திருவிழாக்களின் போது ஊரே விழாக்கோலம் பூண்டுவிடும். புனிதமாகிவிடும். தீமிதிப்பு, மானப் பூத்திருவிழா என்பன குறிப்பிடத் தக்கவை.இந்நாட்களில் நோன்பு நோற்று நேர்த்திக்கடன்களை நிறை வேற்றல் என்பனவும் இவற்றுள் அடக்கம். இந்துமதப்பிடிப்புடைய மக்களின் தளராத வைராக்கியம், தெய்வநம்பிக்கை, சமயப்பற்றுதல். என்பன சமயவளர்ச்சிக்கு சான்றாக அமைந்த அம்சங்களாகும். இன்றும் உடப்பு, குசலை, முந்தல், மருதங்குளம், நாயக்கர்சேனை, முன்னேஸ்வரம், ஆகிய கிராமங்கள் தொடர்ந்தும் இந்து கிராமங்களாகவே திகழ் கின்றன. இந்துப்பாடசாலை களும் உண்டு. தம்மூர்களில் அமைந்துள்ள கோயில்களே பிணக்கு ளைத் தீர்க்கும் நீதிகூடமாகவும் அமைந்தன கற்பூரத்தின் மேலேயே கையை வைத்து சத்தியம் செய்து வழக்கு களைத் தீர்ப்பது மக்களின் சமயப்பற்றுதலின் மேம்பாட்டி னையும், நம்பிக்கையின் ஆழத்தினை யும் எடுத்துக்காட்டுகின்றது.

இன்றும் இப்பிரதேசத்தின் கண்ணே அமைந்துள்ள சில கிராம ங்களில் கோயிற் திருவிழாக்கள் பத்து, பதினெட்டு நாட்கள் நடைபெறும். அக்காலங்களில் வீடுவீடாகச் சென்று தேவார திருவாச கங்கள், பஜனைகள் பாடுதல், கோயில்களில் சமயச் சொற்பொழிவுகள் நிகழ்த் துதல், நாட்டுக்கூத்துகள், நாடகங்கள் போன்ற சமயசம்பந்தமான கலை நிகழ்ச்சிகளை நடாத்துதல் சிறப்பம் சங்களாகும். இவற்றை நோக்குமிடத்து புத்தளப் பிரதேசத்தில் தமிழ்பண் பாட்டுக் கலாச்சாரம், சமயப்பற்று

என்பன ஒருங்கேயமைந்து காணப்படும் கிராமங்களில் உடப்பு முக்கிய இடத்தை வகிக்கின்றது. இவ்வூர் மக்களின் பண்பாட்டிலும் மரபிலும் ஊறித் தோய்ந்து இனிமை பரப்புவது கலையம்சங்களாகும். இம்மாந்தரின் கலையார்வம் தளைத் தோங்க காரணியாய் அமைந்தது இங்கு நடைபெறும் ஆலய உற் சவங்களே இவ்வூரிலே முகிழ்ந்து வரும் கலைஞர்கள் பல நாடக மன் றங்களை ஸ்தாபித்து வளர்ச்சிப் பாதையிலே வீறுநடை போட்டுக் கொண்டிருக்கின்றனர். இவ்வூர்மக்கள் நாடகக்கலைக்கே முக்கியத்துவம் கொடுக்கின்றனர். அடுத்து நாட்டுக்கூத்து, வில்லுப்பாட்டு, கும்மி என்பன அம்மக்களின் கலைச்சிறப் பிற்கு முத்திரை பதிக்கின்றன குறிப்பாக இன்றும் நாடளாவிய ரீதியில் தமிழ்மக்களின் உள்ளங்களில் ஆழப்பதிந்த ஓர் கலைநிகழ்ச்சியாக மிளிர்வது உடப்பூர்வாழ் திருவாளர் சோமஸ்கந்தர் அவர்களின் வில்லி சையாகும். அவரின் வில்லிசையின் மகிமை காலத்தால் அழியாது மக்கள் மனதில் வாழ்ந்து கொண்டிக்கும்.

உடப்பூரைப்போலவே முந்தல் எனும் கிராமமக்களும் சைவப்பற்றும், தமிழ்ப்பற்றும் மிக்கவர்கள். இவ்வூர் மக்களும் இங்கு கோயில் கொண்டெழு ந்திருக்கும் ஸ்ரீ திரௌபதையம்மன் மீது பக்தி, விசுவாசம், பயம் கொண்டவர்கள் உடப்பூரைப் போலவே இவ்வூர் ஆலய த்திலும் மகாபாரதக் கதையைக் கொண்டே உற்சவங்கள் கொண்டாடப் படுகின்றன. இவ்வாலயங்களில் பதினெட்டு நாட்கள் தொடர்ந்து மகாபாரதக்கதை படிக்கப்பட்டு இறுதியில் திரௌபதா தேவியின் சபதம் முடிவடைந்ததற்காக நிகழ்வுறும் அதிமுக்கிய திருவிழாவே தீமிதிப்பாகும். இவ்வூர்மக்கள் இவ்விழாவை பெரு விழாவாகவே கொண்டாடி மகிழ்கின்றனர். பன்நெடுங்காலமாக இவ்வூர்களில் வாழும் மக்கள் சைவத்தையும், தமிழையும் கட்டிக்காத்து ஒழுகி வருகின்றனர்.

தற்போது பல சமய நிறுவன ங்கள் சமயவளர்ச்சிக்கு ஆற்றும் பணிகள் அளப்பரியன குருநாகல் இந்துமகா சபை,புத்தளம் இந்து மகாசபை, முன்னீஸ் வரம் தேவஸ் தானம், ஆலயபரிபாலன சபைகள் என்பன குறிப்பிடத்தக்கவை. இன்று நாடளாவிய ரீதியில் உதயமாகிவரும் அறநெறிப்பாடசாலைகளும், சைவக் கிராமங்கள் தோறும் சேவையாற்றி வரும் இந்து இளைஞர் மன்றங்களும், சைவசமயத்தின் வளர்ச்சிக்கு உறு துணையாக விளங்குகின்றன. முத லாம் ஆண்டு தொடக்கம், பதினோ ராம் ஆண்டு வரை பாடசாலை ரீதியில் சமயக்கல்வியை கட்டாயப் பாடமாக்கி அரசும் சமய வளர்ச்சிக்கு உதவிவருகிறது. கடவுள் நம்பிக்கை யையும், கடவுட்தொண்டையும், இளமையிலேயே போதித்தால் அது ஒருவரது வாழ்க்கை முழுவதும் கலந்து நிற்கும் அந்த வகையில் வடமேல் மாகாண இந்துசமய வளர்ச்சிக்கு கொழும்பு விவேகானந்த சபையின் பங்களிப்பு குறிப்பிட த்தக்கதாகும். வருடாவருடம் விவே கானந்த சைவசமயப் பரீட்சையை இந்துப்பாடசாலைகளில் மட்டு மல்லாது கிறிஸ்தவ, முஸ்லிம் பாட சாலைகளில் பயிலும் இந்துமாண வர்களும் அப் பரீட்சையில் தோற்றும்

வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளமை சிறப்புடையதாகும்.

விரல் விட்டு எண்ணக் கூடியளவு புத்தளப்பிரதேச த்திலுள்ள சைவக் கிராமங்களில் பல சைவவித்தியாசாலைகள் நிறுவப்பட்டன. 1903ம் ஆண்டு உடப்பு இந்து தமிழ் வித்தியாலயமும் 1945ம் ஆண்டு முன்னீஸ்வரம் இந்து தமிழ் வித்தியாலயமும், 1957ம் ஆண்டு முந்தல் கமலாம்பிகை இந்து வித்தியாலயமும், 1958ம் ஆண்டு குசலை இந்து தமிழ் வித்தியாலயமும், 1959ம் ஆண்டு மருதங்குளம் இந்து தமிழ் வித்தியாலயமும், 1960ம் நாயக்கர்சேனை நாவுக்கரசர் வித்தியாலயமும் ஆரம்பித்து வைக்கப்பட்டன. கருங்காலிச்சோலை இந்து தமிழ் வித்தியாலயமும், ஆண்டிமுனை இந்து தமிழ் வித்தியாலயமும் நிறுவப்பட்டன. பின் 1979ம் ஆண்டு புத்தளம் நகரில் ஓர் இந்து வித்தியாலயம் அமைக்கப்பட்டது. இப்பாடசாலை யை நிறுவியதில் முக்கிய பங்களிப்பு சைவப்பெருமக்களையே சாரும். ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட புத்தளம் இந்துமகா சபை சைவசமய வளர்ச்சிக்கு பாரிய பங்களிப்பை ஆற்றியுள்ளது. இந்துசமய வினாக்கள் குருபூசைத் தினங்கள், இச்சபையில் கொண்டாடப்படுகின்றன. சைவ சமய மாணாக்கரிடையே, பற்பல சமயச் சார்பான போட்டிகளை நடாத்தி வெற்றியீட்டியோருக்கு சான்றிதழ்களும், பரிசில்களும் வழங்கி ஊக்குவிக்கின்றது. வறிய மாணவர்களை தெரிந்து அவர்கள் கல்விக்கு சமய நூல்கள், அப்பியாசப்புத்தகங்கள் என்பவற்றையும் வழங்கி சமயவளர்ச்சிக்கு உறுதிணை செய்கின்றது.

1994ம் ஆண்டு இராமகிருஷ்ண மிஷன் சுவாமி ஆத்மகனாநந்தஜி அவர்கள் உடப்பு, முந்தல் ஆகிய கிராமங்களுக்கு விஜயம் செய்தார். இது நாள்வரை புத்தளப் பிரதேசத்தில் இப்பெரியாரைப் போல் எவரும் தம்பாதங்களை பதித்திலர் அவரின் விஜயத்தின் போது மாணவர்களுக்கு அப்பியாசப்புத்தகங்களை, நன்கொடையாக வழங்கினார். நேரடி கலந்துரையாடல்கள் மூலமும் பெருமை சேர்த்தார். அவ்வண்ணமே 1995ம் ஆண்டு இச் சுவாமி அவர்களின் விஜயம் புத்தளம் இந்து வித்தியாலயத்தில் அமைந்தது. அப்பொழுது அவரின் தலைமையின் கீழ் சைவ சமயக் கருத்தரங்கு நடத்தப் பட்டது. இவ்வேற்பாட்டை இந்து கலாச்சார அமைச்சும், புத்தளம் சைவ மகா சபையும் இணைந்து ஏற்பாடு செய்திருந்தன. அறநெறிப் பாடசாலைகளை அமைப் பதிலும் கருத்தரங்குகளை நடத்துவதிலும் இந்துக் கலாச்சார அலுவல்கள் அமைச்சு இப்பகுதியில் குறிப்பிடத்தக்கவளவு சேவையாற்றி வருகிறது.

எனவே வடமேல் மாகாணத்தின் இந்துமத வரலாற்று நிகழ்வுகளை தொகுத்து நாம் நோக்குகையில் வரையறை கூறமுடியாத காலத்திலிருந்தே சிறப்பிற்குரியதாகப் பேணப்பட்ட இந்து மதம், சிறப்பாக வளர்க்கப்பட்டு, ஏனைய காரணிகளால் சற்று தளர்ச்சியடைந்தாலும், சமயப்பெரியோர்களினதும், பொது மக்களினதும் அளப்பரிய சேவையினாலும், பற்றுதலினாலும் அழியவிடாது பாதுகாப்பைப் பெற்று இன்று மக்கள் ஆதரவுடன் சிறப்பான நிலைப்பாட்டைப் பெற்று நிலை பெற்று வாழ்வதைக் காணமுடிகிறது.

# புத்தளம் மாவட்டத்தில் இந்துக்களின் திருமண, பூப்புனித நீராட்டு அபரக் கிரியைகள் - 

– ஒரு கண்ணோட்டம்

திரு. வி. தயாளன் (உதவி அதிபர் மாம்புரி அ.த வித்தியாலயம்)

கிரியைகள் இந்துக்களுக்கு இன்றிய மையாதவையாகும். கோயிற் கிரியைக்கும் அடுத்தபடியாக திரு மணக்கிரியை, பூப்புனித நீராட்டுக் கிரியை, அபரக்கிரியை. என்பன முக்கி யத்துவம் பெறுகின்றன. இக் கிரியைகள் பண்டைய காலம் தொட்டு கடைப் பிடிக்கப்பட்டு வருகின்றன. உயிர் கள் நல்வாழ்வு பெறவும் நற்பேறெய்தவும் ஏற்றதாய் மந்திரங்களோடு செய்யப் படுபவை கிரியைகள் ஆகும். சடங்குகளே, கிரியை களாக வளர்ச்சி கண்டன.

புத்தளம் மாவட்டத்தில் விரல் விட்டெண்ணக் கூடிய சில இந்துக் கிராமங்கள் ஆங்காங்கே இருந்த போதிலும் அவை இன்றும் இந்துக்களின் கலாசாரங்களையும் பண்பாடுகளையும் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன. அந்நியர் படையெடுப்பிற்குமுன் புத்தள மாவட்ட கரையோரங்களில் இந்துக்களே பெருபான்மையினராக காணப்பட்டனர். அந்நியர் படையெடுப் பால் மக்கள்மதம் மாற்றப்பட்டது மட்டுமல்லாமல் இந்து ஆலயங்களும் இடித்து அழிக்கப்பட்டன. அவற்றுக் கெல்லாம் ஈடு கொடுத்து இன்றும் இந்துக்கள் வாழும் சிலகிராமங்கள் இருந்தே வருகின்றன. அவை, உடப்பு, முந்தல், கருங்காலிச் சோலை, நாயக்கர் சேனை, குசலை, முனீஸ்வரம், மருதங் குளம், கரம்பை என்பனவாகும். இக்கிராமங்களில் இன்றும் மரபு தவறாது தலைமுறை தலைமுயாக கிரியைகள் நடைபெற்று வருவதை நாம் காணலாம்.

## திருமணக்கிரியை

திருமணத்தின் முற்பகுதி பெண் பார்க்கும் படலமாகும். நல்ல நாள் பார்த்து மணமகன் சகிதம் அவரது உறவினர் பெண் வீட்டிற்கு பெண்பார்க்க செல்வர். பெண் அலங்கரிக்கப்பட்டு மனமகனது முன் ஆசனத்தில் இருத்தப்படுவாள். அல்லது குளிர்பானம் வழங்குவாள். இருவீட்டாருக்கும் பெண்பிடித்திருந்தால் மணமகன் வீட்டார் பெண் வீட்டாரின் விருந்துபசாரத்தை ஏற்றுக்கொள்வர். இருவீட்டாருக்கும் விருப்பக்குறைவாயின் பிறிதொரு நாளில் கலந்தாலோசிப் போமென மணமகன் வீட்டார் விடை பெற்றுச் செல்வர். சாதகம் பொருத்த மாயின் தாம்பூலம் மாற்றப்படும். சீர்வரிசை கதைக்கப்படும். திருமணத் திற்கானநாள் குறிக்கப்படும். சில சமயம் பதிவு திகதி முன் குறிக்கப்படும் அல்லது திருமணத் தன்றே நிகழும். பதிவுத் திருமணத்தன்று சீர்வரிசை கொடுக்கப் படும்.

பந்தக்கால் நடுதல் சுபவேளையில் முறையே மணமகன் வீட்டிலும், மணமகள் வீட்டிலும் இடம் பெறும். பந்தக்காலாக பாலைமரம் நடப்படும். பாலைமரத்துடன் முள்முருக்கு அல்லது அரசமரக்கிளை நடப்படும். பந்தக்காலுக்கு தங்கச்சங்கிலி அணிவித்து மஞ்சள் பூசி பால்வார்த்து சூடம், சாம்பிராணி காட்டி நடும்குழிக்கு ஐம்பொன்னிட்டு சுமங்கலிப் பெண்கள் சகிதம் மணமான ஆண்கள் கைபிடித்து நடப்படும். அதன் பின் மணமகன் வெளியில் செல்வது தவிர்க்கப்படும். உடப்பூரில் திருமணத்திற்கு முதல்நாள் பாற்பொங்கல் பொங்கி பலகாரவகைகள் செய்து குத்து விளக்கின் முன் படைத்து சுமங்கலிகளுக்கு முதலில் கொடுத்து பின் அனைவரும் உண்ணுவர். உள்ளூ ராயின் பாற்சாதம் மனமகள் மச்சாள் மாருடன் உண்ணுவது வழக்கம்.

திருமணத்தன்று மணமகன் உறவினர் சகிதம் சுபவேளையில் வீட்டை விட்டு வெளிக்கிட்டு மணமகளது வீட்டிற்கு செல்வர். அங்கு மணமகனை மணமகளது சகோதரிகள் ஆரத்தி வரவேற்று கால் கழுவுவர்.சகோதரிகள் இல்லாதவிடத்து ஏனையோர் இக்காரியத்தைச் செய்வர் கால் கழுவுபவருக்கு மோதிரம், பரிசுப்பொருள் அல்லது பணம் மணமகனால் கொடுக்கப்படும். கல்யாணப்பந்தல் கட்டப்பட்டு மணவறைபொருத்தப்பட்டு அலங்கரிக்கப்பட்டிருக்கும். மணவறையில் வரவேற்புபசாரத்தின் பின் மணமகன் மணவரையில் அமர்வார். மணமகளின் சகோதரர் மணமகனின் தோழனாக அருகில் இருப்பார். அப்போது குருவானவர் தாம் செய்யப் போகும் கிரியைக்கு சகலரிடமும் அனுமதி கோருவார். விநாயகர் பூசை நடைபெறும். அப்போது சகலரும் இக்காரியம் இனிது நிறைவேற விநாயகனை வேண்டுவர். காப்பு கட்டப்பட்டு கும்பபூசை, நவக்கிரகபூசை, ஓமம் வளர்த்தல் என்பன நடைபெறும். மணவறையில் மணமகன் மணமகளை தனது வலப்பக்கத்தில் இருத்தி காப்பு கட்டியபின் மணமகனது தந்தை இரண்டு கோத்திரப் பெயர்களை சொல்லி மங்களப்பொருட்களுடன் வேட்டி சால்வையும் நறுமணப் பொருட்களும் சேர்த்து மணமகன்கையில் வைத்து நீர் வார்த்து கொடுப்பார். இது தாரைவார்த்து கொடுத்தல் எனப்படும். அதாவது ஒருபொருளை இறுதியாக கொடுத் தலாகும். கூறை கொடுத்தல், அதாவது பெண்ணின் திருமணச் சேலை, தாலி மற்றும் உபசாரப்பொருட்கள் வைத்து சுத்தி செய்து பூசித்தபின் பெரியோரினால் அவை ஆசீர்வதிக்கப்பட்டு மணமகளுக்கு கொடுக்கப்படும். பெண் தோழியாக மணமகனது சகோதரி ஒருவர் இருப்பார்.

திருமணத்தின் முக்கியபகுதியான தாலிகட்டல் முகூர்த்த வேளையில் நடைபெறும். தாலியானது தங்கத்தால் செய்யப்படுவது வழக்கம். அதில் சிவ லிங்கம், விநாயகர், அல்லது, இலட்சுமியின் திரு வுருவம் பொறிக்கப்பட்டிருக்கும். தாலியிலுள்ள மூர்த்தியை பூசித்தபின் தாலி அக்கினியால் சுத்தி செய்யப்படும். பின்பு மணமகன் மணமகளை ஏற்றுக் கொண்ட தற்கு ஒப்பாக உமாமகேசுரரை உச்சரித்துக் கொண்டு கழுத்தில் தாலி கட்டுவார். தாலிகட்டும் வேளை பெண் இடப் பக்கத்தில் இருத்தப்பட்டிருப்பாள். அப்போது கெட்டிமேளம் முழங்கும்,. நாதஸ்வரம் இசைக்கப்படும். குழுமியிருப்போர் மலர்கள் சகிதம் மஞ்சள் கலந்த அரிசி தூவுவர். மணமகள் தாலியிலும் மணமகன் நெற்றியிலும் திருநீறு குங்குமம் சாத்துவார். இதனை அடுத்து சிவாக்கினி வளர்த்து பூசை நடைபெறும். தயிர், தேன், சர்க்கரை, நெய், பழம், சேர்த்து செய்யப்பட்ட பதார்த்தம் மணமகள் முதலில் மணமகனுக்கும் பின்னர் மணமகன் மணமகளுக்கு உண்ணக் கொடுப்பர். பசு புண்ணிய வடிவம் என்பதால் நல்ல சகுனம் எனக்கொண்டு பசு மணமகளுக்கு காட்டப்படுகிறது. ஏழடி வைத்தல், அம்மி மிதித்தல் அருந்ததி காட்டுதல் என்பன நடைபெறும். (இவை பெண் கற்புடையவளாக மனஉறுதியோடு இருக்க வேண்டும் என்பதை உணர்த்துகிறது) மோதிரம் தேடுதல் நடைபெறும் இது மணமக்களிடையே அச்சத்தை நீக்குமுகமாகவும் ஆளுமையை காட்டுமுகமாகவும் நடைபெறுகின்றது.

அடுத்ததாக விருந்துபசாரம் நடைபெறும். முதலில் மணமகன் வீட்டாருக்கும் பின்னர் மணமகள் வீட்டாருக்கும் கொடுக்கப்படும். திருமணத்தில் கலந்து கொண்டோர் (பணம்) மொய் வைப்பர். அல்லது பரிசுப்பொருட்கள் கொடுப்பர். மண மகனது நெருங்கிய உறவினர் சிலர் இருக்க ஏனையோர் விடைபெற்றுச் சென்று மறுவீடு அழைப்பதற்கான

ஏற்பாடுகளை செய்வர். மணமகள் தமது தேன்நிலவை மணமகனது இல்லத்தில் கழிப்பதே வழக்கம். ஆனால் தற்போது விரும்பிய இடங்களை தெரிவு செய்து கழிப்பது வழக்கமாக இருக்கிறது. மறு வீடன்று மணமகனது உறவினர் மணமகளையும் உறவினர்களையும் அழைத்துச்செல்வர். அங்கும் விருந்திற்கு அழைக்கப்பட்டோர் பணம் மொய் வைப்பர் அல்லது பரிசுப் பொருட்கள் கொடுப்பர்.

திருமணம் புத்தளம் மாவட்டத்தில் பெரும்பாலும் மணமகளது இல்லத் திலேயே நடைபெறுகின்றது. அதுவே முறையுமாகும். ஆயினும் தற்போது வசதிக் கேற்றவாறு. ஆலயங்களிலும், கலாசார மண்டபங்களிலும் நடைபெறுகின்றன.

## பூப்புனித நீராட்டு விழா.

ஒரு பெண் பூப்பெய்தியதும் அவள் தனிமையாக்கப்படுவாள். அன்று கண்டநீர் வார்த்தல் இடம் பெறும். இதை தந்தையின் சகோதரிகள் செய்வர். அல்லது மூத்த குடும்பத் தலைவிகள் செய்வர். முதலாம் நாளும் ஐந்தாம் நாளும் மாமிமார் மைத்துனிகள் சீர் கொண்டு போவர் இது செப்புக் கொண்டு போதல் எனப்படும். செப்பில் வெற்றிலை, பாக்கு, பழம், முட்டை மஞ்சள், சீனி, பணம், உயர்ரக பட்டுச் சேலை என்பன இருக்கும். நல்லெண் ணையும் சிலர் கொண்டு போவர். உடப்பில் சீர்கொண்டு போவோர் ஓரிடத்தில் கூடி தட்டம் தாம்பாளம் என்பவற்றில் பொருட்களை வைத்து வெள்ளைத்துணியால் மூடி சங்கு மற்றும் மங்கள வாத்தியங்கள் முழங்க வெள்ளை வேட்டியை தலை மேல் நால்வர் பிடிக்க வீதிவழியே செல்வர்.

சீர் கொண்டு சென்றபின் குத்து விளக்கேற்றி அதற்கு முன்சீர்யாவும் வைக்கப்பட்ட பின் மாமிமாரும், மச்சாள் மாரும் முதலாம் நாள் கண்டநீர் வார்ப்பர். பெண்ணின் தலையில் மஞ்சலும் தேங்காய்ப்பாலும் இட்டு நீர் வார்ப்பர் • அதன் பின் பெண்ணை அலங்காரம் செய்து பிட்டு, களி, பணியாரவகை, நிறை குட கும்பம் தேங்காய் முச்சுடர், நிறை நாழிகை என்பன கொண்டு ஆரத்தி எடுப்பர் சி இடங்களில் ஐந்தாம் நாள் விழாவையும், 16ம் நாள் விழாவையும் 30ம் நாள் விழாவையும் மேற்கொள்வர். இறுதிநாளன்று விருந்துபசாரம் நடைபெறும். விருந்திற்கு செல்வோர் (மொய்) பணம், அல்லது, பரிசுப் பொரு ட்கள் கொடுப்பர்.

ஒரு பெண் பூப்பெய்தும் நேரம் அவள் வாழ்க்கைக்கு மிகமுக்கியமானது என்பதால் குருவானவர் அழைக்கப்பட்டு கிரியைகள் செய்யப்படுவது வழக்கம்.

## அபரக்கிரியை

ஒருவர் இறந்த பின் அவரது நன்மைகருதி செய்யும் கிரியைகள் அபரக் கிரியைகள் ஆகும். கிரியைகள் செய்வ தினால் இறந்த ஆன்மா பாவங்களி னின்றும் நீங்கி சிவத்துவம் அடையும் என்பது ஒரு நம்பிக்கை. ஒரு இந்து வீட்டில் மரணம் ஏற்பட்டதும் உற்றார் உறவினர்களுக்கு அறிவிக்கப்படும். உடப்பில் குடிமகன் வந்து சங்கு ஊதுவான். உயிர் நீத்த உடல் சவரம் செய்யப்பட்டு எண்ணெய் தோய்த்து நீராட்டப்படும். இறந்தவரின் பிள்ளைகள் உறவினர் உயிர்நீர்த்த உடலை நீராட்ட நீர் கொண்டு வருவர். இது நீர்மாலை எனப்படும். உடப்பில் கடல் நீரும் பயன்படுத்துப்படுகின்றது. நீராட்டப்பட்ட உயிர்நீத்த உடல் வெண்ணிற ஆடை அணிவித்து தலை தெற்கே இருக்கக் கூடியதாக வைக்கப்படும். உடப்பைத் தவிர்ந்த ஏனைய இடங்களில் உயிர்நீத்த உடல் சவப்பெட்டியினுள் வைக்கப்படும்.

கன்னிப்பெண்ணானால் சுமங்கலி கோலத்தில் வைக்கப்படும். சில இடங்

களில் பறை, தம்பட்டம் அடிக்கப்படும்.

குழல் ஊதப்படும். உடப்பில் குடும் பஸ்தன் ஒருவன் இறந்தால் விதவை மனைவிக்கு நெருங்கிய உறவினர் வெண்ணிறம் கலந்த சேலைகள் கொடுப்பர். மாங்கல்ய அர்ப்பணம் சுண்ணம் இடித்தல் நடைபெறும் (உடப்பில் இது கருமாதியன்று நடைபெறும்) திருமுறை ஓதப்படும்.

உயிர்நீத்த உடல் சுடலைக்கு எடுத்துச் செல்ல பாடை அமைக்கப்படும். பெண்கள் சுடலை செல்வதில்லை • மரணவீட்டிலேயே வாய்க்கரிசி இடுவர். உயிர்நீத்த உடல் வைக்கப்பட்ட சவப்பெட்டியை பாடைமேல் வைத்து (bier) தூக்கிச் செல்வர். (தற்போது சில இடங்களில் பாடைசெய்யப்படுவதில்லை) சுடலை செல்லுமுன் இறந்தவரின் பேரன் பேத்திமார் பந்தம் எடுத்து இறுதி மரியாதை செலுத்துவர். சுடலை செல்லும் போது. வீதியில் மணல் தூவப்படும் பொரி, மலர், மஞ்சல் கலந்த அரிசி சில்லறைக்காசு என்பன தூவப்படும். குசலையில் பேண்ட் (Band) வாத்திய இசையும் முன் எடுத்துச் செல்லப்படும். தலை பின்னோக்கி இருக்க எடுத்துச் செல்வர்.முச்சந்திகளில் மும்முறை வலம் வருவர். வெடி கொழுத்தப்படும், தீச்சட்டி கொண்டு செல்லப்படும்.

சுடலை சேர்ந்ததும் சிதையை அல்லது புதைகுழியை மும்முறை வலம் வருவர். தலை தெற்கே இருக்கக் கூடியதாக வைப்பர். இறுதிக் கிரியை நடைபெறும். கொள்ளி வைப்பவர் (தந்தைக்கு மூத்தமகன் தாய்க்கு இளைய மகன்) மொட்டை அடிக்கப்படுவர். (தற்போது சில இடங்களில் கையில் சவரம் செய்யப்படுகிறது) கொள்ளி வைப்பவர் கொள்ளிப்பானை யுடனும் சிவக்கினி முன் எடுத்துச் செல்ல மும்முறை உயிர் நீத்த உடலை வலம் வருவார். அப்போது குடிமகன் அல்லது முதியவர் ஒருவர் மும்முறை கொள்ளிப்பானையை கத்தியால் துவாரமிடுவார். இறுதியில் கொள்ளிப் பானை உயிர்நீத்த உடலின் தலைக்கு முன்னால் போட்டு உடைக்கப்படும். சிவாக்கினியை சிதையின் பின்புறமாக பின்நோக்கி நின்று தீ மூட்டி திரும்பிப் பாராமல் நீராடி வீடு செல்வார். தீ மூட்டும் போது "அக்கினி தேவனே பரிசுத்தமாயிருக்கிற உடலின் மந்திரத் தாலுண்டான பூரணாகுதியை ஏற்றுக் கொள்ளும்" என நினைத்து தீயிடுவார். (தற்போது பல இடங்களில் அடக்கம் செய்யப்படுகிறது) வீடு செல்லு முன் அனைவரும் நீராடி மஞ்சள்நீர் தெளித்து உலக்கையை தாண்டி வீடு செல்வர்.

இரண்டாம் நாள் காடாற்றல் (காடத்து) நடைபெறும் (குசலையில் மூன்றாம் நாள் காடாற்றல் நடைபெறும்) அன்று எரிக்கப்பட்ட உயிர்நீத்த உடலின் சாம்பலை எடுத்து பால்கலந்து புண்ணிய நீரில் இடுவர். சிறிதளவை கருமாதிக்காக ஒரு சிறு பேணியில் இட்டு பாதுகாப்பான இடத்தில் சுடலையில் வைப்பர் . அல்லது வீட்டிற்கு தூரத்தே வைப்பர். சாம்பலை புண்ணிய நீரில் இடுதலால் ஆன்மா புண்ணிய உலகம் அடையும் எனப் பொருள்படும். (உடப்பில் காடத்தன்று தானம் வழங்கப்படும்) எட்டாம் நாள் தானம் வழங்கப்படும். 30ம் நாளிலும் படைத்து 31ம் நாள் கருமாதி புண்ணிய நீர்க்கரையில் குருவானவர் கிரியைகளுடன் நடைபெறும். முதலாம் வருடத்தில் ஆட்டைத் திவசமும் வருடா வருடம் அதே திகதியில் சிரார்த்தமும் நடைபெறும்.

# ஐயனார் வழிபாட்டில் ஐயனார் மூர்த்தம்.

## ஒரு படிமவியல் நோக்கு

**இரா. வை. கனகரத்தினம்** முதுநிலை விரிவுரையாளர் (இந்துப் பண்பாடு)
பேராதனைப் பல்கலைக்கழகம்

வைதிக, அவைதிக மதத்தினர் பலரும் போற்றும் தெய்வம் ஐயனார் ஆவார். ஐயனார் வழிபாடு இந்தியாவிலும் குறிப்பாகத் தமிழ் நாட்டிலும் ஆந்திராவிலும் ஈழநாட்டிலும் சிறப்பான முறையில் போற்றப்படுகின்றது. தமிழ் நாட்டிலும் பார்க்க ஈழநாட்டில் இவ்வழிபாடு பரந்து பட்டுக் காணப்படுகின்றது. தமிழ் நாட்டில் ஐயனார் சாதாரண மக்கள் மத்தியில் காவல் தெய்வம் என்னும் நோக்கில் வழிபடப்படுகின்றார். ஆனால் ஈழநாட்டில் ஆகம முறைக்குட்பட்டும் கிராமிய வழிபாட்டிற்கு உட்பட்டும் போற்றப் படுகின்றார். அவ்வகையில் ஐயனார் வழிபாடு ஈழநாட்டிலேயே சிறப்புற்று விளங்குகின்றது எனலாம்.

ஐயனார், ஐயன், சாத்தான் என்னும் பெயர்களால் பொதுவாக அழைக்கப் பட்டாலும், தலைவன், உயிர்களைக் காப்பவன், தர்மத்தைக் காப்பவன் என்னும் பொருள்களின் அடிப்படையிலேயே போற்றப்படுகின்றார். பூதநாதன், அறப் பெயர்ச் சாத்தன், தர்ம சாஸ்தா என்னும் பெயர்கள் மேற்கூறிய பொருள்களை உணர்த்துவனவாகும். கடல் வண்ணன், காரி, காரியூர்தி, கோழிக் கொடியோன், சாத் வாகனன், செண்டாயுதன், செண்ட லங்காரன், புஷ்கலை மணாளன், பூரணை கேள்வன், புறத்தவன், மகா சாத்தான், யோகி, வெள்ளை யானையூர்தி என்னும் பெயர்களும் ஐயனைப் போற்றும் நாமங்களாகும்.

ஐயனாரின் தோற்றம் பற்றி வடமொழிப் புராணங்களும் தமிழ்ப் புராணங்களும் பலவகையாகக் குறிப் பிடுகின்றன. அந்நூல்கள் தரும் கருத்துக்களைச் சுருக்கமாக நோக்கலாம்.

(அ) தாருகாவனத்தில் இருடிகளின் ஆணவமாறி இறுமாப்புக்களை அடக்கு வதற்கு அரியும் அரனும் எழுந்தருளிய காலத்தில் மோகினியாய் நின்ற விஷ்ணுவின் பால் அரனுக்கு மகனாகத் தோன்றியவர் அரிகரபுத்திரர் என்னும் ஐயனார். (ஸ்காந்தம் – கந்தபுராணம் : அசுரகாண்டம்)

(ஆ) தேவர்கள் பாற்கடலைக் கடையும் போது தோன்றிய சக்தியின் அழகில் மையல் கொண்ட சிவனுக்கு ஜனித்த வரே சாஸ்தா என்னும் ஐயனார். பிரமாண்டபுராணம் –உப சங்ஹார பாதம்)

(இ) மகிஷி முகி தனது அண்ணாவை சங்கரித்த துர்க்கா தேவி போல் வீரமுள்ளவளாக வந்து தேவர்களைப் பழிவாங்கத் துணிந்து பிரமாவை நோக்கி வரமிருந்தாள். மகிஷி தனது தவத்தின் வலிமையால் தான் நினைத்த வரத்தைப் பெற்றுக் கொண்டாள். தனது இலட்சியத்தை நிறைவேற்றத் தேவர்களைத் துன்புறுத்தி வந்தாள். தேவர்கள் சிவனை நோக்கி மகிஷி முகியிடம் இருந்து தம்மைக் காக்கும்படி வேண்டினர். தேவர்களின் துன்பம் நீங்கும் பொருட்டு விஷ்ணு மோகினி வடிவம் தாங்கி வர சிவன் அம் மோகினியை மோகித்ததினால் தோன்றியவரே அரிகர புத்திரர் என்னும் ஐயனாராகும். பின்னர் அரிகர புத்திரர், சிவனின் அடியவனான பந்தள மன்னவனின் மகனாக அவதரிக்கும் படி அரிகர புத்திரரை பணித்தார். அவர் பூவுலகத்திற்கு வந்து பந்தள தேசத்து மன்னனுக்கு மகனாகி மணிகண்டன் என்னும் பெயரோடு வளர்ந்தார்.

மணிகண்டன் தாயின் நோய் தீர்க்க வேண்டி புலிப்பால் கறந்து வரக் கானகம்

புறப்பட்டான். கானகம் செல்லும் வழியில் முனிவர்களின் தேவர்களின் வேண்டுதலின் பெயரில் பொன்னம்பலம் மேட்டிலே எழுந்தருணி அவர்கள் குறை கேட்டுத் திரும்பும் வழியில் மகிஷி முகி ஐயனாரை எதிர்த்தாள். ஐயனார் அவ்வரக்கியைக் கொன்று, அவளது சாபத்தை நீக்கி மஞ்சமாதா என்னும் பெயருடன் தனது சகோதரியாக்கி அருள் பாலித்தார்.

பின்னர் இந்திரன் வேங்கையாகவும் தேவதைகளைப் பெண் புலிகளாகவும் தேவர்களைப் புலிகளாகவும் மாற்றி மணிகண்டனார் வேங்கை மீது ஏறி அரண்மனையை அடைந்தார். தன் மைந்தனின் திருவருட் தோற்றத்தை அறிந்து கொண்ட மன்னன், தர்ம சாஸ்தாவாகிய ஐயனாரின் திருவருள் நிலைத்து நின்று மக்கள் உய்தி பெற வேண்டி நின்றார். அப்பொழுது ஐயன் சபரிமலையைக் காட்டி அதுவே எனது உறைவிடம் எனக் கூறி எல்லோருக்கும் அருள் பாலித்தார் என்பது புராண இலக்கிய மரபு.
(பிரமாண்ட புராணம் - பூதநாத உபாக்கியானம்)

தமிழ் மக்களிடத்தில் ஐயனார் வழிபாடு பண்டுதொட்டு நிலைபெற்று வருகின்றது. தமிழ் நாட்டில் சங்க காலத்தில் உறையூருக்குக் கிழக்கேயுள்ள பிடவூரில் அறப்பெயர் சாத்தன் என்னும் பெயரில் ஐயனார் போற்றப்பட்டார். (புற நானூறு 395) சங்கமருவிய காலத்தில் புறம பணையான் வாழ்கோட்டம், பாகண்டச் சாத்தான் கோயில் என்னும் இரு சாத்தான் கோயில்கள் இருந்த தாக சிலப்பதிகாரம் குறிப்பிடும்.

சேக்கிழார் பாடிய பெரிய புராணத்திலே சேரமான் பெருமாணாயனார் திருக்கைலாசத்தில் சிவபெருமான் முன்னிலையில் பாடிய ஆதியுலாவைக் கேட்டறிந்த மா சாத்தனார் அந்நூலை பிடவூரிலே வெளிப்படுத்தினர் என்பர். (பெரிய புராணம் வெள்ளை யானைச் சருக்கம்) பிடவூர் ஐயனார், அரங்கேற்றிய ஐயனார் எனக் காரணப் பெயர் கொண்டு போற்றப்படுவதும் இங்கு நினைவு கூரத்தக்கதாகும். பல்லவர் காலத்திலும் சோழர் காலத்திலும் ஐயனார் வழிபாட்டிற்குரிய தெய்வமாகவும் ஆலயங்களில் படிமங்கள் அமைத்துப் போற்றப்படும் தெய்வமாகவும் விளங்கினார். பிடவூரில் அமைந்த சாத்தான் கோயிலுக்கு இராசராச சோழன் கல்வெட்டு. அவன் அக் கோயிலுக்கு விட்ட மானியங்களை நினைவுபடுத்துவதோடு, சோழர் காலத்தில் முக்கியத்துவம் பெற்ற தெய்வமாகவும் ஐயனார் விளங்கினார் என்பதை காட்டி நிற்கும்.

அப்பர் சுவாமிகள் ஐயனாரை மனங்கொண்டு போற்றுதல் செய்யும் பொழுது "சாத்தனை மகனாக வைத்தார்" (திருப்பயற்றூர்ப்பதிகம் 4. 32.2) என்றும் சுந்தர மூர்த்தி நாயனார் " பேரருளாளன் பிடவூரன் தம்மானே" என்றும் (7.96.6) போற்றித் துதித்து நிற்பர். அப்பர் ஐயனாரைச் சிவனின் மைந்தனாகவும் சுந்தரர் சிவனாகவும் போற்றுதல் செய்வது ஐயனார் சிவ சம்பந்தமுடையவர் என்பதை உறுதிப்படுத்துவதாக அமைகின்றது எனலாம்.

சுப்பிரபேதாகமம், பூர்வ காரணாகமம், குலால சாஸ்திராகமம், சில்பரத்தினம், தந்திர சமுச்சயம், ஸாரஸ்வதீய சித்ர கர்ம சாஸ்திரம் முதலான நூல்கள் ஐயனாரின் ஸ்தாபன விதிகளையும் படிம விதிகளையும் அர்ச்சன விதிகளையும் சிறப்பாக எடுத்துரைக்கின்றன.

ஐயனாரின் பொதுவான இயல்புகளைக் கூறவந்த இலக்கியங்கள் பெரிதும் ஐயனாரைச் சிவனின் மைந்தனாகவே கூற முற்படுகின்றன. ஆனால் சிற்ப சாத்திர நூல்கள் பலவும் ஐயனைச் சிவனின் தோற்றமென்றே குறிப்பிடுகின்றன. வரலாற்று ஆசிரியர் ஒருவர் சங்க இலக்கியம் தரும் குறிப்புக்களை அடிப்படையாகக் கொண்டு ஐயனாரைச்

சிவன் தோற்றம் என்பர். பிறிதோர் வகை யாகக் கூறின் தமிழ் மக்கள் முதற் தெய்வம் ஐயனாரே எனக் கூற முற்படுவார். அவர் மிகுந்த ஆய்வோடு பின்வருமாறு கூறுவது யாவராலும் கருத்திற் கொள்ளப்பட வேண்டிய தொன்றாகும்.

" 'சிவன்' எனும் நாமமும் தமிழ்ச் சொல்லன்று, வடமொழி தான் போலும். ஆதலால், அப்பெயரும் ஆரியவர்வரவின் பின்னே எழுந்த தென்பது தோற்றம். ஆயினும், இது சிவனுக்கு மூல சட்டமான ஓர் தெய்வம் பழந்தமிழருள்ளும் இருந்தது, எனத் தோன்றுகின்றது. இவ்வாறாக நோக்கும் போது சிவன் புதியவரல்ல தமிழரது பழைய தெய்வமே யென்னல் வேண்டும். ஆயின், சிவனுக்கு மூல சட்டமான அவ் ஆதித் தமிழ்த் தெய்வத்தின் பெயரியாது? இவ்வினாவுக்கு விடையிறுத்தல் இப்போது எளிதன்று. ஆயினும், ஓர் வேளை ஐயனார் அல்லது ஐயப்பன் என்பதே அந்நாமமாகலாம். என்று சந்தேகிக்கின்றோம். ஐயனுக்கு இறைய னார் எனும் நாமமும் வழங்கியது போலும். ஐயை (கொற்றவை) யின் நாயகன் ஐயன் என அழைக்கப்பட்டிருத்தலும் இயல்பே" (தமிழரின் பூர்வ சரித்திரமும் சமயமும் 1920 பக். 89)

சுந்தர மூர்த்தி சுவாமிகள் ஐய னாரைச் சிவ னெனத் துதிப்பதும் ஆதிசங்கரரின் சீடருள் ஒருவர் கிராத சாஸ்தாவடிவில்சிவனைக் கண்டதாகக் கூறப்படுவதும் சாஸ்தாவின் (ஐயனாரின் இலக்ஷணத்தைச் சாத்திரத்தில் கூறியபடி கூறுகின்றேன் எனக் கூறும் ஸரஸ்வதீய சித்ர கர்ம சாத்திரம் என்னும் நூல் 'இவர் பரமேஸ்வரனுக்குச் சமமானவராவார்' எனக் கூறுவதோடு அமையாது. ஐயனாரின் மூர்த்தி பேதங்கள் சிலவற்றை ஐயனாருடன் தொடர்பு படுத்திக் கூறு வதும் இங்கு மனங்கொள்ள த்தக்கதாகும். உதாரணமாக விஷவா கனர், பவித்திர மூர்த்தி முதலான மூர்த்த நாமங்களை இங்கு குறிப்பிடலாம்.

நிற்க, படிமவியலில் ஐயனாரின் வடிவங்கள் எவ்வகையில் உருவாக்கப்பட வேண்டும் என்பதை நோக்குவோம். ஸ்தபதிகள் படிவங்களை வடிக்கும் பொழுது, தியான விதி, இலட்சண விதி, அளவுப்பிரமாணம் என்பவற்றோடு அப்படிமம் உணர்த்தும் தத்துவத்தையும் கவனத்திற் கொள்ள வேண்டும் என்பர். ஒரு படிமத்திலோ சிற்பத்திலோ அழகு பொருந்தும் படி அங்க உறுப்புக்களை அமைக்கும் முறைமையை இலட்சண விதி என்பர். குறிப்பாக அபிநயங்கள், பங்கங்கள் ஆகியவற்றுடன் தொடர்புடையனவாக இவை அமைந்திருக்கும். அபிநயமானது பார்ப்பவர் மனதில் அழகு (ரஸ) ஏற்படக் கூடிய விதமாக உடலையும் அதன் உறுப்புகளையும் வளர்த்துக் காட்டும் ஒரு முயற்சி என்பர். அங்க அபிநயங்களை உள்ளடக்கியதே பங்கள் ஆகும். இப்பங்கள் சம பங்கம், அபங்கம், அதிபங்கம் அல்லது திரிபங்கம் என மூன்று வகைப்படும். சாந்தமும் கருணையும் நிறைந்த உருவங்கள் நேராக நிற்றல் அல்லது இருத்தல் நிலையில் காணப்படுதல் சமபங்க நிலையெனப்படும். உதாரணமாக சந்திரசேகரர், சுப்பிரமணியர் மூர்த்தங் களைக் குறிப்பிடலாம். அபங்கம் ஒரு பக்கம் சரிந்து நிற்கும் நிலையாகும். தேவியின் உருவங்கள், அடியவர்கள் உருவங்கள் இந்நிலையில் காணப்படும். படிமங்களில் வீரம், கோபம், சாந்தம், கருணை முதலான அம்சங்கள் அமைந்து ஒன்றிற்கு மேற்பட்ட வளைவுகளைக் கொண்டதாக இருப்பின் இப்படிமங்கள் அதிபங்க உருவங்கள் என்பர். தாண்டவ மூர்த்தங்கள், கோதண்டராமன் நடராச வடிவங்கள், காளி முதலான உருவங்கள் இவ்வகைகயில் அடங்கும்.

படிமத்திற்குப் பங்கம் எவ்வளவு முக்கியத்துவம் உடையதோ அத்தகைய முக்கியத்துவம் உடையவை அபிநயங்கள் ஆகும். அபிநயங்கள் நான்கு வகைப்படும். அவற்றில் ஆங்கிக அபிநயங்கள் படிமக் கலையைப் பொறுத்த மட்டில்

முக்கியத்துவம் வாய்ந்தவை. இவ்வபிநயம் உடல் உறுப்புக்களால் நிகழ்த்தப்படுவது. இது அங்கம், பிரத்தியங்கம் உபாங்கம் என மூன்று வகைப்படும். தலை, கைகள், மார்பு, விலா, இடுப்பு, கால்கள் என்பவற்றால் அபிநயித்தல் ஆங்கீக அபிநயம் எனப்படும். ஆங்கீக அபிநயத்தில் கை அபிநயங்கள் படிமங்களைப் பொறுத்தமட்டில் மிக முக்கியமானது. படிமங்களை வெளிப் படுத்தும் குண இயல்புகளை வெளிப் படுத்துதற்கு இம் முத்திரைகளே கருவியாக அமைந்துள்ளன. அவையே படிமங்களுக்கு உயிர் ஊட்டுகின்றன. அவற்றைப் பேச வைக்கின்றன. இந்து க்களின் சிற்பங்களில் இடம் பெறும் கை அபிநயங்களின் சிறப்பியல்புகளை வெளிப்படுத்த வந்த கலைப்புலவர்கள்.

"ஆயுதங்களைக் கைவிரல்களால் மிக இலகுவாகவும், மென்மையாகவும், நளினமாகவும் பிடித்து நிற்கும் வகையில் தென்னிந்திய உருவங்கள் சிறப்ப டைந்துள்ளன. விரல்களை மடித்தும் நீட்டியும் ஆயுதங்களைப் பிடிக்கும் தன்மை உருவங்களின் மனத்தின் கண் அரும்புவதாகிய இன்ப நிலையை மிகவும் தெளிவாக வெளிக் காட்டுகின்றது. இவ்வுருவங்கள் தெய்வச் செயலை உருவகப்படுத்த எழுந்தன வாதலின், இவை மனித உருவத்திற்கு இயல்பாய மைந்த வளைவுகளையும், விரல் அமைப்பு க்களையும் கொள்ளாது, மாறானதொரு முறையிலேயே உடல் முயற்சிகளைக் காட்டுகின்றன. தென் இந்திய உருவங்களின் விரல் அமைப்புகளையும், அவ்விரல்கள் ஆயுதங்கள் பிடித்திருக்கும் தன்மைகளையும் நோக்கில் இச்செயல் களில் எவ்வித தேகத் தன்மையும் பொருந்தாத இன்பவுணர்ச்சி மாத்திரமே குறிப்பால் தொனித்தல் காணப்படும்."

எனச் சிறப்பித்துக் குறிப்பிடுவது இங்கு மனங் கொள்ளதக்கதாகும். ஒரு படிமம் அபிநயம், பங்கம் ஆகிய அம்சங்களுடன் சிறப்புப் பெறுவதில்லை. அப்படிமம் குறிப்பிடப்பட்ட அளவைக்கும் சரியாக அமையும் பொழுது அது முழுவடிவமும் அழகும் பெறுகின்றது. படிமவியலில் இடம் பெறும் அளவைகள் அங்குலம், தாலம் என அழைக்கப் படுகின்றன. முகத்தின் நீளம் தாலம் எனப்படும். ஒரு தாலத்தின் 1/12 பங்கு அங்குலம் எனப்படும். அங்குலம் நான்கு வகைப்படும். இதில் தேகாங்குலம் முக்கியம் பெறுவதாகும். தேகாங்குலம் என்பது உருவத்தை 124, அல்லது 120 அல்லது 116 பங்குகளாகப் பிரித்து ஒரு பகுதியைக் குறிப்பதாகும். இது தாலங்களுக்கு ஏற்ற முறையில் மாறுதல் பெறும்.

பன்னிரண்டு அங்குலம், கொண்டது ஒரு தாலம். எட்டுத்தால அளவு கொண்ட உருவம் மனிடலும் எனவும் ஒன்பது தால அளவு கொண்ட உருவங்கள் தெய்வீகம் எனவும் சுக்கிர நீதி குறிப்பிடுவது இங்கு நினைவு கூரத்தக்கதாகும். ஆனால் தென்னக சிற்ப சாத்திரங்கள் சற்று மாறுபட்ட தால அளவைகளைக் குறிப்பிட்டுள்ளன. இத்தால அளவைகள் உத்தமம், மத்திமம், அதமம் என மூன்று வகைப்படும். ஒரு தாலங்கள் தொடங்கிப் பத்துத் தாலம் வரை தெய்வீக உரு வங்களை அமைத்தல் வேண்டுமென தமிழகத்தில் எழுந்த சிற்ப நூல்கள் குறிப்பிடுகின்றன. உத்தம தசதாலம், உருவங்கள் 124 தேகாங்குலத்திலும் மத்திம தசதாலம் உருவங்கள் 120 தேகா ங்குலத்திலும் அதம தசதால உருவங்கள் 116 தேகாங்குலத்திலும் வடித்தல் வேண்டும். உருவங்களின் உயரத்தை அங்குலம் தாலம் எனும் அளவைகளால் கணித்து அமைப்பது போல உருவங்களின் கனத்தையும் உறுப்புக்களின் இடைவெளி யையும் கணக்கிட்டு அமைப்பர். மானம், பிரமாணம், உந்மானம், பரிமாணம் உப மானம், இலபமானம் என்னும் வகையில் இதன் அளவைகள் அமையும். மாநம் உயரத்தையும், பிரமாணம் அகலத்தையும், பரிமாணம் சுற்றளவையும், உபமானம் இரு உறுப்புக்களின் இடைவெளியையும், லம்பமாநம் உருவத்தின் உறுப்புக்கள்

இருக்க வேண்டிய ஏற்றத் தாழ்வுகளையும் குறிக்கும். இவ்விதமாகவே உருவங்களின் அமைப்புக் கேற்ப அவற்றின் ஆடை, அணிகளும் அமைவதோடு அவற்றின் வெளிப்பாடாக படிமத்தின் குண இயல்புகளும் வெளிப்படுத்தப்படுகின்றது.

(தென் இந்திய சிற்பவடிவம் 19. பக் 88- 95)

இத்தகைய படிமவியல் அம்ச ங்களைக் கொண்டு ஐயனாரின் படிமத்தினை நோக்கலாம்.

ஐயனாரின் படிமங்கள் இரண்டு வகையில் அமைக்கப்படுகின்றன. அவை வருமாறு :

(1) சம பங்கநிலை (நேராக நிற்கும் நிலை)

(2) அபங்க நிலை (சற்றே சரிந்து நிற்கும் நிலை.

பொதுவாக ஐயனார் படிமங்கள் சம பங்க நிலையில் வீராசன, சுகாசன, யோகாசன, அனு க்கிரக மூர்த்திகளாகவே அமைக்கப்படுவது வழமையாகும். சிவனுக்கு மூர்த்தி பேதங்கள் இருப்பது போன்று ஐயனாருக்கும் மூர்த்தி பேதங்கள் உள. தியானரத்தினா வளி எனும் ஆகம பத்ததி ஐயனாருக்கும் 16 பேதங்களைக் குறிப்பிடும், மகாலட்சுமி கல்பம் என்னும் நூல் ஆறு பேதங்களைக் குறிப்பிடும். ஸ்ரீ தத்துவநிதி (பாகம்-1) சிவபேதங்களில் ஒன்றாக ஐயனாரைக் குறிப்பிடும்,சாரஸ் வதீய சித்ரகர்ம சாஸ்திரம் ஐயனாரின் மூர்த்தி பேதங்களை வகைப்படுத்திக் காட்டாது தாம் கருதும் பேதங்களை விளக்கிச் செல்லும். அவ்வகையில்

(i) ஐயனார் (ஐயனார்)

(ii) கஜவாகனர் (வெள்ளியானை யூர்தி)

(iii) விருஷ வாகனர்

(iv) யோக மூர்த்தி (பவித்திர மூர்த்தி)

(vi) சர்வேசுரவரர் (போல்பவர்)

(vi) புஷ்கலை மணாளன்

(vii) பூரணை கேள்வன் முதலான மூர்த்தி பேதங்களைப் குறிப்பிடலாம்.

ஐயனாரின் மாநம், உன்மாநம், பிரமாணங்கள் முதலானவற்றை தச தாலத்தில் அமைந்த அதம சத தாலத்தில் கணக்கிட்டு அமைத்தல் வேண்டும். பாதம் முதல் உச்சிவரையில் 116 அங்குலம் உயரமுடையது அதம தச தாலமாகும். பின்வரும் முறையில் வகுப்படும்.

முகநீளம் 12 1/2 அங்குலம்

கண்ட நீளம்

கழுத்து 4 அங்குலம்

கழுத்திலிருந்து மார்பு வரை 12 1/2 அங்குலம்

மார்பு தொடங்கிக் கொப்பூழ் வரை

12 1/2 அங்குலம்

கொப்பூழ் தொடங்கி குறிவரை 12 1/2 அங்குலம்

குறிதொடங்கி முழந்தாள் வரை 12 1/2 அங்குலம்

முழந்தாள் பூட்டு 4 அங்குலம்

முழந்தாள் தொடங்கி கணு க்கால் வரை 25 அங்குலம்

கணைக்கால் தொடங்கி நிலம் (பாதம்) வரை 4 அங்குலம்

ஆகக் கூடுதல் அங்குலம் 116

இப்பிரமாணங்களுக்கு அமைய சுகாசன மூர்த்தியாக இரண்டு கைக ளுடன் படைக்கப்படுவதே வழக்கம். ஆயுனும் சிவனின் மூர்த்தங்களி லொன் றான கரிகர வடிவத்தை அமை க்கும் பொழுது நான்கு கைகள் கொண்டதாகப் அமைத்தல் வேண்டுமென ஸ்ரீ தத்துவநீதி என்னும் சிற்பசாத்திர நூல் குறிப்பிடும். ஸாரஸ்தீய சித்ரகர்ம சாத்திரம் என்னும் நூல் ஐயனாரை அமைக்கும் பொழுது,

"ஐயனாரின் இடது காலானது பீடத்தின் மீது குந்தி வைக்கப்பட வேண்டும். வலது கால் தொங்க விட்டிருக்க வேண்டும். காலானது யானையின் துதிக்கையைப் போல (கறைவு சிறைவாக) இருக்க வேண்டும். இடது கையானது முழங்

காலின் மீது வைக்கப்பட்டிருக்க வேண்டும். உடல் நன்கு நிமிர்ந்து உயர்ந்து இருக்க வேண்டும். சிவப்பு ஆடையணிந்து , ஸிம்ஹாஸனத்தின் மீது வீற்றிருக்க வேண்டும். வட்ட வடிவமாகவாவது, வளை வாகவாவது இருக்கும் த ண்டத்தை (துடியை) வைத்திருக்க வேண்டும். வலக் கையில் தாமரை மலர் இருக்கவேண்டும். அந்தக் கையானது ஸ்தநத்தளவுக்கு உயர்ந்து இருக்க வேண்டும்.

கிரீடம் அல்லது கேச பந்தத்தை உடையவர். தேகமானது பச்சை (அல்லது நீல) நிறமாகும். தங்க நிறம் அல்லது சிவப்பு நிறமாக இருப்பதுமாகும். இடது (வலது) காதில் கர்ணபத்திரமும் இடது காதில் மகர குண்டலமும் அணிந்திருத்தல் வேண்டும். யஜ்ஞோப வீதம், ஹாரம், கேயூரம், இவை களையும் ஸகல விதமான ஆபரண ங்களையும் அணிந்திருத்தல் வேண்டும்."

எனச் சிறப்பான முறையில் எடு த்துரை க்கும். ஸ்ரீ தத்துவ நிதி ஹரி ஹர வடிவ அமைப்புப் பற்றிக் குறிப்பிடும் பொழுது இரு வகைகளில் குறிப்பிடுகின்றது.

அவை:

(i) ஹரிகரார்த மூர்த்தி யானது வலது பக்கத்தில் (ஈகதுரு பாக த்தில்) பவழ நிறமுடையதும், சந்திர கலையை தரித்தமுடையதும், பஸ்ம், ருத்திரா க்ஷம். இவைகளை ஆபரணமாக உடையதுமாகும். இடது பக்கத்தில் நீல நிறமுடையதும், மணி மகுட மணிந் திருப்பதும், பீதாம்பரம் தரித்து சோபிப்ப துமாகும். வலது கைகளில் மழுவும், அபயமும் தரித்திருப்பதாகும். இடது கைகளில் சங்கமும் கதையும் தரித்திரு ப்பதாகும். வலது பக்கத்தில் நெற்றிக் கண்ணுடனிருப்பதாகும்.

(ii) வலது பக்கத்தில் மழு (அபயங் களைத்)தரிப்பதும், இடது பக்கத்தில் கடக முத்திரை சங்கங்களைத் தரிப்பதும், வலது பக்கத்தில் (சடை முடியில்) கங்கையைத் தரிப்பதும், இடது பக்கத்தில் கிரீடத்தைத் தரிப்பதும், வலது பக்கத்தில் சிவப்பு நிறமாகவும் இடது பக்கத்தில் நீல நிறமாக வுமிருப்பதும் வலது பக்கத்தில் புலித்தோலாடையும் இடது பக்கத்தில் பீதாம்பரத்தையும் தரிப்பதும், வலது நெற்றியில் அரைக் கண்ணைத் தரிப்பதும், ஸமபாதமாக இருப்பதும், வெண்மையான யஞ்ஞோப வீத த்தையணிந்திருப்பதும் ஸகல விதமான க்ஷேமங்களையுமளிப்பதும் ஸகல சம்பத்துக்களையளிப்பதுமான ஹரிஹர ார்த்த ஸ்வரூபமுடைய பரமேஸ்வரனை வணங்குகிறேன்".

(ஸ்ரீ தத்துவ நிதி 1963 பக் 279)

(vi) புஷ்கலை மணாளன்

(vii) பூரணை கேள்வான் முதலான மூர்த்தி பேதங்களைக் குறிப்பிடலாம்.

ஐயனாரின் அமைப்பு முறை பற்றித் தத்துவநீதி கூறும் கருத்துக்கள் சிந்திக்கத் தக்கதாதும். பொதுவாகச் சிற்ப சாத்திரம் நூல்கள் ஐயனாரின் படிம அமைப்புப் பற்றிக் கூறும் பொழுது ஐயனாரின் பொதுவான மரபுக்கதைகள் யாவற்றையும் மனங் கொண்டு குறிப்பிடுவது மரபு. அதனால் தத்துவ நீதி விஷ்ணுவுக்கும் சிவனுக்கும் மகனாகத் தோன்றிய ஹரிஹர புத்திரர் என்பதையே தனித்து மனங்கொண்டு ஐயனாரின் வடிவ அமைப்பினைக் குறிப்பிட்டிருப்பது கவனத்திற் கொள்ள த்தக்கது. அந்நூல் வலது பக்கத்தில் பரமேசுவ லக்ஷணங்களுடனும், இடது பக்கத்தில் மஹா விஷ்ணுவின் லக்ஷணங்களுடனும் விளங்குகின்ற ஹரிக ரார்த மூர்த்தியானது என் முன்னிலையில் பிரகாசித்துக் கொண்டிருக்க வேண்டும். (மேற்படி நூல் பக்279) என போற்றி நிற்பதும் இங்கு நினைவு கூரத்தக்கதாகும்.

மேலும் ஐயனாரின் மூர்த்தி பேதங்களில் புஷ்கலை மணாளன் பூரணை கேள்வான் மிக முக்கியமானவையாகும். புஷ்கலையையும் பூரணையையும் ஐயனார் மனைவியாகக் கொண்டிருப்பதால் ஐயனா ருக்கு மேற்காட்டிய நாமங்கள் ஏற்பட்ட தெனலாம்.

ஐயனார் பூரணை புஷ்கலை ஆகிய இரு தேவிமார்களையும் தனது இடப்பக்கத்திலும் வலப்பக்கத்திலும் கொண்டிருப்பவர். புஷ் கலா தேவியைப் படைக்கும் பொழுது அவள் தங்க நிறம் கொண்டவளாகவும் அவளுடைய இடது கால் பீடத்தின் மீது இருப்பதாகவும் வலது கால் கீழே தொங்கிக் கொண்டிப்பதாகவும் வலது கரம் தாமரைப்பூ தாங்கிய வண்ணமும் இடது கரம் வரத முத்திரை உடையதாகவும் அந்தக்கை கடக முத்திரை கொண்டிருப்பதாகவும் படைத்தல் வேண்டுமென சிற்ப நூல்கள் குறிப்பிடும்.

புஷ்கலா தேவியைப் அமைக்கும் போது கரண்ட மகுடமும் அல்லது கேச பந்தமும், சந்த வீரமும் பச்சை ஆடையும் காதில் கர்ணிகாரமும் ஸ்தந பந்தமும் தரித்துச் சகல விதமான ஆபரணங்களை அணிந்தவளாகவும் படைத்தல் வேண்டும். இத்தேவிமாரின் உருவங்கள் அபங்க, சமபங்க நிலைகளில் படைக்கலாம் என சிற்ப நூல்கள் குறிப்பிடுகின்றன.

ஐயனாரைப் பிரதிட்டை செய்யும் ஆலயங்கள் இந்து காண்டம் (?)வழிநடப்பு, கர்படம் (?) கானகம், பட்டணம், கோத்மகோலனம், கிராமம் கிராமத்தின் வெளிப்பக்கம், தேவாலய வாயிலின் தென் பக்கம், கோயில், யானையின் முதுகு, மண்டபம், தண்ணீர்ப் பந்தல், கோவிலில் பரிவார தேவதைகளை வரிசையாக வைக்கும் பிரகாரத்திலுள்ள மண்டபம்,பிரகாரத்தில் கோபுரத்துடனிருக்குமிடம் முதலான இடங்களில் ஐயனாரைப் பிரதிட்டை செய்ய வேண்டும்.

ஐயனாரை மூலவராகக் கொண்ட கோவில்களின் இருபக்கத் துவாரபாலகர்களாக இரண்டு பூதங்கள், அதாவது தண்டீ என்றும் விபவீ என்றும் அழைக்கப்படும். பூதங்களைப் பிரதிட்டை செய்ய வேண்டும். அத்துடன் இத்துவார பாலகர் இருவரில் ஒருவருடைய இடது காலும் மற்றொருவடைய வலது காலும் குஞ்சிதமாக இருத்தல் வேண்டும். இரு துவாரபாலகரும் வலது கையில் சத்தி என்னும் ஆயுதத்தைக் கொண்டிருக்க வேண்டும். மற்றொரு இடக்கையானது வரத முத்திரை கொண்டதாக இருத்தல் வேண்டும். ஒருவர் மஞ்சள் நிறமாகவும் மற்றொருவர் பச்சை நிறமாகவும் இருத்தல் வேண்டும் என சிற்ப நூல்கள் குறிப்பிடுவதை யாவரும் கவனத்திற் கொள்ளல் அவசியமானதாகும்.

மேலும் ஐயனார் அட்டயோகிகள், சித்தர்கள் வித்தியாதரர்கள், கின்னரர்கள் முதலானோர்களால் சேவிக்கப்படுபவராகவும் அலங்காரமாய் இருக்கும் படியும் அமைத்தல் வேண்டும். (ஸ்ரீ சாரஸ்வதீய சித்திர கர்ம சாத்திரம், 1960 பக் 408)

முடிவாக இறைவன் 'தூணிலும் இருப்பான், துரும்பிலும் இருப்பான்' என்பது சாதாரண பொது மகனின் நம்பிக்கை. அந்த வகையில் பல்லோராலும் போற்றப்படும் தெய்வமாக விளக்குபவர் ஐயனார். ஆயினும் பிழை பொறுக்க மாட்டாத தெய்வம் என்பதிலும் இப்பொது மக்களே நம்பிக்கை உடையவர்கள். ஐயனார் விதிமுறைகளுக்கு உட்படுத்தப்படும் பொழுது ஆகம், சிற்ப சாத்திர விதிமுறைகளுக்கு அமைவாகவே ஐயனார் வழிபாடு போற்றப்படல் வேண்டும் என்பதிலும் நம்பிக்கையுடையவர்களும் இப்பொது மக்களே யாவர். ஐயன் சிவனின் அம்சங்களைப் பொருந்தியவன். ஐயனை சர்வேஸ்சுவரன், பவித்திர மூர்த்தி, ஹரிஹர மூர்த்தி விருஷ வாகனர் என சிற்ப சாத்திர நூல்கள் போற்றுகின்றன. அத்தகைய சிறப்பம்சங்கள் பொருந்திய ஐயப்பனின் குஞ்சிதபாத நிழலைப் பெறுவதற்கு ஒவ்வொரு பக்தனுக்கும் தகுதி உண்டு. நாமும் அவனை மெய்யன்போடு போற்றி உய்தி பெறுவோமாக.

கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்துகிறோம்

கலையம்சம் கூடிய நகைகளை 22 காரட்
தங்கத்தில் செய்து வழங்குவோர்

නදිකා ජුවලරි ● ✳ ✳ ● நதீகா ஜுவலரி

**NADHIKA JEWELLERY**

NO 7, GRAND STREET,
NEGOMBO

கும்பாபிஷேகம் சிறப்பாய் நிறைவு பெறுக

தரமான புடவைத் தெரிவிற்கு
தரமுள்ள தாபனம்

O✳O

**CHILAW GEETHA TEXTILES**

P. PUSHPARAAJU

**NO 55, BAZAAR STREET
CHILAW**

# புத்தளம் மாவட்ட சைவசமய நிறுவனங்களும் அவற்றின் பணிகளும் - ஒரு நோக்கு

**திரு. மு. கௌரிகாந்தன் *ஆசிரியர் புத்தளம் இந்து மகா வித்தியாலயம்***

இலங்கைத்தமிழ்ச் சைவரது பண்டைக் கால சமய நிலைக்களமாக விளங்கியவை ஆலயங்கள் மட்டுமே எனலாம். ஊர்கள் தோறும் சிறியளவிலோ பெரியளவிலோ அமைக்கப்பட்ட கோயில்களுக்குச் சென்று இறையருளை வேண்டும் அளவிலேதான் அக்கால சமய நிலைகாணப்பட்டது. போத்துக்கேயர்,. ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்திலே பெரும்பாலான சைவாலயங்கள் இடித் தழிக்கப்பட்டன. பிரித்தானியர் ஆட்சிக்காலத்திலே சமய சுதந்திரம் வழங்கப்பட்டாலும் அவர்கள் கிறிஸ்தவ திருச்சபைகள் மூலமாக மக்களுக்குப் பல சலுகைகளை வழங்கியும் குறிப்பாகப் பாடசாலைக் கல்வியூடாக மதம் மாற்றும் நடவடிக்கையினை மேற்கொண்டி ருந்தனர். ஒரு புறம் கிறிஸ்தவம் முதலான சமயங்களின் அமைப்புரீதியான செயற் பாடும், மறுபுறம் ஆலயங்களின் புனருத்தாரண, நிர்மாண வேலைகள், ஒழுங்கீனங்கள் என்பனவும் இலங்கையில் சைவ சமயத்தவரிடையே ஆலய பரிபாலன சபைகள், சங்கங்கள் என்பன தோன்றக் காரணமாயின. மிஷனரிமார்கள் பாடசாலைகளை நிறுவி ஆங்கிலக் கல்வியினையும் புகட்டி மக்களை மதம் மாற்றிய செயல், ஆறுமுகநாவலர் அவர்களால் சைவப் பாடசாலைகள் தோற்றுவிக்கப்படக் காரணமாக அமைந்தது. இவரைத் தொடர்ந்து தனிப்பட்ட சைவப்பெரியார்களும் "இந்து போட்" எனப்படும் சைவ வித்தியாவிருத்திச் சங்கமும் இப்பணியில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

புத்தளம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் சைவப் பாடசாலைகளின் தோற்றத்திற்கு அரசாங்கம், கிராம முன்னேற்றச் சங்கம், இந்து போட், தனிப்பட்ட பெரியார்கள், இந்து மகாசபை என்பன அரும் பணியாற்றியுள்ளன. இவற்றிக்கு முன்னர் திண்ணைப் பள்ளிகளும் ஒவ்வோர் ஊர்களிலும் அங்கொன்றும் இங்கொன்றுமாக அமைந்த ஆலயங்களும் தம்மாலான பங்களிப்பை வழங்கி வந்தன.

## *உடப்பு தமிழ் மகா வித்தியாலயமும் இந்து ஆலய பரிபாலன சபையும்*

புத்தளம் மாவட்டத்திலே நூற்றுக்கு 75% வீதமான தமிழ்ச்சைவர்கள் வாழும் கிராமம் உடப்பூராகும். தீ மிதிப்புக் காலத்திலும் தூயதாகிய பசுவின் சாணியை எரிப்பதனாலும் பெறப்படும் திரு நீற்றினை நெற்றியிலே பட்டைதீட்டியது போன்று பூசிச் சிவப்பொலிவோடு காட்சியளிக்கும் இவ்வூரவர் உடல்,உள, உறுதிமிக்கவர்கள். இங்குள்ள மக்கள் இயன்றவரை மத மாற்றத்திற்ககப்படாமல் வாழ்வதற்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. அவற்றுள் முக்கியமானவை புகழ்பெற்ற திரௌபதியம்மன் ஆலய தீமிதிப்பு வைபமும், போர்த்துக்கேயரது ஆட்சிக்குப் பின்னான பெரும்பாலான மக்களின் குடியேற்றமுமாகும் என்று கூறப்படுகிறது. ஆயினும் பிரித்தானியர் ஆட்சிக் காலத்திலேயே பெரும்பாலான மக்கள் மதம் மாற்றப்பட்ட சம்பவம் பற்றிக் கேட்கப்பட்ட பொழுது இவ்வூரவர் ஒருவர் பதிலளிக்கையில் "மத மாற்றம் என்பது பெரும்பாலும் படித்தவர்கள் மட்டத்திலே தான் இடம் பெற்றிருந்தது. அவ்வாறானதொரு சூழ்நிலை அக்காலத்தில் இங்கிருக்கவில்லை. சாதாரண மக்களும் வசதி வாய்ப்புகளுக்காகத் தமது சமயத்தைப் பலியிட்டுப் பிற மதத்தைத் தழுவக் கூடிய நிலையிலிருக்கவில்லை. சுயதொழிலை அவர்கள் எப்பொழுதும் நம்பியிருந்தனர்" என்றார். இதனால் தான்

போலும் தனிப்பட்ட பெரியார்களினதோ சங்கங்களினதோ முயற்சியின்றி 1903ம் ஆண்டு இன்றைய உடப்பு தமிழ் மகா வித்தியாலயம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை என்ற பெயரில் ஆரம்பிக்கப் பட்டது. இப்பாடசாலையின் முதல் தலைமையாசிரியர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திரு. இளைய தம்பி அவர்களாவர். இப்பாடசாலை தோன்ற முன்பு இப் பிரதேசத்தில் சைவசமயத்தையும் அதன் வளர்ச்சிக்குக் கருவியாகிய கல்வி யினையும் வளர்த்த பெருமை திண்ணைப் பள்ளிகளையே சாரும். இவற்றில், மகாபாரதம் ஒழுங்காகப் போதிக்கப்பட்டது. திருவாளர்கள் நல்லராக்குப்பிள்ளை, சின்னையா பிள்ளை, சொக்கலிங்க வாத்தியார், பெரியாண்டி அண்ணாவி -முதலானோர் திண்ணைப்பள்ளி மூலம் உருவானவர்களே.

150 மாணவர்களுடன் ஆரம்பிக்கப் பட்ட இப்பாடசாலையில் இன்று 1200 மாணவர் வரையில் கல்விபயிலுகின்றனர். 28 நிரந்தர ஆசிரியர்களும், 6 தொண்டர் ஆசிரியர்களும் கற்பிக்கின்றனர். 1945ம் ஆண்டிலிருந்து க.பொ.த சா/த பரீட்சை க்கும் 1968ம் ஆண்டிலிருந்து க.பொ.த உ/த பரீட்சைக்கும் மாணவர் தோற்றி வரு கின்றனர். 1990ம் ஆண்டிற்குப் பின்னர் 07 பேர் வரையில் பல்கலைக் கழகத்திற்குத் தெரிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இப்பாடசாலையின் ஆரம்பபிரிவு மாணவர் வெள்ளிக்கிழமை தோறும் பத்திரகாளி யம்மன் ஆலயத்திற்கும், உயர்பிரிவு மாணவர் திரௌப தையம்மன் ஆலயத் திற்கும் சென்று சிவபுராண பாரயணம் செய்வதும் மற்றைய காலங்களில் குருபூசை கள் மற்றும் சமய விழாக்களைக் கொண்டாடுவதும், வில்லுப்பாட்டு, நாடகம் முதலானவற்றின் மூலம் சமயக்கலைகளை வளர்ப்பதும், வரவேற்கத்தக்கது. நூறாவது ஆண்டை அண்மித்துக் கொண்டிருக்கம் இப்பாடசாலை இலங்கையின் வடமேல் பிரதேசத் தமிழ்ப் பாடசாலைகளுக்கு வழிகாட்ட வேண்டிய தொன்று என்பதை யும் மறந்து விடக்கூடாது.

### *உடப்பு இந்து ஆலய பரிபாலன சபை*

புத்தளம் நகரிலே ஓர் இந்து மகாசபை போல உடப்பூரிலே இந்து ஆலய பரிபாலன சபை எவ்வித விளம்பர ங்களு மின்றித் தனது பணியினையாற்றி வரு கிறது. உடப்பிலே திரௌபதி அம்மன் வழிபாடு,ஆரம்பிக்கப்பட்ட காலத்திலேயே பரிபாலன சபையும் தொடங்கப்பட்டு விட்டது. இற்றைக்கு முந்நூற்றைம்பது ஆண்டு முற்பட்ட தொன்மையுடையது மேற்படி ஆலயமாகும். ஆலயத்துக்குச் சொந்தமான பன்னிரண்டு ஏக்கர் கொண்ட ஆண்டி மனைத் தோட்ட வருமானம், வருடாந்த சந்தை ஏல விற்பனை, ஆலயக்கிரியைகளுக்கெனப் பொது மக்களிடமிருந்து திரட்டப்படும் பணம் முதலானவற்றைக்கொண்டு சபை தனது பணிகளைத் தொடர்ந்து ஆற்றிவருகிறது. இதன் பணிகளைச் சமயப்பணிகளெனவும் சமூகப் பணிக ளெனவும் பகுத்து நோக்கலாம்.

சமயப் பணியென்ற வகையில் திரௌபதையம்மன், முத்து மாரியம்மன், பத்திரகாளியம்மன் எனும் மூன்று ஆலயங்களை ஆரம்ப காலம் முதல் பரிபாலனம் செய்து வருவது இதன் தலையாய பணியாகும். ஆலய புனருத் தாரண வேலைகள், நித்திய நைமித்தியக் கிரியைகளுக்கான செலவுகளை வழங் குதல், கண்காணித்தல், பூசகரு க்கான (குருக்கள்) வேதனம், தங்குமிட வசதி என்பன இதன் பாற்படும்.

திரௌபதை அம்மன் ஆலய மூலஸ் தான மூர்த்தியாகிய ஸ்ரீ ருக்மணி சத்திய பாமாசமேத பார்த்த சாரதிப் பெருமா னுக்கெனத் தனியாக ஒரு மகோற்சவம் முதன் முதலாக 1994ம் ஆண்டு மார்கழி

மாதம் நடைபெற்றது. திருப்பணிச்சபையின் ஏற்பாட்டிலேயே மேற்படி உற்சவம் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

வழமையாக ஆடி மாதத்தில் பதினெட்டு நாட்கள் நடைபெறும் உற்சவத்தில் இறுதி நான்கு நாட்களுக்குமுரியதான பாண்டவர் வனவாசம், அருச்சுனன் தவநிலை; அக்கினிக்குண்டக்காவல் தீக்குளிப்பு எனும் திருவிழாக்களின் போது அரங்கேற்றப்படும் எமது சமய கலாசாரங்களைப் பிரதிபலிக்கும் நாடகங் களுக்கு வேண்டிய நிதியுதவியினைச் சபையே வழங்கி புத்துயிரூட்டி வருகின்றது. இவற்றை விட அயற் கிராமங்களிலுள்ள ஆலயங்கள், சங்கங்கள் என்பனவற்றுக்கு தன்னாலியன்றளவு உதவிகளைப் புரிவதுடன் உடப்பூரிலே காணப்படுகிற கிறிஸ்தவ தேவாலயத்துக்கும் சபை குறிப்பிட்ட வருமானத்தில் குறிப்பிட்ட தொகைப் பணத்தை ஒதுக்கி உதவி செய்தது அதன் பரந்த பண்பை எமக்கு எடுத்துக் காட்டுகிறதெனலாம்.

ஆரம்ப காலத்தில் திரௌபதை அம்மன் ஆலய மூலஸ்தானத்தில் கருங் கல்லினாலாகிய மேற்படி அம்மன் சிலையே காணப்பட்டது. இடைக் காலத்திலேயே ஸ்ரீ ருக்மணி சத்திய பாமா சமேத பார்த்த சாரதிப் பெருமான் சிலை கர்ப்பக் கிருகத்தில் வைக்கப்பட்ட தென்பர். மூலஸ்தானத்தில் இருந்த அம்மன் சிலை கோயிலின் அர்த்த மண்டபத்தில் வைக்கப்பட்டது. 1994ம் ஆண்டிலிருந்து வருடத்தில் இரண்டு வகையான உற்சவங்கள் நடைபெற்று வருகின்றன. மார்கழித் திருப்பாவையின் போது நடைபெறும் உற்சவம் கொடியேற்றத் துடன் ஆரம்பமாகி 30 நாட்கள் திருவிழா நடைபெறுகிறது. தீர்த்தோற் சவத்துடன் திரு விழா நிறைவுறும்.

இதன் சமுதாயப் பணியினை நோக்கினால் பரந்து பட்டளவில் ஆற்றி வருவது குறிப்பிடத்தக்கது. ஒரு காலத்தில் இச்சபை பஞ்சாயம் போலவும் இயங்கியதென்றும் இதற்குதவியாக முன்னர் சபையில் வயது முதிர்ந்தோரே காணப்பட்டனர் என்றும் கூறப்படுகின்றது.

திரு. பால கிருஷ்ணன் அவர்களைத் தலைமையாசிரியராகக் கொண்ட உடப்பு தமிழ் மகா வித்தியாலத்திற்கு சபை பல வழிகளிலும் உதவி வருவது சிறப்பித்துக் கூறப்பட வேண்டியதொன்றாகும். இப்பாடசாலையில் ஆசிரியர் பற்றாக்குறை ஒரு பெரும் பிரச்சினையாகும். இதனை ஓரளவு நிவிர்த்தி பண்ணும் வகையில் இங்கு தொண்டராசிரியராகக் கடமை புரியும் ஆறு பேருக்கு ஒரு குறிப்பிட்ட தொகைப்பணத்தை வேதனமாக வழங்கி வருகின்றது. அத்துடன் பாடசாலைக்குத் தேவையான தளபாட உதவியினையும் இவற்றுக்கு மேலாகப் பாடசாலைக் கட்டடம் கட்டுவதற்கு ரூபா ஐம்பதாயிரம் பணத்தையும் கொடுத்துப் பலவாறாக உதவி வருகிறது. இப்பாடசாலைக்கு மட்டுமின்றி அயலிலுள்ள ஆண்டி முனை அரசினர் தமிழ் வித்தியாலய கட்டிடத்திற்கும் ரூபா முப்பதினாயிரம் வரை வழங்கியுள்ளது. பாடசாலைக்கான உதவிகள் மட்டுமின்றி இப்பிரதேச வைத்தியசாலைக்கு வேண்டிய உதவிகள் மலசல கூடங்கள் பொதுக் கிணறுகள் பாதையமைப்பு முதலான பாரிய பணிகளை யாற்றிவரும் இச்சபை வருடா வருடம் நிர்வாகம் மாறிப் பொது மக்களைப் பிரதி நிதித்துவப்படுத்திக் கொண்டு இருக்கிறது. இதன் தற்போதைய தலைவர் திரு.எஸ்.ஜே.செம்பலிங்கம் அவர்களாவார். செயலாளர் திரு . வி. கனகரத்தினம் அவர்களாவார். உடப்பிலுள்ள இன்னொரு நிறுவனம் தமிழ்ச் சங்கமாகும்.

***உடப்பு தமிழ்ச்சங்கமும் இந்து இளைஞர் மன்றமும்***

இச்சங்கம் 1953ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இதன் குறிப்பிடக்கூடிய பணியென்னவெனில் 1956ம் ஆண்டு தமிழக அறிஞர் தவத்திரு குன்றக்குடி அடிகளாரை இங்கு வரவ

இந்து இளைஞர் மன்றம் என்பது 1971ம் ஆண்டு இந்து கலாசார த்திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதன் தற்போதய தலைவர் திரு வீர சொக்கன் அவர்களாவார். இம் மன்றத்தின் குறிப்பிடத்தக்க பணி பாலர் பாடசாலை ஒன்றை ஆரம்பித்து அதன் ஆசிரியர்க்குரிய வேதனத்தை வழங்கி நடத்தி வருகின்றமையாகும். இப்பாடசாலை தமிழ்ச்சங்கக் கட்டிடத்திலே தான் நடைபெறுகிறது. இப்பாலர் பாடசாலை உருவாகவும் இங்கே வருடந்தோறும் நவராத்திரி விழா நடைபெறவும் காரணமாக இருந்தவர் உடப்பூர் வீ. நடராசா அவர்களாவர்.

***சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் (Hindu Board of Education) பணிகள்***

சைவ வித்தியா விருத்திச் சங்கம் புத்தளம் மாவட்டத்தில் ஆற்றிய பணிகள் தனியாக எடுத்து ஆராயப்பட வேண்டியவை இங்கு தேவை நோக்கி ஒரு சில விடயங்கள் குறிப்பிடப்படுகின்றன. ஆறுமுகநாவலர் அவர்களின் ஈழநாட்டுப்பணிகளைப் பொறுத்த வரையில் அவர் வடபகுதியில் நின்று மாத்திரம் பணிபுரிந்தாரென்று குறை கூறப்படுவதுண்டு. அவர் பணிகளால் அப்பிரதேசம் மாத்திரம் பயனடையவில்லை. நாவலர் பெருமானது பாடசாலைக் கல்விப்பணியை இலங்கை பூராவும் முன்னெடுத்துச் சென்று சைவத்தையும் தமிழையும் வளர்த்த பெருமை "இந்து போட்" டையே சாரும். தனிப்பட்ட பாடசாலைகளை 1960— 1963 காலப் பகுதியில் அரசு பொறுப்பேற்ற போது இந்து போட் வசமிருந்த நாடு பூராவுக்குமான 273 பாடசாலைகளை அதன் கௌரவ காரியதரிசி சு.இராசரத்தினம் அவர்கள் ஒப்படைத்தமை குறிப் பிடத்தக்கது.

புத்தளம் மாவட்டத்திலே நாயக்கர் சேனை, முந்தல், குசலை, மருதங்குளம் எனுமிடங்களில் உள்ள சைவப் பாடசாலைகள் இந்து போட் நிர்வாகத்தின்கீழிருந்தனவே. இவற்றில் நாயக்கர் சேனை, குசலை, மருதங்குளம் எனுமிடங்களில் உள்ள பாடசாலைகள் பேராசிரியர் அ.சின்னத்தம்பி அவர்களாலும் முந்தல் பாடசாலை டாக்டர் வெங்கடாசலம் அவர்களாலும் ஸ்தாபிக்கப்பட்டு இந்துப் போட்டிடம் ஒப்படைக்கப்பட்டனவாகும்.

இலங்கையிலே தமிழ்ச்சைவர்கள் சிறுபான்மையாக வாழுமிடங்களில் அவர்களின் உதவியுடன் இந்து போட் பாடசாலைகளை நிறுவிக் கொண்டிருந்த 1950ம் ஆண்டுக் காலப்பகுதியில் ஒரு நாள் பேராசிரியர் அ.சின்னத்தம்பி அவர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு சென்றபோது பத்துளு ஓயாப் புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் அவரது கார்வண்டி பழுதுபடவே அவ்விடத்தில் சில மணிநேரம் தரிக்க வேண்டி யேற்பட்டது இந்த நேரத்தில் திரு பிறை சூடி என்பவருடன் கலந்துரையாடியதன் பயனாகவே குசலை, மருதங்குளம், நாயர்க்கர் சேனை முதலான இடங்களில் சைவர்களுக்கான பாடசாலை இல்லாத குறையினைக் கண்டு ஆர்வங்கொண்டு அவ்விடங்களில் குறிப்பிட்ட பாடசாலைகளை திரு. சின்னத்தம்பி அவர்கள் ஸ்தாபித்தார் என்பர். இனித் தனித தனியாக இப்பாடசாலைகளின் வரலாற்றையும் அவற்றின் பணிகளையும் சுருக்கமாக நோக்குவோம்.

***குசலை அரசினர் தமிழ்க்கலவன் வித்தியாலயம்***

திருவாளர்கள் வை. கண்ணையா, க.வடிவேல், வ. இராஜசேகரம், திருமதி நாகம்மா கந்தையா முதலானோரால் நன்கொடையாக வழங்கப்பட்ட அரை ஏக்கர் கொண்ட நிலப்பரப்பில் பேராசிரியர் அ.சின்னத்தம்பி அவர்களாலும், பேராதனை இந்து மாணவர் சங்கத்தினராலும் 1957ம் ஆண்டு மே 10ம் நாள் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை குசலை ஞானசம்பந்தர் வித்தியாலயமாகும். இப்பாட

சாலையினை விரையில் சைவ வித்தியா விருத்திச் சங்கம் பொறுப்பேற்று 1963ம் ஆண்டு அரசாங்கம் பொறுப்பேற்கும் வரை நடாத்தியது. ஆரம்பத்தில் எட்டாம் தரம் வரையிலிருந்தது. 1972ம் ஆண்டு தொடக்கம் 1985 வரை க.பொத சா/த பரீட்சைக்குத் தோற்றி வந்தனர்.

இப்பாடசாலையின் முதல் தலைமையாசிரியர் நெடுந்தீவைச் சேர்ந்த பண்டிதர் சுப்பிரமணியம் பசுபதிப்பிள்ளை அவர்களாவர். இவர் இப்பாடசாலையில் தலைமையாசிரியராக இருந்த பதினைந்து வருட காலப் பகுதியில் சைவத்துக்கும் தமிழுக்கும் ஆற்றிய பணிகள் அளப்பரியன. யாழ்ப்பாணத்திலே மிக நீண்டகாலமாக புராணபடனத்தின் மூலம் சைவ சமயத்தையும் தமிழையும் வளர்த்து வந்தனர். புராணபடன முறையை குசலையில் அறிமுகப்படுத்தி இப்பிரதேசத்தில் சைவ சமய வளர்ச்சியை பண்டிதர் ஏற்படுத்தியிருந்தார். எடுத்துக் காட்டாக இவ்வூர் முத்து மாரியம்மன் கோயிலில் மார்கழித் திருவெம்பாவையின் போது பத்து நாட்களும் இரவிலே திருவாதவூரடிகள் புராணம் படிக்கப்பட பண்டிதர் அவர்கள் விரிவான முறையில் பயன் சொல்லுவாராம். இவற்றை விட இவர் காலத்திலிருந்து இன்று வரை பாடசாலையில் நவராத்திரி, நாயன்மார் குருபூசை என்பன சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

இப்பாடசாலையில் தந்போது நிரந்தர ஆசிரியர் நால்வரும் தொண்டர் ஆசிரியர் நால்வரும் கற்பிக்கின்றனர். எட்டாம் ஆண்டு வரை மட்டுமே பாடங்கள் நடைபெறுகின்றன. 120 பிள்ளைகள் வரை கற்கின்றனர். இப்பாடசாலையின் தலைமை ஆசிரியை திருமதி. இராஜேஸ்வரி நாகரத்தினம் அவர்கள் இதன் பழைய மாணவி என்பது குறிப்பிடத்தக்கது. எனவே பற்றோடு பாடசாலையை அபிவிருத்தி செய்ய வாய்ப்பிருக்கிறது. அதுவே அனைவரதும் எதிர்பார்ப்புமாகும்.

***சிலா/மருதங்குளம் சைவப்பிரகாச அரசினர் தமிழ் வித்தியாலயம்.***

மேற்படி பாடசாலை, மருதங்குளத்தைச் சேர்ந்த இராஜகுரு சேனாதிபதி செல்லையா தினகரம்பிள்ளை அவர்கள் நன்கொடையாகக் கொடுத்த அரை ஏக்கர் நிலப்பரப்பில் 1958ம் ஆண்டு ஒக்ரோபர் 21ம் நாள் டாக்டர் அ.சின்னத்தம்பி அவர்களால் கட்டப்பட்டு சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் நிர்வாகத்தின் கீழ் 1961ம் ஆண்டு அரசாங்கம் பொறுப்பேற்கும் வரை இயங்கி இன்று வரை மேற்படி பெயருடனேயே பாடசாலை இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. 8ம் தரம் வரை 73 மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலையில் தற்போது ஆண்டு 11 வரை மொத்தமாக 65 மாணவர்களே கல்வி கற்கின்றனர். சூழல், கவர்ச்சி முதலானவை காரணமாக இக்கிராமத்தைச் சேர்ந்த சைவத்தமிழ் மாணவர்கள் பிறமத, மொழிப்பாடசாலைகளை நாடிச் செல்வதன் காரணமாக மாணவர் தொகை வீழ்ச்சியடைந்து செல்வது கவலையளிப்பதாகும். இருந்தும் தற்போதைய தலைமையாசிரியை திருமதி சந்திராவதி சுப்பிரமணியம் ஐயாசாமி அவர்கள் சைவ வித்தியா விருத்திச்சங்க நோக்கத்திற்கேற்ப மாணவர்களை ஊக்கப்படுத்தியும் நவராத்திரி மற்றும் நாயன்மார்கள் குருபூசை என்பனவற்றை ஒழுங்காக மேற்கொண்டும் பாடசாலையை இயக்கி வருவது பாராட்டப்படவேண்டிய தொன்று.

***நாயக்கர்சேனை அரசினர் இந்து தமிழ் வித்தியாலயம்***

நாயக்கர் சேனை நாவுக்கரசர் வித்தியாசாலையென்ற பெயரில் 1960ம் ஆண்டு செப்ரெம்பர் 30ந் திகதி பேராசிரியர் அ.சின்னத்தம்பி, வைத்திய கல்லூரி இந்து டாணவர் சங்கத்தலைவர் திரு. கதிரவேற்பிள்ளை, திரு . வீ. கே. சதாசிவம் செட்டியார் முதலானோரால் மேற்படி பாடசாலை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

திரு V.K. சதாசிவம் செட்டியார் அவர்கள் நன்கொடையாக வழங்கிய அரை ஏக்கர் காணியில் பேராசிரியர் அ.சின்னத்தம்பி பாடசாலையை நிறுவி சைவ வித்தியா விருத்திச் சங்கத்திடம் ஒப்படைத்தார். 1963ம் ஆண்டு இப்பாடசாலையை அரசு பொறுப்பேற்கும் வரை இந்து போட் இப்பாடசாலையை கண்ணும் கருத்துமாகக் கவனித்து வந்தது. ஆரம்பத்தில் 8ம் வகுப்பு வரை இருந்தது.

குசலை ஞானசம்பந்தர் வித்தியாலய அதிபர் பண்டிதர் சு.பசுபதிப்பிள்ளை அவர்களே ஆரம்ப நாளான விஜய தசமியன்று 10 சிறார்களுக்கு ஏடு தொடக்கி ஆரம்பித்து வைத்தார். பண்டிதர் பசுபதிப்பிள்ளை அவர்கள் அக்காலத்திலே இப்பிரதேசத்திலே தம்மாலியன்றளவு பணிகளைப் புரிந்துள்ளார். இதனால் இப்பிரதேசத்து மக்கள் சைவசமயம் பற்றிய அடிப்படை அறிவினைப் பெற்றிருந்தார்கள். பண்டிதர் சு.பசுபதிப்பிள்ளை ஆசிரியர் அவர்களை "எமது பெரியவாத்தியார்" என்று அவர்கள் இன்றும் அழைப்பதிலிருந்து அவர் மீது பெரிய மதிப்பும் மரியாதையும் அவர்கள் கொண்டிருப்பதைக் காணக் கூடியதாக வுள்ளது.

இப்பாடசாலையின் முதல் தலைமையாசிரியர் திரு வி. நடராசா அவர்களாவர். இன்று இப்பாடசாலையில் ஆண்டு 5 வரை தான் கல்வி போதிக்கப்படுகிறது 102 மாணவர் கற்கின்றனர். தற்போதைய அதிபர் திரு க. பசுபதி ப்பிள்ளை அவர்கள் வருடந்தோறும் நவராத்திரி விழா, நாயன்மார் குருபூசை, வாரமொரு தடவை மாணவரை அருகில் உள்ள ஆலயத்திற்கு அழைத்துச் சென்று கூட்டுப்பிரார்த்தனை நடத்துதல் முதலான சமயப் பணிகளைப் புரிந்து மாணவரை நன்முறையில் நெறிப்படுத்தி வருகிறார். இவ்வூரிலுள்ள பல சைவப்பிள்ளைகள் இப்பாடசாலையினை விட்டு நகரப்பாடசாலைகளில் கற்பதைப் பெருமையாகக் கருதி அங்கு செல்வது இப்பாடசாலையின் பின்னடைவுக்கு முக்கியமான காரணமாகக் கூறப்படு கின்றது. இந்து போட் நோக்கம் நிறைவேறத் தம்மாலான பங்களிப்பை வழங்க வேண்டியது இங்கு வாழும் சைவத்தமிழ்ப் பெருங்குடி மக்களின் கடமையாகும்.

### *முந்தல் தமிழ் வித்தியாலயம்*

முந்தலில் ஒரு சைவப் பாடசாலை ஆரம்பிக்கப்பட முன்பு இங்குள்ள சைவப்பிள்ளைகள் கத்தோலிக்க தமிழ்ப்பாடசாலையிலே கல்வி பயின்றனர். இதனை விடுத்து தமக்கெனத் தனியான பாடசாலையமைத்துத் தமது சமய சூழலில் தமது பிள்ளைகள் கல்வியைப் பெற வேண்டும் என்ற நீண்டகால முயற்சியின் விளைவாகத் தோன்றியதே முந்தல் கமலாம்பிகை வித்தியாலயமாகும். இதற்கென முழுமூச்சாக உழைத்தவர் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த வைத்திய கலாநிதி திரு வெங்கடாசலம் அவர்களாவார். இவரது மனைவியார் பெயரில் 1953ம் ஆண்டு இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு, அக்காலத்தில் சைவப்பாடசாலைகளை ஒழுங்காக நிர்வகித்துக் கொண்டிருந்த இந்து போட்டிடம் பாடசாலை ஒப்படைக்கப்பட்டது. 1961ம் ஆண்டு அரசாங்கம் பொறுப்பேற்கும் வரை சிறப்பாக பாடசாலையை நடாத்தியது. இக்காலங்களில் மாதமிரு தடவையாவது இந்துபோட் சு. இராசரத்தினம் அவர்கள் இப்பாடசாலைக்கு வருகை தந்து நேரடியாகவே குறைகளைக் கேட்டறிந்து ஆவன செய்வாராம். இதனால் பாடசாலையின் தரம் உயர்ந்தது. இந்து போட்டின் நிர்வாகத்தின் கீழிருந்த பாடசாலைக் காலத்தை சைவமும் தமிழும் தழைத்தோங்கிய காலம் என்று இவ்வூரவர் வர்ணிக்கின்றனர்.

இங்குள்ளகத்தோலிக்க பாடசாலை யிலிருந்து சைவ மாணவர் அனைவரும் இப்பாடசாலையிற் சேர்ந்து கொள்ள கத்தோலிக்க பாடசாலை மாணவர்

தொகை குறைந்து பாடசாலை வீழ்ச்சியடைந்து செல்லவே அதனை மூட வெண்டிய நிலையேற்பட்டது. இதனால் கத்தோலிக்க பாடசாலையிற் கற்ற ஒரு பகுதியர் முந்தல் தமிழ் வித்தியாலயத்திற் சேர்ந்து கொண்டனர். ஏனையோர் தமக்கு விருப்பமான பாடசாலைகளை நாடிச் சென்றனர் என்பர்.

ஆரம்பத்தில் 5ம் தரம் வரை காணப்பட்டு சில வருடங்களில் 10ம் தரம் வரை கல்வி போதிக்கப்பட்டு இன்று வரை கல்வி பயிலுகின்றனர். கட்டைக்காடு உடப்பு புளிச்சாங்குளம், மதுரங்குளி முதலான இடங்களிலிருந்தும் மாண வர்கள் கல்வி கற்ற காலமுமிருந்தது. அந்த அளவுக்கு பயன்மிக்க ஒரு பாடசாலையாக இது விளங்கி வந்தது.

### *கிராம முன்னேற்றச் சங்கங்களின் பணிகள்*

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் பணிகள் ஒருபுறமிருக்க கிராமங்கள் தோறும் தோன்றிய கிராம முன்னேற்றச் சங்கங்களும் பாட சாலைகளை நிறுவி சைவத்தையும் தமிழையும் வளர்த்துள்ளன. கருங்காலிச சோலை, ஆண்டிமுனை போன்ற இடங்களில் உள்ள பாடசாலைகள் இவ்வாறு தோன்றியனவே.

### *கருங்காலிச்சோலை தமிழ் வித்தியாலயம்.*

1960ம் ஆண்டு கருங்காலிச் சோலையைச் சேர்ந்த பெரியார் திரு . ஏ.தம்பிராசா அவர்கள் நன்கொடையாக வழங்கிய மூன்று ஏக்கர் கொண்ட காணியில் மேற்படி பாடசாலை கிராம முன்னேற்றச் சங்கத்தால் நிறுவப்பட்டு 1961ம் ஆண்டு அரசாங்கம் பொறுப்பேற்கும் வரை நடாத்தியது.

தற்போது 160 மாணவர்கள் இங்கு கல்வி பயிலுகின்றனர். ஆரம்பத்தில் 5ம் தரம் வரையிலிருந்து தற்போது ஆண்டு 11 வரை கல்வி புகட்டப்படுகின்றது. இங்கு தலைமையாசிரியராக இருக்கும் திரு. எம். நாராயணசாமி அவர்கள் சமய ஆர்வம் மிக்கவர். இவரது வழிகாட்டலில் பாடசாலை மாணவர்களைக் கொண்ட பஜனைக்குழு இயங்கி வருகிறது. இதுவே மதுரங்குளி முருகன் ஆலயத்திருவிழாக் காலங்களில் பஜனை செய்வதுடன் மார்கழித் திருவெம்பாவைக் காலத்தின் போது அதிகாலையில் முக்கிய வீதிகள் வழியாகத் திருவெம்பாவைப் பாடல்களைப் பாடிச்சென்று வீடுகள் தோறும் பஜனை மேற்கொண்டு சைவசமய எழுச்சிக்குக் காரணமாக விளங்கி வருகிறது.

மேலும் இப்பாடசாலை மாணவர் கொழும்பு விவேகானந்த சபை, இந்து கலாச்சாரத்திணைக்களம், புத்தளம் இந்து மகாசபை முதலானவை நடத்தும் போட்டிகளிற் தவறாது பங்கு பற்றிப் பரிசில்கள் பெற்றுத்தமது சமய ஆர்வ மீதியைக் காட்டி வருவது குறிப்பிட த்தக்கது.

### *ஆண்டி முனை அரசினர் தமிழ் வித்தியாலயம்.*

ஆண்டி முனை தமிழ் மக்களின் குடியேற்றம் கி.பி. 17ம் நூற்றாண்டளவில் தான் ஏற்பட்டது. இங்குள்ளவர்களுக்கு அருள் பாலிக்கும் தெய்வமாக விளங்கியது.

ஆண்டியம்மன் என்று அழைக்க ப்பட்ட முத்து மாரியம்மனாகும். ஒரு புறம் இவ்வாலயம் கடவுள் பக்தியை வளர்த்து வர இன்னொரு புறம் சைவ சமய அடி ப்படையிலான கல்வி வசதியை இப்பகுதி மாணவர் பெற்றுக் கொள்ள இங்குள்ள கிராம முன்னேற்றச் சங்கங்கத்தினால் 1960ம் ஆண்டு ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்பட்டதே ஆண்டி முனை அரசினர் தமிழ் வித்தியாலயமாகும். இப் பாடசாலை கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களான சா.ஜே. வே. செல்வ நாயகம் . திருச்செல்வம் எஸ்.டி.ஆர். ஜெயரத்தின முதலானோரது உதவியால் இப்பாடசாலை அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்டு 1960 நவம்பரில் அரசு

பொறுப்பேற்றுக் கொண்டது. இப் பாடசாலை துரிதமாகக் கட்டப்பட வேண்டுமென்பதில் அக்கறை காட்டியவர் புத்தளம் கச்சேரியைச் சேர்ந்த காணி அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. சீவரத்தினம் அவர்களாவர்.

ஆரம்பத்தில் ஏழாந்தரம் வரை யிலிருந்து 1987ம் ஆண்டிலிருந்து ஆண்டு 11 வரை போதிக்கப்படுகின்றது. ஆர ம்பத்தில் திரு .சண்முகநாதன் (தற் போதைய தலைமைஆசிரியர்) நாகநாதன் வைரையா (முதல் ஆசிரியர்) திருமதி. திலகாம்பாள் முதலானோர் இலவசமாகப் போதித்தமைக்கு இவ்வூரவர் என்றும் நன்றிக் கடப்பாடுடையவர்கள். இப்பாட சாலை மீது அதிபர், ஆசிரியர்கள், மாண வர்கள், பழைய மாணவர்கள், பெற் றோர்கள் காட்டி வரும் ஈடுபாடும் பரீட்சைப் பெறுபேறுகளும் மெச்சப்பட வேண்டியவை. இப்பாடசாலை மிக விரைவில் மகா வித்தியாலயமாகி, தனது கிராமத்து மக்களுக்கு மேலும் பல சமய சமூக சேவைகளைப் புரிந்து அயற்பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளுக்கு ஒரு முன்னு தாரணமாகத் திகழ வேண்டும்.

### *சிலாபம்/முன்னேஸ்வரம் வடிவாம்பிகா தமிழ் வித்தியலயம்*

புத்தளம் மாவட்டத்திலே உடப்பு தமிழ் வித்தியாலயத்தை யடுத்து பழைமை வாய்ந்த பாடசாலையாக விளங்குவது வடிவாம்பிகா தமிழ் வித்தியாலயமாகும். ஈழத்துத் தொன்மை வாய்ந்த சிவ த்தலங்களுள் ஒன்றான முன்னேஸ்வர ஆலயத்திற்கு அருகாமையில் அவ்வாலய இறைவியின் பெயரையும் தாங்கி தெய்வ மணங்கமழப் பெறும் இப்பாடசாலை 1945ம் ஆண்டிலிருந்து சைவத்தையும் தமிழ் மொழியையும் தனது கண்களாகக் கொண்டு பணியாற்றி வருகிறது.

ஆரம்பத்தில் 24 மாணவர்களுடனும் இரண்டு ஆசிரியர்களுடனும் ஆறாந்தரம் வரையிருந்த இப்பாடசாலையில் இன்று 200 மாணவர்களும் பன்னிரண்டு ஆசிரிய ர்களும் காணப்படுகின்றமை குறிப்பிடத் தக்கது. க.பொ.த சாதாரண தரம் வரை பாடங்கள் போதிக்க ப்படுகின்றன.

உடப்பூரைச் சேர்ந்த திரு பூ. பூவுடப்பன் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திரு. கந்தையா முதலானோர். முன்னர் இப்பாடசாலையில் தலைமையாசிரி யர்களாக இருந்து அரிய பல பணிகளையாற்றியுள்ளனர். திரு கந்தையா அவர்களின் காலத்திலே அவர் பாடசாலை மாணவரைக் கண்டிப்புடன் ஆலயத்துக்கு அழைத்துச் சென்று மாணவர் பின்னர் தம்பாட்டில் கோயிலுக்குச் சென்று ஒழுங்காக நடந்து வரும் பழக்கத்தையும் வழக்கத்தையும் ஏற்படுத்தினார் என்று அவர் மாணவர் கூறியிருக்கிறார். நாயன்மார் குருபூசைகள் இப்பாட சாலையில் ஒழுங்காகக் கொண்டா டப்பட்டு வருகின்றன. அத்தோடு கொழும்பு விவேகானந்த சபை நடத்தும் சமய பாடப்பரீட்சைகள் இந்து கலாச்சாரத் திணைக்களம், புத்தளம் இந்து மகாசபை முதலானவை நடத்தும் போட்டிகள் என்பவற்றிலே இப்பாடசாலை மாணவர்கள் பங்கு பற்றிச் சிறந்த பரிசில்களையும் பெற்று வருகிறார்கள். இப்பாடசாலை ஏ.ஆர். எஸ் அழகேசன் பாடசாலை வளர்ச்சிக்காக அயராதுழைத்து வருகிறார். அவரை இப்பாடசாலை அதிபராகப் பெற்றது பெரும் பேறு என்று தான் கூறவேண்டும். இவ்வாண்டு பாடசாலைப் பொன் விழாவைக் கொண்டாடுதல், பாடசாலை வளவுக்குள் பிள்ளையார் கோயில் அமைத்தல் எனும் இரு பிரதான பணிகளில் ஈடுபட்டுள்ளார். ஆசிரியர்கள், மாண வர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர் வழங்கும் ஒத்துழைப்பு அவர் பணிகளுக்கு உத்வேகத்தைக் கொடுக்கின்றது.

### *புத்தளம் இந்து மகாசபையும் இந்து தமிழ் மகா வித்தியாலயமும்*

புத்தளம் நகரிலுள்ள இரு பெரும் நிறுவனங்களான இந்து மகாசபையும் இந்து தமிழ் மகா வித்தியாலயமும் ஆற்றி

வரும் பணிகள் தனியாக ஆராய ப்படவேண்டியன. அதற்கான தகவல்கள் நிறைய இருக்கின்றன. இக்கட்டுரையிலே அவை பற்றி விரிவாகக் கூற முடி யாதிருக்கின்றமையால் முக்கியமான விட யங்கள் மாத்திரம் குறிப்பிடப்படுகின்றன.

புத்தளம் நகருக்கு வெளியே ஆலயங்களும் சைவப் பாடசாலைகளும், சபைகளும், சங்கங்களும் சைவத்தின் அபிவிருத்திக்காகப்பாடு பட்டுக்கொண்டி ருந்த வேளை நகர்ப் பிரதேசத்திலுள்ள தமிழ் சைவர்கள் இங்குள்ள பழம்பெரும் ஆலயங்களான சேனைக்குடியிருப்பு பத்தினியம்மன், சித்தி விநாயகர், புத்தளம் – மன்னார் வீதியிலுள்ள முத்துமாரியம்மன் முதலான கோயில்களுக்குச் சென்று வணங்கியும் பிறமதப்பாடசாலைகளில் திருப்தியற்ற முறையில் சமயக்கல்வியைப் பெற்றும் வந்தனர். இந்நிலையில் இங்குள்ள பெரியார் சிலரின் முயற்சியாலும் அகில இலங்கை இந்துமாமன்றத்தின் தூண்டு தலாலும் 1961ம் ஆண்டு தொடங்கப் பட்டதே புத்தளம் இந்து மகா சபையாகும். இது ஆரம்பத்தில் சைவமுன்னேற்ற ச்சங்கம் என்ற பெயரிலுமிருந்து சில காலத்தின் பின்னர் இந்து மகா சபையென்ற பெயரைப் பெற்றது.

ஆரம்பத்தில் முத்துமாரியம்மன் ஆலய முன்றிலில் கூடிய சபை பின்னர் பருத்தித்துறையைச் சேர்ந்த சட்டத்தரணி சங்கரப்பிள்ளை அவர்களது போல்ஸ் வீதியிலுள்ள இல்லத்தில் சில காலம் இயங்கிப் பின்னர் புத்தளம் அ, புர வீதியில் சொந்தமான, நிரந்தரமாக அமைக்கப்பட்ட மண்டபத்தில் இயங்கி வருகிறது. இம்மண்டபத்துடன் கட்டப்பட்டிருக்கும் தங்குமிடத்திலிருந்து பெறப்படும் வாடகை மற்றும் நகரப்பகுதி வர்த்தகர் மற்றும் பொதுமக்களிடமிருந்தும் பெறப்படும் நன்கொடை என்பனவற்றைக் கொண்டு சமய சமூகப்பணிகளை ஆற்றி வருகிறது.

1971-1972 காலத்தில் இச்சபையின் தலைவராக இருந்த கி. பாலகிருஷ்ணர் (புத்தளம் மாவட்ட நீதிபதி) காலத்திலேதான் சபையின் சட்டவிதிகளும் ஒழுங்கு முறைகளும் உருவாக்கப்பட்டன. ஒவ்வொரு மாதமும் ஏதாவது ஒரு சமய நிகழ்ச்சியாவது சபையில் நடைபெற வேண்டும் என்பது அவரது ஆலோச னையேயாகும். அதன் பின்னர் வாரந்தோறும் என்று குறிப்பிடப்பட்டு வெள்ளிக்கிழமை தோறும் மாரியம்மன் ஆலயத்தில் கூட்டுப் பிரார்த்தனை நடைபெற்று அது அருகிப் போகவே இன்று வரை ஒழுங்கான முறையில் சபையில் வியாழக்கிழமை தோறும் விநாயகர் பூசையும் கூட்டுப்பிரார்த்தனையும் நடைபெற்று வருகிறது.

ஒவ்வொரு வருடமும் சமயகுரவர் நால்வருக்கும் குருபூசை நடைபெற்று வருகிறது. இவற்றில் மணிவாசகர் குருபூசை பெருவிழாவாகவே நடைபெற்று வருகிறது. இதனைப் போலவே விஜயதசமி விழாவும் கொண்டாடப்படுகின்றது. மேற்படி இரு விழாக்களையும் முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே பேச்சு, கட்டுரை, பண்ணிசை முதலான போட்டிகளை வைத்து சான்றிதழ்கள், மற்றும் பெறுமதிமிக்க பரிசுப்பொருட்க ளையும் மாணவர்களுக்கு வழங்கி புத்தளம் பிரதேசப்பாடசாலைகளில் கல்வி கற்கும் சைவ மாணவர்களிடையே எந்த விதமான வேறுபாடுகளையும் காட்டாது பணியாற்றி வருகிறது.

மேலும் இச்சபையில் நீண்ட காலமாக ஞாயிற்றுகிழமை தோறும் காலை 9.00 மணி தொடக்கம் 11.00 மணி வரை அறநெறிப்பாடசாலையின் பெயரில் சமய வகுப்புகள் நடைபெற்று வந்துள்ளன. இந்த அறநெறிப்பாடசாலையில் கடமை யாற்றியதன் பயனாக செல்விகள் பவானி, கலைச்செல்வி , செல்வன் எஸ். ஸ்ரீகுகன் ஆகியோர் அரசாங்க ஆசிரிய நியமனம் பெற்றுக்கொண்டமை குறிப்பிட த்தக்க தாகும். தற்போது சபையில் ஞாயிற்று கிழமை தோறும் அற நெறிப்பாடசாலை

மாணவர் களுக்கென மிருதங்க வகுப்பும் பண்ணிசை, நடன வகுப்புகளும் நடந்து வருகின்றன. சபையின் பணிகளில் குறிப்பிடத்தக்கதொன்று வருடந்தோறும் வரும் விஜயதசமி விழாவின் போது மாணவர்களுக்கான ஏடு தொடக்கல் வைபவமாகும்.

சபை தொடங்கப்பட்ட காலத்தி லிருந்து இற்றை வரை சபையின் அழை ப்பின் பேரில் இலங்கை இந்தியப் பெரியார்கள் வருகை தந்து அரு ளுரைகளை வழங்கினர். இதனால் இப் பிரதேசத்திலே சைவம் மேலும் தழைத் தோங்க அரியபணியினைச் சபை ஆற்றி யுள்ளதென்றே கூறலாம். நல்லை ஞான சம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீல ஸ்ரீ சுவாமி நாக தம்பிரான், பித்துக்குளி முருகதாஸ், சிவத்தமிழ்ச்செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி, அகில இலங்கை இந்து மா மன்றத்தைச் சேர்ந்த திரு. ஐ. தி. சம்பந்தன், கவிஞர் நயினை நாக சண்முகநாதபிள்ளை, ஆத்மஜோதி நா. முத்தையா, இந்து சமய கலாசார அமைச்சர் திரு செ. இராசதுரை, இந்து கலாசார திணைக்களத்தைச் சேர்ந்த திரு. விக்கிரமராஜா,திருமதி சாந்தி நாவுக்கரசன், எஸ். தெய்வநாயகம் சோமகாந்தன் மற்றும் புலவர் ஈழத்துச் சிவானந்தன், என்போர் இந்த வகையில் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

சபையின் ஆலயம் சம்பந்தப்பட்ட பணியென்று கூறும் போது முத்து மாரியம்மன் ஆலயத்தில் சிவராத்திரி காலத்தில் இரண்டாம் காலப்பூசை புரிவதும், திருவெம்பாவை இறுதி நாள் பூசையைச் செய்விப்பதனையும் குறிப் பிடலாம். அத்தோடு 1993ம் ஆண்டு சேகுவன் தீவு முருகன் ஆலயக்கட்டிட வேலைக்கென ரூபா மூவாயிரம் வழங்கிய மையும் குறிப்பிடத்தக்கது.

சமூகப்பணியென்ற வகையில் கைதடி சைவ அநாதைகள் இல்லம், மட்டக்களப்பு இராமகிருஷ்ணமிசன் நடாத்தும் அநாதைகள் ஆச்சிரமத் துக்கென 1994ல் வழங்கப்பட்ட உதவிகள் என்பவற்றைக் குறிப்பிடலாம். இவற்றை விட அறிஞர்களைக் கௌரவித்தல், நூல் அறிமுகம் முதலான வைபவங்களும் சபையில் நடைபெற்றன.

சபையின் 1995ம் ஆண்டுக்கான முக்கிய பணியென்று குறிப்பிடத்தக்கது. இந்து கலாசாரத்திணைக்களத்தின் முழுஒத்துழைப்புடன் புத்தளம் மாவட்ட பாடசாலைகளில் சைவ சமயம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கை நடத்தியமையாகும். இதற்கென இந்து மகா சபையின் தலைவர் திரு. தா. முருகேசம்பிள்ளை, செயலாளர் செல்வன் க. அமிர்தநாதன், இந்து தமிழ் மகா வித்தியாலய அதிபர் திரு வீ. நடராஜா என்போர் மேற்கொண்ட முயற்சிகளும் இந்து கலாசார திணைக்களத்தின் உதவிப்பணிப்பாளர் திரு விக்கிரமராஜா அவர்களின் ஆதரவும் புத்தளம் பிரதேசக் கல்வி அலுவலகத்தின் அனுமதியும் பெரும்பயனை அளித்தன என்றே கூறவேண்டும். இக்கருத்தரங்கிலே ஸ்ரீ இராமகிருஷ்ணமிசன் சங்கத்தின் கொழும்புக்கிளைத் தலைவர் சுவாமி ஆத்மகனாநந்த அவர்கள் கலந்து கொண்டு சபையின் பணிகளைப் பாராட்டி ப்பேசியமை குறிப்பிடத்தக்கதாகும்.

***புத்தளம்***
***இந்து தமிழ் மகா வித்தியாலயம்***

புத்தளம் இந்த மகா சபையின் பாரியபணியென்று குறிப்பிடத்தக்கது புத்தளம் நகரத்திலே ஓர் இந்துப் பாடசாலை யினை உருவாக்கிக் கொடுத்த மையாகும். இந்து மகா சபையைச் சேர்ந்த திருவா ளர்கள் மு.நடராஜதேவர், இ. ஐ, இரத்தின சிங்கம் முதலானோரின் பெருமுயற்சியால் 1979ம் ஆண்டு ஜனவரி மாதம் 21ம் நாள் அப்போதைய கௌரவ புத்தளம் தொகுதி பாராளுமன்ற உறுப்பினரும் நிதி திட்டமிடல் உதவி அமைச்சருமாகிய அலஹாஜ் எம். எச். எம். நெய்னாமரை க்கார், புத்தளம் மாவட்ட அமைச்சரும்

நிக்கவரெட்டிய பாராளுமன்ற உறுப்பின ருமாகிய கௌரவ எச். பீ. வன்னிநாயக்க ஆகியோரால் ஆரம்பித்து வைக்கப்பட்டதே இந்து தமிழ் வித்தியா லயமாகும்.

திருவல்லிபுரம் கைலேஸ்வரன் அவர்களே இப்பாடசாலையின் முதல் தலைமையாசிரியராவார். தரம் எட்டுவரை நடத்துவதற்கு கல்வியமைச்சு அங்கீகரித்த பொழுதிலும் தரம் ஏழு மட்டுமே அவ்வருடம் மாணவர் சேர்ந்து கொண்டனர் 1982ம் ஆண்டு மாணவர் க.பொ.த சா/த பரீட்சையெடுத்தனர்.

இப்போது அதிபராக விளங்கும் திரு வீ. நடராஜா அவர்கள் 1988ம் ஆண்டு இப்பாடசாலைக்கு வருகை தந்த காலந்தொட்டு பாடசாலை பலவழிகளிலும் அபிவிருத்தி கண்டு வந்துள்ளது. இவரது தனி முயற்சியால் 1990ம் ஆண்டு இந்து தமிழ் வித்தியாலயம் இந்து மகா வித்தியாலயம் எனத்தரமுயர்த்தப்பட்டு இங்கு இந்து நாகரிக பாடத்தை அடிப்ப டையாகக் கொண்டு கற்பதான க.பொ.த உ/த கலைத்துறை வகுப்பும் ஆரம்பிக கப்பட்டது. உயர்வகுப்பு ஆரம்பித்த முதல் தடவையே (1992 ஆகஸ்டு) பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் செல்வி இ.ஜெயந்தி, செல்வன் ந.பத்மானந்தன் ஆகிய இரு மாணவர்களும் சிறந்த பெறுபேறுகளைப்பெற்று முறையே கிழக்குப்பல்கலைக்கழகம், பேராதனை ப்பல்கலைக்கழகம் இரண்டுக்கும் தெரிவு செய்யப்பட்டு அங்கே கற்று வருவது பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட நோக்கத் திற்கு நிறைவு தரும் எடுத்துக் காட்டெனலாம்.

இப்பாடசாலை மாணவர்களின் ஒழுக்கத்திற்கும் கட்டுப்பாடுகளுக்கும் அடிப்படைக் காரணமாக அமைவது இப்பாடசாலை வளவுக்குள் அமைந்தி ருக்கும் பாலமுருகன் ஆலயத்திற்குத் தினமும் சென்று அங்கு நடைபெறும் பூசை வழிபாடுகளில் கலந்து கொண்டு பாடங்களைக் கற்கத் தொடங்குதலாகும். இவ்வாறே மற்றைய மாணவர்களுக்கும் ஏற்ற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. இங்குள்ள சைவாலயம் இந்தப்பாட சாலையின் இதயம் போன்றது. இவ்வாலயத்தில் தைப்பொங்கல், தைப்பூசம், மகா சிவராத்திரி சித்திரை வருடப்பிறப்பு, நவராத்திரி, மார்கழித்திருவெம்பாவை போன்றவற்றை இங்குள்ள மாணவர்கள், அதிபர் சைவாசிரியர்களின் வழிகாட்டலில் சிறப்பாகச் செய்து தமது வாழ்வைச் சமயத்துடன் இணைத்துக் கொள் கின்றனர்.

மேலும் கொழும்பு விவேகானந்த சபை நடாத்தும் சமய பாடப்பரீட்சைகள், ஆறுமுக நாவலர் நாவன்மைப் போட்டி, இந்து கலாசாரத்திணைக்களம் , புத்தளம் இந்து மகாசபை என்பன நடத்தும் போட்டிகளிலே இப்பாடசாலை மாண வர்கள் கலந்து கொண்டு சான்றித ழ்களையும் பரிசுகளையும் பெற்றுவருவது குறிப்பிடத்தக்கது. இந்து கலாசார த்திணைக்களத்தின் அகில இலங்கை மட்டத்திலான போட்டியில் செல்வி க. கஜிதா (திருக்குறள் மனனம் மத்திய பிரிவு) செல்வன் செ. பிரசன்னா (ஓவியம் மேற்பிரிவு) எனுமிருவரும் முதலிட த்தைப்பெற்றுக் கொண்டமை இதற்கு ஓர் எடுத்துக்காட்டெனலாம்.

பொதுவாக இன்று வரை இப்பாடசாலை மாணவரின் சமய அறிவு, பல்வேறு வகையான பரீட்சைப் பெறு பேறுகள், ஒழுக்கம் முதலான அம்சங்க ளைப் பொறுத்தவரை முன்னேற்ற கரமானதாகவே காணப்படுகின்றன. இத்தகைய தரத்தினைப் பேணுவதிலும் மேலும் வளர்த்தெடுப்பதிலுமே பாடசாலை யின் எதிர்காலமிருக்கிறது.

### *புத்தளம் இந்து வாலிபர் சங்கம்*

புத்தளம் நகரிலே சைவசமய விருத்திக்குத் தொண்டாற்றவென 1982ம் ஆண்டு திரு வீ.சண்முகவேல் அவர்களைத் தலைவராகவும் திரு ந.அன்பழகன் அவர்களைச் செயலாளராகவுங்கொண்டு

ஆரம்பிக்கப்பட்ட இன்னொரு நிறுவனமே புத்தளம் இந்து வாலிபர் சங்கமாகும்.

புத்தளத்தில் பின்தங்கிய பிரதேச த்தில் வாழும் சைவப்பிள்ளைகளுக்கு உதவுதல், அவர்களுக்கான சமய அறிவையூட்டுதல், மாரியம்மன் ஆலய திருவிழாக்காலங்களிலே அவ்விழாச் சிறப்பாக நடைபெற உதவுதல் முதலான குறிக்கோள்களைக் கொண்டு இயங்கி வருகிறது.

1994ம் ஆண்டு இச்சங்கம் அற நெறிப்பாடசாலையொன்றை நிறுவி சேவையடிப்படையில் இப்பகுதியில் உள்ள ஆசிரியர்களைக் கொண்டு சமய வகுப்புகளை நடத்தி வருவதுடன் சமயப்போட்டிகள் நடாத்தி மாண வர்களுக்குப் பரிசில்களை வழங்கி வருகிறது. அத்தோடு இம்மாணவர்களை அழைத்துக்கொண்டு தலயாத்திரை மேற்கொண்டு வருகின்றனர். சேனைக்குடியிருப்பு, கரம்பை, நாயக்கர் சேனை முதலான இடங்களில் அறநெறிப்பாடசாலைகள் தொடங்கப்பட்ட போது அங்கு சென்று அம்மாண வர்களுக்கு அப்பியாசக்கொப்பிகள், சமய பாடப்புத்தகங்கள் முதலானவற்றை அன்ப ளிப்பாகக் கொடுத்து ஊக்கங் கொடுத்து வருகின்றனர்.

புத்தளம் மாரியம்மன் ஆலயத்தில் வருடந்தோறும் நடைபெறும் சிவராத்திரி விழாவன்று சமயப்பெரியர்களை அழைத்து சமய சொற்பொழிவினை ஆற்றச் செய்து வருகிறது. இவ்வாறே நவராத்திரி காலத்திலும் தேர்த்திருவிழாவன்றும் வேண்டிய உதவிகளைப் புரிந்து வருகிறது.

### *கரம்பை இந்து இளைஞர் மன்றம்*

திருவாளர்கள் எஸ்.நாகராஜன், வி.சிவலிங்கம் ஆகியோர் தலைமையில் 1987ம் ஆண்டு பெப்பிரவரி மாதம் 26ந் திகதி ஆரம்பிக்கப்பட்ட நிறுவனம் கரம்பை இந்து இளைஞர் மன்றமாகும். இங்குள்ள பிள்ளையார் கோயிலில் நித்திய பூசைகள் நடைபெறச் செய்தல், வெள்ளிக்கிழமை தோறும் ஆலயத்தில் கூட்டுப்பிரார்த்தனை செய்தல் முதலானவை இதன் நோக்கங்களும் செயற்பாடுகளுமாகும். இம்மன்றத்தின் தற்போதைய தலைவராக திருவாளர் வீ. இராசலிங்கம் அவர்களும் செயலாளராக திரு எஸ்.ஜெயசீலன் அவா களும் பொருளாளராக திரு கே.நாகேஸ் வரன் அவர்களும் விளங்கு கின்றனர். போசகர் திரு. எஸ்.. இரங்கநாதன் அவர்களாவார்.

### *நாயக்கர் சேனை நாவுக்கரசர் இந்து இளைஞர் மன்றம்*

நாயக்கர் சேனையில் சைவசமய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்து முகமாக இவ்வாண்டு ஆரம்பிக்கப்பட்டதே நாயக்கர் சேனை நாவுக்கரசர் இந்து இளைஞர் மன்றமாகும்.இதற்கென இம்மன் றத்தினரால் வெள்ளிக்கிழமை தோறும் பஜனை நடத்தப்பட்டு வருகிறது. அத்துடன் நாயக்கர் சேனையில் ஒரு அற நெறிப்பாடசாலையினையும் ஆரம்பித்து நடாத்தி வருகின்றனர். மன்றத்தின் தலைவர் திரு எஸ்.பத்மசெல்வம், செயலாளர் செல்வன் பி.ஆர்.தம்பித்துரை, பொருளாளர் செல்வன் பி . பிரகலாதன்

### *கல்பிட்டி வேல்முருகன் ஆலய சபை*

கற்பிட்டியில் ஒரு முருகன் ஆலயத்தை அமைத்து அதன் மூலம் இப்பகுதியில் வாழும் சைவமக்களுக்கு முன்னேற்றத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்தின் அடிப்படையில் 1978ம் ஆண்டு உரு வாக்கப்பட்டதே கல்பிட்டி வேல்முருகன் ஆலய சபையாகும். இச்சபையின் ஆரம்ப காலத்தலைவராக கடற்படைப் பொறுப்பதிகாரி திரு இ.இராசையா அவர்களும் செயலாளராக திரு கே. கனகசபை அவர்களும் இருந்து பணியாற்றினர்.

விரைவில் திரு இராசையா அவர்கள் மாற்றம் பெற்றுச் சென்று விடவே சபையின் தலைவராக திரு பு. கனகசபை

அவர்களும் செயலாளராக வீ. கயிலேஸ்வரன் அவர்களும் தெரிவு செய்யப்பட்டு ஆலயத்தைக்கட்டி முடிப்பித்து 1980ம் ஆண்டு கும்பாபிடேகமும் செய்வித்தனர். அதன் பிற்பாடு ஆலயத்தில் சபையின் ஏற்பாட்டின் படி சிவராத்திரி, வருடாந்த அலங்கார உற்சவம், கந்தசஷ்டி, திருவெம்பாவை என்பனவும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் அபிடேகத்துடன் கூடிய விசேட பூசையும் நடைபெறும். அறநெறிப்பாடசாலையொன்றும் தற்போது இங்கே இயங்கி வருகிறது. இத்தகைய ஒழுங்குகளை சபை மேற்கொண்டமையால் இங்குள்ள சைவமக்களிடையே சமய ஆர்வம் உண்டாகியிருக்கிறது. கற்பிட்டியில் உள்ள சைவர்கள் மாத்திரமன்றி குறிஞ்சிப்பிட்டி, பள்ளிவாசல்துறை, கந்தக்குழி ஆகிய இடங்களைச் சேர்ந்த சைவ மக்களும் இவ்வாலயத்திற்கு வருகை தந்து உரிய பயனைப்பெற்றுச் செல்கின்றனர். தற்போது சபையில் டாக்டர் செ.சுப்பிரமணியம் அவர்கள் தலைவராகவும் திரு மு.சிவதாசன் ஆசிரியர் அவர்கள் செயலாளராகவும் திரு வி. இரவீந்திரன் அவர்கள் பொருளாளராகவுமிருந்து அளப்பரிய பணிகளை ஆற்றி வருகின்றனர்.

### முந்தல் இந்து இளைஞர் மன்றம்

முந்தல் கிராமத்தில் சைவசமய அபிவிருத்தியை ஏற்படுத்துமுகமாக 1982ம் ஆண்டு மே மாதம் 23ம் நாள் ஆரம்பிக்கப்பட்டதே முந்தல் இந்து இளைஞர் மன்றமாகும். இதன் தலைவராக திரு எம். நாராயணசாமி அவர்களும் செயலாளராக செல்வன் என். தனமோகன் அவர்களும் பொருளாளராக செல்வன் எம். ஆனந்தராஜா அவர்களும் இருந்து கோயில் சீர்திருத்த வேலைகளை மேற்கொண்டும் அறநெறிப்பாடசாலை நடாத்தியும் பலவாறு பணியாற்றி வருகின்றனர்.

### கருங்காலிச்சோலை ஸ்ரீமுருகன்ஆலய பரிபாலன சபை

கருங்காலிச்சோலை எனும் கிராமத்திலே ஒரு முருகன் ஆலயத்தை அமைப்பதும் அப்பிரதேசத்திலே சமய எழுச்சியை உண்டாக்குவதனையும் பிரதான நோக்கங்களாகக் கொண்டு 1977ம் ஆண்டு உருவாக்கப்பட்டதே ஸ்ரீமுருகன் ஆலய பரிபாலன சபையாகும். இதன் தலைவர் இரா அழகிரிசாமி அவர்களாவர். செயலாளர் திரு க. கணேசமூர்த்தி அவர்களாவர். இதன்படி ஆலயம் ஒன்று அமைக்கப்பட்டு 1980ம் ஆண்டு கும்பாபிடேகமும் செய்விக்கப்பட்டது.

இவ்வாலயத்திலே சிவராத்திரி விழா, கந்தசஷ்டி, நவராத்திரி, அலங்காரத் திருவிழா என்பன வற்றை மேற்படி சபையே முன்னின்று செய்வித்து வருகிறது. அத்துடன் இவ்வாலயத்தில் ஒவ்வொரு வெள்ளி தோறும் சமய சொறபொழிவுகளை ஆற்றுவித்து சமய வளர்ச்சியை ஏற்படுத்தி வருகிறது. அறநெறிப்பாடசாலை, பாலர் பாடசாலை (யுனிசெவ் உதவியுடன்) என்பனவற்றை உருவாக்கியும் வருடம் ஒரு தடவை கிராம மட்டத்தில் சமய பாடப் பரீட்சைகளை வைத்து சான்றிதழ்களையும் பரிசில்களையும் வழங்கிப்பணியாற்றி வருவது பாராட்டப்படவேண்டியது.

### குசலை ஆலய பரிபாலன சபை

குசலை மாரியம்மன் ஆலயம் கருக்குப்பனை ஐயனார் ஆலயம் இரண்டினதும் நித்திய நைமித்திய கிரியைகளைச் செய்விப்பது குசலை ஆலய பரிபாலன சபையின் நோக்கமாகும். 1980ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இச்சபையின் தலைவராக திரு கே. விஜயநாதன் அவர்களும் செயலாளராக திரு வி. இரா இலட்சுமணன் அவர்களும் பொருளாளராக திரு வி.தில்லையம்பலம் அவர்களுமிருந்து அரும்பணியாற்றி வருகின்றனர்.

### சிலாபம் நகர சங்கங்கள்

சிலாபம் நகரிலே சைவ மகாசபை, இந்து இளைஞர் சங்கம், சைவ முன்னேற்ற சங்கம் என்பன அப்பிரதேசத்திலே சைவ சமயம் தழைத்தோங்கக் காரணமாக இருக்கின்றன.

சிலாபம் சைவ மகாசபை 1952ம் ஆண்டு நீதவான் திரு சிவா செல்லையா, டாக்டர் இராசரத்தினம் ஆகியோரால் உருவாக்கப்பட்டதாகும்.

சிலாபம் இந்து இளைஞர் சங்கம், 1935ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இதன் தாபகர் சுப. நடராஜபிள்ளை அவர்களாவர்.

சிலாபம் சைவ முன்னேற்றச்சங்கம் 1994ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இதன் தலைவர் திரு இராஜகுரு சேனாதிபதி கனகரத்தினம் அவர்களாவர். செயலாளர் திரு பழனிவேல் அவர்களாவர். இச் சங்கத்தினர் சங்குத்தட்டான் என்ற இடத்தில் அறநெறிப்பாடசாலையொன் றையும் பாலர் பாடசாலையினையும் ஆரம்பித்து நடத்தி வருவது குறிப்பிட த்தக்கதாகும்.

பொதுவாக புத்தளம் மாவட்டத்தில் சைவப்பாடசாலைகள் மூலம் சமய அறிவு விருத்தி முன்னருள்ள காலங்களை விட முன்னேற்றகரமாக இருந்தாலும் சில பாடசாலைகளில் ஒழுங்கான முறையில் சமய பாடம் போதிக்கப்படுவதுமில்லை; மேலதிக செயற்பாடுகள் எதுவும் இடம் பெறுவ துமில்லை. ஊர்கள் தோறும் வாழும் சமய ஞானம் மிக்க முதியோர்களும் சமய சமூக சேவைகளிலிருந்து ஒதுங்கி ஆலய வழிபாட்டுடன் மட்டும் தமது வாழ்வை முடக்கிக் கொள்கின்றனர். சங்கங்களைப் பொறுத்த வரையிலும் குறிப்பிட்ட சில சங்க ங்கள் நீண்டகாலமாக நிர்வாக மாற்ற மெதுவு மின்றியும் எந்தவித செயற்பாடு களுமின்றி பெயரளவில் மாத்திரமே உள்ளன. உண்மையாக இவ்வாறான தன்மைகளில் மாற்றம் வர வேண்டும்.

இளைஞர்கள் மத்தியில் தமது சமுதாயத்திற்கு ஏதாவது பயனுள்ள வற்றைச் செய்ய வேண்டுமென்ற சிந்தனை யுருவாகி அவர்கள் செயற்பட்டு வருவது வரவேற்கத்தக்கது. அத்தகையோர் தமது பிரதேசத்திலோ அன்றேல் பிற பகுதிகளிலோ உள்ள பெரியார்களைத் துணைக் கொள்வது சிறந்தது. அத்தோடு ஒவ்வொரு இடங்களிலும் உள்ள ஆலய பரிபாலன சபைகள், சங்கங்கள், மன்றங்கள் என்பன அயலூர்களில் உள்ளவற்றோடு உறவுகளை ஏற்படுத்தி பரஸ்பரம் உதவி செய்து வாழப்பழகிக் கொள்ள வேண்டும். அது மேலும் முன்னேற வழிவகுக்கும்.


### நன்றி:

*மேற்படி தலைப்பிலான கட்டுரையினை யான் புத்தளம் மாவட்டத்தில் வாழும் தொடர்புடைய பலரைக்கண்டு உரையாடிப்பெற்ற தகவல்களைக் கொண்டே எழுதியிருக்கின்றேன். திரு வீ.நடராஜா (அதிபர், இந்து த.ம.வி புத்தளம்) திரு பெ.சோமாஸ்கந்தர் (இளைப்பாறிய அதிபர் உடப்பு) திரு பெ.சண்முகநாதன் (அதிபர் அரசினர் த.வி. ஆண்டிமுனை), திரு எம்.நாராயணசாமி (அதிபர், தமிழ் வித்தியாலயம் கருங்காலிச் சோலை), திரு இரா அழகிரிசாமி (கிராமசேவக அலுவர் கருங்காலிச் சோலை), திரு எஸ். ஜே. செம்பலிங்கம் (உடப்பு), திரு கா. வீரசொக்கன் (உடப்பு), திரு இ. செல்லத்துரை (இளைப்பாறிய ஆசிரியர் குசலை), திரு க. கனகசபை (அபிவிருத்தி உத்தியோகத்தர் முந்தல் அ.உ.கா), திரு கே. விஜயநாதன் (குசலை) , செல்வன் க. சந்திரமோகன் (முந்தல்.) திருமதி சந்திராவதி ஐயாசாமி (அதிபர் சைவப்பிரகாச அரசினர் த.வி .மருதங்குளம்), ஆர். ராஜீவி (ஆசிரியை, வடிவாம்பிகை த.வி. முன்னேஸ்வரம்), திரு ஏ.என். இராஜகோபால் (வரைவல்லாளர், பிரதேச பொறியியல் அலுவலகம் புத்தளம்) திரு ஸ்ரீ ராகவன் (நீர்ப்பாசனத் திணைக்களம், புத்தளம்), திரு மு.நடராஜ தேவர் (புத்தளம்) திரு வீ. சண்முகவேல் (ஆசிரியர் புத்தளம்) செல்வன் ந. பத்மானந்தன் (பேராதனை ப்பல்கலைக் கழகம்), ஆ.தினேஷ்குமார் (முந்தல்), திரு வி.ரவீந்திரன் (கற்பிட்டி) ஆகியோர் இந்த வகையில் உதவியோராவர். இவர்கள் அனைவரு க்கும் எனது மனமுவந்த நன்றிகள். இவர்களிற் பெரும்பாலானோரிடம் என்னை அழைத்துச்சென்று அறிமுகப் படுத்தி வைத்தவர் எனது மதிப்புக்குரிய ஆசிரியர் திரு க. பசுபதிப்பிள்ளை அவர்கள் (அதிபர் த.வி. நாயக்கர் சேனை) அவருக்கும் எனது இதயபூர்வமான நன்றி உரித்தாகுக. யான் அவசரமாக இருந்து எழுதிய கட்டுரையினை நீண்ட நேரமாக இருந்து அழகுறப்பிரதி செய்து தந்த எனது மாணவி செல்வி காயத்திரி இராஜகோபால் அவர்களுக்கும் எனது நன்றிகள்.*


### உசாத்துணை நூல்கள்



வீர சொக்கன், காலவைரவன் (1989) உடப்பு ஸ்ரீ திரௌபதை அம்மன் ஆலய வரலாற்று நூல், இளம் தாரகை வட்ட வெளியீடு, உடப்பு

ஷாஜஹான், எ.என். எம். (1992) புத்தளம் வரலாறும் மரபுகளும், கொழும்பு

புத்தளம் இந்து மகாசபை (1961 – 1977) பதினைந்தாவது ஆண்டு நிறைவு விழா மலர்

புத்தொளி, சர்வமத சஞ்சிகை, 12.08.1992

අයියනායක දේවස්ථානයේ උත්සවය සාර්ථකව
පැවැත්වීමට අපෙන් උණුසුම් සුභ පැතුම්



ඔබට අවශ්‍ය
ග්‍රිල් ගේට්ටු අකුළන දොරවල් සහ
සියලුම යකඩ වැඩ සඳහා

**සිරි අයන් වර්ක්ස්**

කරඹ - පාලවිය

**SIRI IRON WORKS**

**KARAMBE**

**PALAVI**

கும்பாபிஷேகம் சிறப்பாய் அமைவதாக

தரமான தங்கத்தில் நாகரீக டிசைன்களில்
கண்கவர் நகைகளை பெற்றுக் கொள்ள
நம்பிக்கை வாய்ந்த ஸ்தாபனம்

ஸ்ரீ அம்பிகா ஜுவலரி

ශ්‍රී අම්බිගා
ජුවලරි

**SRI AMBIGA JEWELLERY**
AND
**PAWN BROKERS**

15, MAIN STREET,
PUTTALAM

# வடமேல் மாகாணத்தில் தோன்றிய சைவ நூல்கள்

**தில்லையடிச்செல்வன்**

'கலிங்கத்து இராசகுமாரனாகிய விஜயன் இலங்கைக்கு வருவதற்கு வெகு காலத்துக்கு முன்னரே (கி. மு 6ஆம் நூற்றாண்டுக்கு முன்) இலங்கையில் கருத்திற் கொள்ளத்தக்கனவும், முழு இந்தியாவின் வழிபாட்டுக்குரியனவாகவும் விளங்கிய ஐந்து சிவாலயங்களில் ஒன்று, முத்து சிலாபத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த முன்னேஸ்வரம்' (NAGADEEPA AND BUDDHISTS REMAINS (1917) BY P.E. PERIES) என்ற குறிப்பின் மூலம், திருமூலர் நாயனார், ஈழத்திரு நாட்டை சிவபூமியாக கண்டு, பூஜித்தமைக்கு முன்னேஸ்வரமும் காரணமென்பதில் ஐயமில்லையல்லவா!

இத்தகைய மகிமைமிகு சிவாலயம் வடமேல் மாகாணத்தில் அமைந்து, அருள்பாலிப்பது இம் மாகாண இந்துப்பெருமக்களின் பெரும்பேறாகும்.

தேவர்களாலும், மன்னர்களாலும் ஆகர்சிக்கப்பட்டு, பரிபாலிக்கப்பட்ட இவ்வாலயத்தின் தொன்மை, சிறப்புகளை, ஆலய கல்வெட்டுகளும், செப்பு பட்டோலைகளும், ஏட்டுச் சுவடிகளுந்தான் நீண்ட சகாப்தங்களாக இயம்பிக் கொண்டிருந்தன.

